


30 ஆவது ஆண்டில்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
# விளம்பரம்
VLAMBARAM™
Tel: 416-282-8059
email: vlambaram@sympatico.ca
www.vlambaram.com
www.tamilvanakkam.com




நதி: 30 பாலம்: 03 சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம் FEBRUARY 01, 2020

# கனடாவின் பொது சுகாதார சேவை தயார் நிலையில்

கனடாவின் முதல் கொரோனா வைரஸ் ஆல் பாதிக்கப்பட்டவர் ரொறொன்ரோவில் உத்தேசமாக உறுதி செய்யப்பட்டவுடன் (Presumptive confirmed) 2020 ஜனவரி 25இல் ஏற்பாடு செய்யப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பில் தகவல் வழங்கிய ஒன்ராறியோ மாகாண தலைமை சுகாதார அதிகாரி, வைத்தியர் டேவிட் வில்லியம், "ஒன்ராறியோவில் பொது சுகாதார சேவை எதற்கும் தயார் நிலையில் உள்ளது. ஒன்ராறியோ மக்கள் பீதியடையத் (Panic) தேவையில்லை. கொரோனா வைரஸ் ஒன்ராறியோவில் பரவுவதற்கான சாத்தியக் கூறுகள் மிகவும் குறைவாகவே உள்ளது" என்றார்.

50 வயது ஆண் ஒருவர் சீனாவில் உள்ள கொரோனா வைரஸ் ஆல் அதிகம் பாதிக்கப்பட்ட வுஹான் (Wuhan) நகரில் இருந்து கங்ஞ்ஜோ (Guangzhou) நகரினூடாக சீனாவின் தென் பிராந்திய விமான சேவைக்குச் சொந்தமான CZ311 விமானத்தில் 2020 ஜனவரி 22இல் ரொறொன்ரோவின் பியர்சன் சர்வதேச விமான நிலையத்தில் வந்திறங்கினார். அவர் மறுநாள் தனது வீட்டில் இருந்து 911 அவசர அழைப்பிற்கு அழைத்துத் தனக்கு காய்ச்சல், உலர் இருமல் (Dry cough) மற்றும் தசை வலிகள் இருப்பதாகவும் தான் சீனாவில் உள்ள வுஹான் பிரதேசத்தில் இருந்து முதல் நாள்தான் கனடாவுக்கு வந்ததாகவும் கூறினார்.


Press conference at Queen's Park on January 26, 2020 Ontario Health Minister Christine Elliott

ஏற்கனவே தயார் நிலையில் இருந்த சுகாதார சேவை அதிகாரிகள் நோயாளியின் பயண வரலாற்றை அறிந்தவுடன் வைரஸ் பரவாமல் தடுக்கக் கூடிய அனைத்து முன்னெச்சரிக்கையுடன் சென்று அவரை அம்புலன்ஸ் வாகனத்தில் அழைத்து வந்து ரொறொன்ரோ Sunnybrook வைத்தியசாலையில் அனுமதித்தனர். அங்கு அவர் தனிமைப்படுத்தப்பட்ட அறையில் வைத்துப் பராமரிக்கப்பட்டு வருகிறார். இந்த அறையில் இருந்து காற்று வெளியேறாதவாறு எதிர்மறை அழுத்தத்தில் அறை எப்போதும் வைக்கப்பட்டிருக்கிறது.

கனேடிய மத்திய அரசின் சுகாதார சேவை அமைச்சர் Patty Hajdu அவர்களுடன் கனேடியத் தலைமைப் பொது சுகாதார அதிகாரி, வைத்தியர் Theresa Tamஉம் சேர்ந்து 2020 ஜனவரி 26இல் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் நாடு முழுவதிலிருந்தும் ஊடகவியலாளர் நேரடியாகவும் தொலைபேசியூடாகவும் கலந்து கொண்டனர்.

அங்கு தகவல் வழங்கிய கனேடியத் தலைமைப் பொது சுகாதார அதிகாரி, Sunnybrook வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நோயாளிக்கு விமானப் பயணத்தின் போதே நோயின் அறிகுறிகள் இருந்தபடியால் விமானத்தில் அவரது இருக்கைக்கு 2 மீற்றர் தூரத்தை சுற்றி இருந்த ஏனைய விமானப் பயணிகளை சுகாதார சேவை நேரடியாகத் தொடர்பு கொண்டுள்ளது என்றார். அவருடன் பிரயாணம் செய்த ஏனைய விமானப் பயணிகள் இது தொடர்

(தொடர்ச்சி 10ஆம் பக்கம்...)


































EXPERIENCE THE DIFFERENCE
RE/MAX ACE
REALTY INC., BROKERAGE
1286 Kennedy Rd Scarborough Ont M1P 2L5
Thas Thirunavukkarasu Dip-in- Eng(Hons)
Sales Representative
416.388.4333
thasremax@gmail.com www.soldbythas.com
Neilson / Sheppard - Toronto
$360,000
Condo Apt. - 3BR + 1WR
Midland/Lawrence - Toronto
$399,900
Condo Apt. - 2BR + 1WR
9th Line / Hwy 7 - Markham
$524,999
Townhouse - 2BR + 2WR
Hwy 7/ Pine Valley Dr -Vaughan
$528,800
Condo Apt. - 2BR + 1WR
Eglinton & Danforth - Toronto
$539,000
Condo Apt. - 2BR + 1WR
Finch & Birchmount - Toronto
$559,000
2-Storey Townhouse - 3BR + 3WR
Hwy 10/Main St E - Southgate -ON
$564,900
2-Storey - 4BR + 4WR
9th Line/Cornell Park Ave - Mar
$790,000
2-Storey - 4BR + 3WR


New condo VIP PRIORITY ACCESS
BUY & SELL HOMES,BUSINESS,CONDO, LANDS..
Commitment Reliability Professionalism
PAT WILL BEAT any DEAL
VAUGHAN METROPOLITAN CENTRE
MASTER PLANNED TOWERS
NEXT TO SUBWAY
CALL FOR FIRST ACCESS TO GET THE DEAL!!
NEW CONDO OPENING
VVIP PlatinumACCESS
DON'T MISS
Hall of fame
CENTURION AWARDS
Pat Pushpakanthan
BROKER
416 894 1187
Century 21
Off 416 290 1200
VISIT...WWW.PATPUSH.COM
AJAX
$789K
4 BEDROOM, 3 WASHROOM
MARKHAM N 16 TH AVE
$479K
GOSTATION LUXURY
1+1 BEDROOM NEAR GO STATION
Scarborough Elsemere
$878,999
3 bm 3 warm bsmnt sep. entrance
Warden/ellesmere
$699K
3 bedroom
Hwy12 and hwy 169
$120k
Vacant land
7 acre
Near Orilia
BIRCHMOUNT/ELLESMERE
$568K
2 BM 2 WSRM SWIM POOL
RENTAL CORNER
1, 2, BEDROOM CONDO RENTAL FROM $1700.00
HOUSES RENTAL FROM $1900/-
NEW CONDO ASSIGNEMENT SALE AND RESALE CONDO FOR SALE
NEEDED PL CALL ME
416-894-1187
Kings Cres./Harwood Ave.
$819K AJAX
3 BEDROOM, 3 WASHROOM 2 garage
scarborough
$329,999
2 BEDROOM 2 washroom
Kennedy/401
LUXURY
$398,999
1parking
1 locker
BRAND NEW
1 BEDROOM 1 Wm, 1 parking
Oshawa
$699,999
4 bed, 4 washroom



அம்மா

Amma Pawn Broker

தங்க நகை அடைவு மாடம்

கனேடிய அரசின் அங்கீகாரம் பெற்று முழுக் காப்புறுதி
செய்யப்பட்ட முதன்மையான அடைவுச்சேவை



உங்கள் பழைய
நகைகளை அதியுயர்
பெறுமானத்திற்கு எம்மிடம்
விற்றுக்கொள்ளலாம்

1.5% முதல்
2.0%
வட்டி மட்டுமே
(per month)

416-757-0034
416-994-3861

உங்கள் நகைகளுக்கு அதிகூடிய பெறுமதியையும்
மிகக்க குறைந்த வட்டி வீதத்தையும் பெற்றுக்கொள்ள
நகரின் மத்தியில் ஒரே நிறுவனம்

எவ்வளவு தொகையானாலும்
மிகக் குறைந்த வட்டியுடன்
எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்

105A - 2425 Eglinton Ave. E, Scarborough
ammapawnbroker@gmail.com
கடைக்குப் பின்புறத்தில் போதிய வாகனத் தரிப்பிடங்கள் உண்டு
Shankar& Co. வுக்கு அருகாமையில்

நம்பிக்கை | நாணயம் | உத்தரவாதம்



அரிய சந்தர்ப்பத்தைத் தவற விடாதீர்கள்!

முற்றிலும் இலவசமான சேவை!

12வருடத்திற்கு மேற்பட்ட
உங்கள் Gas Furnace இற்கான CO அளவீடு
வீட்டிற்கு வந்து பரிசோதிக்கப்படும்.



AATEK
HEATING & COOLING

$2100 Rebate Available Now
call us 416-414-2280



- FREE Inspection in GTA
- Over 10 yrs in Business Experience
- Flat Rate Pricing
- Parts and Labour guarantee
- Guaranteed Repairs
- Professional Service
- Fully Insured

Gas Furnaces, Air Conditioners,
Thankless Water Heater, Gas line install

10 வருடங்களுக்கு மேலாக ரொரண்டோவின்
முன்னணி நிறுவனங்களில் பணியாற்றிய
அனுபவத்துடன்

Licensed Technician | ELENGO THIYAGARAJAH

ALL MAJOR APPLIANCES E : aatekcanada@gmail.com

We Are Specialists in
customs homes Ductwork System

We Are Professional trouble shooters for all major gas appliances

416.414.2280

# நாமும் நமது இல்லமும் - 551



ராஜா மகேந்திரன், P.Eng.
raja@mahendran.ca
416.315.9397/416.321.6969

கனேடியப் பொருளாதாரத்தில் முக்கிய பங்கு வகிப்பது கனடிய மத்திய வங்கி. இவ்வங்கி ஒவ்வொரு வருடமும் எட்டு (8) தடவை வட்டி வீதத்தைப் பற்றிய தரவு களையும் நிகழ்கால அறிக்கையையும் வெளியிடும். இவ்அறிக்கையின் பிரகாரமே வட்டி வீதத்தின் நிலைமை மாற்றப்படும். கனேடிய தற்காலப் பொருளாதாரப் பெறுமதி, உலகளாவிய பொருளாதார நிலைமை, அரசியல் நிலைமை, ஏனைய நிலைப்பாடு உதாரணமாக 'கொரோனா' வைரஸ் இவற்றினை அடிப்படையாகக் கொண்டே வட்டி வீதம் நிர்ணயிக்கக்கூடும். ஆதன வியாபாரத்திற்கும் கனேடியப் பொருளாதாரத்திற்கும் வட்டி வீதம் முக்கியமானதாகும்.

கடந்த பதினாறு (16) மாதங்களாகக் கனேடிய மத்திய வங்கி வட்டி வீதத்தில் எதுவித மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை. கனேடிய வட்டிவீதம் 1.75% ஆகவே (மாறாமல்) காணப்படுகின்றது.

2020இன் ஆரம்பத்தில் ஐக்கிய அமெரிக்கா, ஈரான் போன்ற நாடுகளுக்கு இடையே ஏற்பட்ட முறுகல் நிலை, அதனால் ஏற்பட்ட போர் மேகங்கள் சிறிது சிறிதாக அகலும் வேளையில் சீனாவில் புதிதாகத் தோன்றியிருக்கும் கொரோனா வைரஸ், புதுவிதமான பொருளாதார நெருக்கடியை உலகளாவிய நிலையில் ஏற்படுத்தக் கூடிய சந்தர்ப்பங்களே அதிகமாகக் காணப்படுகின்றது. இதன் உண்மையான நிலைப்பாடு சிறிது காலத்திலேயே தெரியவரும். சில வருடங்களுக்கு முன்பாக (2002/2003) ஏற்பட்ட சார்ஸ் 'SARS' என்ற வைரசும் உலகளாவிய பொருளாதாரத்தை நெருக்கடியில் தள்ளியிருந்தது. அன்றைய நிலமையைவிட இன்று Social Meadia இன் தாக்கம் அதிகமாகக் காணப்படுகின்றது.

இந்தப் புதியவகை வைரஸ் 'கொரோனா' (Corona) என அழைக்கப்படுகின்றது. இது மனிதரிலிருந்து மனிதருக்குப் பரவக் கூடியதாக இருக்கும் எனத் தெரிய வருகின்றது.

சீனப் புதுவருடம் ஜனவரி மாதம் 25ஆம் திகதி தொடங்கியது. பொதுவான இக் காலங்களில் பிரயாணங்கள் அதிகமாகவே காணப்படும். ஆனால் இவ்வருடம் 'கொரோனா' வைரஸ் காரணமாக மிகக் குறைவாகவே இருக்கிறது. இதனால் பொருளாதாரப் பாதிப்பும் ஆரம்பித்து உள்ளது. இதனாலும், கனேடிய மத்திய வங்கியின் ஆளுனர் திரு. ஸ்ரீவன் போல்ஸ் (Steven Poloz) எதிர்கால வட்டி வீத இறக்கம் இருக்கலாம் என்பதனை நாசுக்காகக் கூறியுள்ளார். மத்திய வங்கியின் ஆளுனரும் அவர்களின் சகாக்களும் அடுத்த சந்திப்பு மார்ச் 04, 2020 ஆகும். எனினும் எதிர்கால நிகழ்வுகளை கொண்டே வட்டிவீத மாற்றம் அறிவிக்கப்படும். கனேடிய இந்த வருட பொருளாதார வளர்ச்சி 1.6%-1.7%இல் இருக்கலாம் எனவும் அடுத்த வருடம் 2% காணப்படலாம் எனவும் தெரியப்படுத்தப் பட்டுள்ளது. இது எவ்வாறு மாறும் என்பது வைரசின் பாதிப்பிரும் மற்றைய அரசியல் மாற்றங்களிலுமே தங்கியுள்ளது.



எனினும் Stress test என அழைக்கப்படும் அடமானக்கடன் பெறுவதில் ஏற்படுத்தப் பட்ட இறுக்கமான நிலை, அடமானக்கடன் பெறுவதில் இறுக்கத்தை ஏற்படுத்திய தனை வாசகர்கள் அறிந்ததே. எனினும் இதுவரை வெளிநாட்டவர்களின் முதலீடு குறிப்பாக சீன மக்களின் முதலீடு ஆதன வியாபாரத்தைக் குறிப்பாகப் புதிதாக நிர்மாணம் செய்யப்பட இருக்கும் அடுக்கு மாடி மனைகளில் வியாபாரத்தில் பெரிதளவான பாதிப்பை ஏற்படுத்தவில்லை என்றே தெரிய வருகின்றது. இருப்பினும் இன்றைய வைரசின் பாதிப்பால் உலகளாவிய பிரயாணம் குறிப்பாக சீனர்களின் வருகை அதிகளவில் குறைந்துள்ளது.

புதிய மனை கட்டுவோரும் விலையை

(தொடர்ச்சி 16ஆம் பக்கம்...)






# MORTGAGE

**MORTGAGE IN ANY SITUATION**

- ⇒ நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)
- ⇒ லைன் ஒப் கிரெடிட் (HELOC)
- ⇒ ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்
- ⇒ Private 1st Mortgage (No Income Verification)
- ⇒ 2வது, 3வது மோட்கேஜ் (Funded within 48hrs)
- ⇒ பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கான மோர்ட்கேஜ்
- ⇒ எல்லா கடனையும் ஒரே பேமெண்டாக்க
- ⇒ பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட

கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?

MORTGAGE CLINIC



Cell : 416-624- 4843



www.mortgageclinicanada.com

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது

416-613-2788 / 416-816-9011

ஜெ (Jey) இராசதுரை

MBA. BBA (Hon) AMP

Team Leader/Mortgage & Real Estate Broker

RIGHT AT HOME REALTY INC.

எமது முகவரி
1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)

MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE
Lic # 10530

Brokerage: 112-895 Don Mills Rd, Toronto ON M3C 1W3 Corp office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto ON M2J 5B4

# யாழ். சர்வதேச வர்த்தக கண்காட்சி - 2020




**- ஆதித்தன் -**

யாழ்ப்பாண சர்வதேச வர்த்தக கண்காட்சி யாழ். நகரில் அமைந்துள்ள முற்றவெளி மைதானத்தில் கடந்த 24ஆம் திகதி ஆரம்பமாகி 26ஆம் திகதி வரை நடைபெற்றது.

யாழ். வர்த்தக கைத்தொழில்துறை மன்றத்தின் ஏற்பாட்டில் வருடா வருடம் நடைபெற்றுவரும் இந்த வர்த்தகக் கண்காட்சி கடந்த வருடங்கள் நடைபெற்ற கண்காட்சிகளுடன் ஒப்பிடுகையில் தரமானதாக இல்லை என்பது பலரதும் கருத்தாகவுள்ளது. கடந்த 25ஆம் திகதி அந்தக் கண்காட்சியை பார்வையிடச் சென்றிருந்தேன். கண்காட்சி தொடர்பில் ஓர் ஏமாற்ற உணர்வே மனதில் ஏற்பட்டது.

கண்காட்சி நடைபெறும் இடத்தை நோக்கி சென்றுகொண்டிருந்தபோது, ஒலிபெருக்கியில் பிரியாணி பற்றிய விளம்பரம் ஒன்று ஒலித்துக் கொண்டிருந்தது. குறித்த பிரியாணியை எங்கே, எப்படி வாங்கலாம் என்பது குறித்து நீண்ட நேரம் விளம்பரப் படுத்தப்பட்டுக் கொண்டிருந்தது. மாறாக, கண்காட்சி பற்றியோ, கண்காட்சியில் உள்ள விடயங்கள் பற்றியோ எவ்விதமான வழிகாட்டல் குறிப்புகளும் ஒலிபெருக்கி மூலம் சொல்லப்படவில்லை. இதுவே கண்காட்சிக் கூடத்திற்குள் செல்வதற்கு முன்னதாக ஏற்பட்ட ஏமாற்றமாக இருந்தது.

கண்காட்சியை பார்வையிட வருபவர் ஒருவருக்கு 50 ரூபா வீதம் கட்டணம் அறவிடப்பட்டது. கண்காட்சியில் என்னவெல்லாம் இருந்தது என்பதை பார்க்கும்போது மேலும் ஏமாற்றமே ஏற்பட்டது. “நல்லூர் திருவிழாவில் போடப்படும் கடைகள் மாதிரி இருக்கின்றது” என்றார் கண்காட்சியை பார்வையிட்ட ஒருவர். உண்மையில் அவர் கூறியது சரியானதாகவே இருந்தது. துணிக் கடைகள், ‘பான்ஸி’ கடைகள், ‘ஹர்வெயர்’ கடைகள், மிட்டாய் கடைகள் எனப் பல கடைகள் வர்த்தகக் கண்காட்சியை நிரப்பியிருந்தன.

ஒரு கண்காட்சி என்பது மக்களுக்கு விழிப்பூட்டுகின்ற வகையில் ஏற்பாடு செய்யப்பட வேண்டும். கண்காட்சியை பார்வையிடுகின்ற மக்கள் புதிய விடயங்களை அறிந்துகொள்ளக் கூடியதாக இருக்க வேண்டும்.

கண்காட்சிக் கூடத்திற்குள் ஒருசில காட்சிக் கூடங்களில் மட்டும் அது காணப்பட்டது. குறிப்பாக ஏற்றுமதி தொடர்பான



விளக்கத்தை வழங்கும் ஓர் இடம் இருந்தது. அங்கு அது தொடர்பான விளக்கங்கள் வழங்கப்பட்டன. ஒருவர் வெளிநாட்டிற்குத் தனது தயாரிப்புப் பொருட்களை ஏற்றுமதி செய்வது கடினமான விடயமல்ல. அதற்கு கோடிக் கணக்கிலோ, இலட்சக் கணக்கிலோ பணம் தேவையென்பதுமில்லை. சில ஆயிரங்களிலிருந்தே அந்தத் தொழிலை தொடங்க முடியும். அதற்கான விளக்கங்கள் அந்தக் கூடாரத்தில் வழங்கப்பட்டது.

அது பிரயோசனமானதாக இருந்த போதிலும் முழுமையான விளக்கங்களைப் பெற முடியாத நிலையும் அங்கு காணப்பட்டது. விளக்கத்தை வழங்கிய வருக்குத் தமிழ் தெரியாது. மக்கள் அவரிடம் கேள்விகளைக் கேட்டு விளக்கத்தைப் பெறமுடியாத நிலைமை இருந்தது. அருகிலிருந்த சில இளைஞர், யுவதிகளால் சரியான விளக்கத்தை வழங்க முடியவில்லை. சில விளக்கப் பிரசுரங்களை வழங்கினர். அவை முழுவதுமாக ஆங்கிலத்திலேயே காணப்பட்டன. இதுவும் ஒரு குறைபாடாகவே இருந்தது.

‘எங்கட புத்தகங்கள்’ என்ற தலைப்பில் உள்ளூர் எழுத்தாளர்களின் புத்தகங்கள் ஓரிடத்தில் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. இந்தக் காட்சிக் கூடம் யாழ்.வர்த்தக கண்காட்சியில் இடம்பெறுவது குறித்து கண்காட்சி ஆரம்பமாவதற்கு முன்னதாகவே பலரின் முகநூல்களிலும், இணையத் தளங்கள் முதலான ஊடகங்களிலும் விளம்பரப்படுத்தப்பட்டிருந்தன. ஒரு சிறிய இடத்தில் அது காட்சிப்படுத்தப்பட்டிருந்த தால் புத்தகங்களை அருகில் சென்று பார்வையிட முடியாத நிலை காணப்பட்டது. சரியான ஒழுங்குபடுத்தல் இல்லை.

போர் நடைபெற்ற காலங்களில் வெளியான அளவு உள்நாட்டு எழுத்தாளர்களின் படைப்புக்கள் கடந்த பத்து வருடங்களாக வெளிவரவில்லை. வெளிவந்த நூல்கள் தொடர்பாகவும் பரவலான கவனயீர்ப்பு வாசகர்களுக்கு கிடைக்கப்பெறவில்லை. மூத்த எழுத்தாளர்கள் பலர் எழுதுவதை நிறுத்தி விட்டனர். இன்று புலம்பெயர் நாடுகளிலுள்ள எழுத்தாளர்களே அதிகம் எழுதுகின்றனர். இந்த சந்தர்ப்பத்தில் உள்ளூர் எழுத்தாளர்களின் நூல்களை ஓரிடத்தில் பார்வையிடக் கூடியதாகக் காட்சிப்படுத்தப்படுதல் அவசியமானதே. சரியான ஒழுங்கமைப்பில் அது மேற்கொள்ளப்பட வேண்டும்.

நூல்களை எழுதிய படைப்பாளிகள் சிலரையேனும் அங்கு வரவழைத்து அவர்களோடு வாசகர்கள் கலந்துரையாடக் கூடிய ஒழுங்கையும் மேற்கொண்டிருந்தால் சிறப்பாக இருந்திருக்கும். ஆனால், ‘எங்கட புத்தகங்கள்’ காட்சிக் கூடமும் ஒரு சிறிய புத்தகக் கடை போலவே அமைக்கப்பட்டிருந்தது. எனினும், அங்கு காட்சிப் படுத்தப்பட்டிருந்த உள்ளூர் எழுத்தாளர்களின் புத்தகங்கள் பலவற்றை பலர் வாங்கிச் சென்றதாக அங்கிருந்த ஒருவர் தெரிவித்தார். அந்தளவில் மகிழ்ச்சி அடையலாம்.

இவ்வாறான கண்காட்சிகளை ஏற்பாடு செய்வோர் சரியான முறையில் அவற்றை திட்டமிட வேண்டும். இந்தக் கண்காட்சிகளின் நோக்கம் குறித்து முதலில் திட்டமிட வேண்டும். ஏதோ ஒவ்வொரு வருடமும் செய்து முடித்தோம் என்கின்ற நிலையில், ஒரு சடங்குபோல் இவ்வாறான கண்காட்சிகள் அமையக் கூடாது.

புதிதாக ஒரு தொழில்முயற்சியை தொடங்குவதற்கான உந்துதலை ஏற்படுத்தி, ஒன்றைத் திட்டமிடுவதற்கான வழிகாட்டலை மக்களுக்கு வழங்கக்கூடியதாக இந்தக் கண்காட்சி ஒழுங்கமைக்கப் பட்டிருக்க வேண்டும். உள்ளூர் உற்பத்தி, விவசாயம், உள்ளூர் மூலிகைகள் தொடர்பான விளக்கங்கள் தெளிவூட்டல் போன்றவற்றை மக்களுக்கு வழங்கும் விதமாக இவ்வாறான வர்த்தக கட்காட்சிகள் அமைவதே சிறந்தது. கடந்த வருடங்களில் நடத்தப்பட்ட வர்த்தகக் கண்காட்சிகளில் இவை ஓரளவிற்காவது காணப்பட்டது. இம்முறை வெறும் விற்பனைக் கூடங்களாகவே கண்காட்சி அமைந்திருந்தது.

இன்னொரு விடயத்தையும் இங்கு குறிப்பிட வேண்டும். யாழ். சர்வதேச வர்த்தக கண்காட்சி என்று குறிப்பிடப்பட்டாலும், யாழ். சர்வதேச வர்த்தகச் சந்தை என்றே கண்காட்சி நுழைவாயிலில் எழுதப்பட்டு இருந்தது. சந்தை என்று பார்த்தால் உள்ளே காணப்பட்ட கடைகள் பொருத்தம் தான். ஆனால் சர்வதேசம் என்ற வார்த்தைக்கு அது பொருத்தமானதாக இல்லை.



அடுத்துவரும் ஆண்டுகளில் யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கும் வர்த்தக கண்காட்சிகள் மக்களுக்கு பிரயோசனமான முறையில், திட்டமிடப்பட்டு நடத்தப்படுவதாக அமைய வேண்டும். சர்வதேச வர்த்தக கண்காட்சி என்பதன் அர்த்தம் உணரப்பட வேண்டும் என்பதே மக்களின் விருப்பமும், எதிர்பார்ப்புமாகும்.

CEDARGREEN COIN LAUNDRY & DRY CLEAN DEPOT
“ VERY CLEAN LAUNDRY” Avoid The Rush ..... Come during weekdays!



• Large laundry Folding Tables, Lots of Space • We offer wash, Dry & fold at .99Cents /lb
Commercial
. We Clean Commercial Linens, Aprons, & Towels • We Clean Uniforms Dry Clean or Wash & Dry
. We Clean Towels/Sheets from Daycare, Clinics, Hair Saloon, Nail Spa, Restaurants etc
STORE Tel: 416-289-7514
OPEN DAILY 8 am – 11 pm
Sat. & Sun 7 Am – 11 pm
(Near Bellamy & Lawrence – find us in GOOGLE !!) 3340 Lawrence Ave. East, Unit 5, Scarborough, ON M1H 1A7

# கனடாவின் பழங்குடியினரும் ஈழத்தமிழரும் - 66



குரு அரவிந்தன்

இலங்கையின் தெற்குப் பகுதியில் இருக்கும் கதிர்காமத்தில் இருந்த இராம கிருஷ்ண மடத்தைத் திடீரென அகற்றி தமிழர் அங்குசென்று தங்காமல் தடுத்தது இந்தத் தலைமுறையைச் சேர்ந்தோருக்கு ஞாபகம் இருக்கலாம். சுவாமி விவேகானந்தர் பற்றி அறியாதோர் இருக்க மாட்டார்கள் என்றே நினைக்கின்றேன். இவர் இலங்கைக்கு மூன்று தடவை வந்திருந்தார். இந்து சமயத்தில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தியவர் என்றால் அது மிகையாகாது. இந்து சமய தத்துவங்களுக்கு ஆதாரபூர்வமான அறிவியல்



சார்ந்த விளக்கங்களைத் தந்தவர் என்ற வகையில் அவர்மீது எனக்கு மதிப்புண்டு. இந்து மதத்தைப் புரிந் கொள்ள முடியாதோருக்கு, ஆதாரபூர்வமான விளக்கங்கள் மூலம் நம்பிக்கையை ஏற்படுத்தியோரில் அவரும் ஒருவர். கதிர்காமத்திற்குப் பல பகுதிகளில் இருந்தும் செல்லும் பக்தர்களின் குறைகளை நிவர்த்தி செய்யும் வகையில் அங்கு ஒரு மடத்தை ஆரம்பித்து வைத்த பெருமை இவருக்கு உண்டு. தனது குருவான இராமகிருஷ்ணரின் நினைவாகக் கதிர்காமத்தில் பக்தர்கள் தங்கி வழிபடுவதற்காக ஒரு மடத்தை இவர் ஆரம்பித்து வைத்திருந்தார். 15-01-1897 அன்றுதான் இவரால் இந்த மடம் திறந்து வைக்கப்பட்டது.

இலங்கையின் தென் பகுதியில் உள்ள கதிர்காமம் கந்தன் ஆலயம் அம்பாந்தோட்டையில் இருந்து 28 மைல்களுக்கு அப்பால் இருக்கின்றது. வடபகுதியில் பொருளாதார வசதி இல்லாதோர் கூட குடும்பங்களாகத் தொடர்வண்டியில் மாத்தறைவரை சென்று அங்கிருந்து பேருந்து எடுத்துக் கதிர்காமம் செல்வர், இல்லாவிட்டால் சிலர் அங்கு இறங்கி திஸ்சமகரம வரை பேருந்தில் சென்று அதன்பின் அங்கிருந்து பத்து மைல் தூரம்வரை மாட்டு வண்டிலில் கோயிலுக்குச் செல்வர். பெண்களையும் குழந்தைகளையும் வண்டியில் ஏற்றிவிட்டு ஆண்கள் பின்னால் நடந்து சென்றதாகவும் சிலர் தங்கள் பழைய நினைவுகளை மீட்டுச் சொன்னார்கள்.

கதிர்காமத்திற்கு நடைப்பயணம் மேற்கொள்ள விரும்புவோர் செல்லச்சந்நிதியில் ஆரம்பித்து வன்னிக்கு வந்து அங்கிருந்து கிழக்கு மாகாணத்திற்குச் சென்று காட்டுப் பாதைவழியாக மாதக் கணக்காக நடந்து பல இன்னல்களுக்கு மத்தியில் கதிர்காமத்தை அடைவர். சில சமயங்களில் ஒன்று இரண்டு வண்டில்களும் இவர்களுடன் பயணிக்கும். பொருட்களைக் கொண்டு செல்லவும், திடீரென நடக்க முடியாமல் கஷ்டப்படுவோரையும் இதில் ஏற்றி இறக்குவர். மழை, வெய்யில், நுளம்புக்கடி, யானைகள், சிறுத்தைகள், பாம்புகள் என்று இவற்றை எல்லாம் கடந்து செல்ல வேண்டும். காட்டுப்பாதையில் இருட்டுக்குள் அடுப்பு மூட்டும்போது கருங்கல் என்று நினைத்து அதற்கு அருகே இன்னும் இரண்டு கல்லை வைத்து அடுப்பு மூட்டியதாகவும், பெரிய கல் சற்று நேரத்தில் நகர்ந்தபோது பந்தத்தைப் பிடித்துப் பார்த்தால் அது கல்லல்ல சுருண்டு கிடந்த மலைப்பாம்பு என்று தெரிய வந்ததாகவும், பாதயாத்திரை சென்றோரில் ஒருவர் சொன்னதாகவும் ஊருக்குள் கதைப்பர். சின்ன வயதில் கதை கேட்பதில் ஆர்வம் இருந்ததால் சொல்வது எல்லாவற்றையும் கேட்போம்.

காலாகாலமாய் இந்தப் பாதயாத்திரை நடந்து கொண்டே இருக்கின்றது. சுற்றுலாப் பயணிகள் போல இவர்களால் அங்குள்ளோருக்குக் குறிப்பாக வியாபாரிகளுக்கு நல்ல வருமானம் கிடைத்தது. இந்த இராமகிருஷ்ண மடம் ஆரம்பிக்கப்பட்டதால் யாத்திரிகர்களான இவர்கள் தங்குவதற்கும், உணவு கொள்வதற்கும் வசதிகள் கிடைத்தன. திருவிழாக் காலங்களில் இனமத வேறுபாடின்றிப் பெரிய அளவில் அன்னதானமும் அங்கு நடைபெற்றது. கதிர்காமம் யாத்திரை செல்வோரில் சிலர் ஊருக்குள் தெரிந்த வீடுகளில் மடிப்பிச்சை எடுக்கும் வழக்கத்தைக் கொண்டிருந்தனர். போவதற்கு வசதி இல்லாதோர் ஒரு பிடி அரிசி என்றாலும் தானம் செய்வர். திருவிழா முடிந்து வந்ததும் மடிப்பிச்சை எடுத்தோர் அந்த வீடுகளுக்கு நன்றிக்கடனாகக் கதிர்காமக் கந்தனின் பிரசாதத்தைக் கொண்டு வந்து கொடுப்பர்.

சுவாமி விவேகானந்தர் இலங்கைக்கு வந்திருந்தபோது, கண்டி, மாத்தளை, அனுராதபுரம், யாழ்ப்பாணம் ஆகிய இடங்களுக்கும் சென்று இந்து மதத்தைப் பற்றி உரையாற்றி இருந்தார். யதார்த்த பூர்வமான அவரது உரை பலரையும் கவர்ந்திருந்தது. காலப்போக்கில் தெற்கே



இருந்த மதவாதிகளுக்கு இவரால் ஆரம்பித்து வைக்கப்பட்ட இராமகிருஷ்ண மடம் பெரும் இடைஞ்சலாக இருந்தது. அங்கிருந்தால் இந்துக்களின் வருகை அதிகரிக்கும் என்பதால் வேறு பல காரணங்கள் சொல்லி அதை அகற்றி விட்டனர். தென் பகுதியில் வாழ்ந்த பழங்குடி மக்களான தமிழரை விரட்டுவது, அல்லது மதம் மாற்றுவது, மலையகத் தமிழரைத் தனிமைப் படுத்துவது போன்ற திட்டங்களை 1948ஆம் ஆண்டுக்குப்பின் அதிகாரத்தை வைத்தே சாதித்தனர். இதைவிட அவ்வப்போது இனக்கலவரங்களை ஏற்படுத்திச் சிறுபான்மை இனத்தவர்களை பதட்ட நிலையில் எப்பொழுதும் வைத்திருப்பதே இவர்களின் அரசியல் தந்திரமாக இருந்தது. இதன் காரணமாக வடபகுதியில் இருந்து சென்ற ஏராளமான தமிழர் உயிராபத்துக் கருதிக் கதிர்காமம் செல்வதை மெல்ல மெல்லக் குறைத்துக் கொண்டனர்.

முருகனை வடமொழியில் கார்த்திகேயன் என்றும் சொல்வர். புராதன புராணங்களில் ஒன்றான ஸ்கந்தபுராணத்தில் ஒரு கதை இருக்கின்றது. ஐந்து முகம் கொண்ட சிவன்தான் ஆறாவது முகத்தோடு கந்தனாக அவதாரம் எடுத்தது உங்களுக்குத் தெரிந்திருக்கும் என நினைக்கின்றேன். தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் நடந்த போரில் அசுரர்கள் வெற்றி பெற்றிருந்தனர். தோல்வியடைந்த தேவர்கள் சிவனிடம் சென்று முறையிட்டனர். அதனால்தான் சிவன் முருகனாக அவதாரம் எடுத்ததாகப் புராணங்கள் குறிப்பிடுகின்றன. 'ஆதியருணாசலம் அமர்ந்த பெருமானே' என்று கந்தனின் இந்த அவதாரத்தைக் குறிப்பிடும் வரிகள் இவையாகும்.

முருகக் கடவுள் பத்மாசுரனை அழித்த கதைக்குரிய காட்சியைச் சூரன்போரின் போது பார்த்திருப்பீர்கள். அதாவது இலங்காபுரிக்கு வந்து சூரபத்மனுடன் போராடி வென்ற பின் வேட்டுவப் பெண்ணான வள்ளியைக் கண்டு காதல் வசப்பட்டதாகவும், அதன்பின் அங்கேயே திருமணம் நடந்ததாகவும் இந்தப் புராணத்தில் குறிப்பிடப் படுகின்றது. இச்சம்பவத்தை ஆறு முகம் கொண்ட முருகன் 'வள்ளியை மணம் புணர வந்த முகம் ஒன்று' என்ற தேவார வரிகள் மூலம் நினைவில் கொண்டு வரலாம். கார்த்திகேயனின் திருமணம் நடந்த கிராமம் இது என்பதால் (Krthikeyan-grmam) அதைக் கதிர்காமம் என்று அழைப்பதாகவும் ஒரு கதை உண்டு.

அந்தச் சுற்றாடலில் தொன்று தொட்டு தமிழர் வாழ்ந்தனர் என்பதை இந்தப் புராணம் எடுத்துச் சொல்கின்றது. கதிர்காமம் ஆலயச் சுற்றாடல் மட்டுமல்ல, தொண்டீஸ்வரர் ஆலயச் சுற்றாடலிலும் தமிழர்கள் வாழ்ந்ததற்கான வரலாற்றுச் சான்றுகள் இருக்கின்றன. சுமார் 2000 வருடங்களுக்கு முன் அனுராதபுரத்தை ஆண்ட தமிழ் மன்னனான எல்லாளனை போர்முனையில் வென்றபின் துட்ட கெமுனு என்ற சிங்கள மன்னன் கதிர்காமம் சென்று முருகனை வழிபட்டதாகவும் வரலாறு குறிப்பிடுகின்றது. 78 வருடங்களாக அனுராதபுரத்தைத் தலைநகராகக் கொண்டு இலங்கையை ஆண்ட தமிழ் மன்னர்களில் கடைசித் தமிழ் மன்னன் எல்லாளன் என்பதும் குறிப்பிடத்தக்கது. அதன்பின் பாண்டிய, பல்லவ, சோழர் ஆட்சியின் கீழ் நீண்ட காலம் அனுராதபுரமும், பொலநறுவையும் தலைநகராக இருந்தது உங்களுக்கு நினைவிருக்கலாம். சரித்திரங்கள் எல்லாம் ஆராய்ச்சியாளர்களுக்குக் கிடைக்கும் ஆவணங்களைக் கொண்டே எழுதப்படுகின்றன.

1st & 2nd MORTGAGES... CREDIT-LINE $25,000 TO $99,000
MORTGAGE ALLIANCE
• Commercial Mortgages.
• Construction Mortgages
• Secured Credit line
• Consolidate 1st,2nd,3rd mortgages
SAM SURENDRAN
Mortgage Broker Lic# 16002312
Direct: 647-922-5704
www. OKmortgages.ca
Mortgage Alliance
1585 Markham Road, Unit 110,
Scarborough, ON. M1B 2W1
Tel 647-350-7050
Corporate Office: Mortgage Alliance, 2005 Sheppard Ave. E. Suite 200, Toronto ON. M2J 5B4 Tel: 1-877-366-3487



# ஆட்சியதிகாரமும் ஜனநாயகமும்

**- விகிர்தன் -**

ஐக்கிய தேசியக் கட்சிக்குள் குழப்பநிலை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்வதை அவதானிக்க முடிகின்றது. இந்தக் குழப்பம் தொடர்பில் கட்சி ஆதரவாளர்கள் மட்டுமன்றி நடுநிலையாளர்களும் கவலையடைந்துள்ளனர்.

நாட்டில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியும் ஐக்கிய தேசியக் கட்சியுமே மாறி மாறி ஆட்சி நடத்திவந்துள்ளன. இன்று நீண்ட பாரம்பரியமுள்ள சுதந்திரக் கட்சி சிதைந்து போயுள்ளது. அதன் தலைமையில் ஒரு கூட்டணியை அமைத்துக்கூட களமிறங்கக்கூட முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. தீடீரென உருவாக்கப்பட்ட பொதுஜன பெரமுன இப்போது பிரதான கட்சியாக உருவெடுத்துள்ளதோடு ஜனாதிபதி தேர்தலிலும் வெற்றிபெற்றுள்ளது. அடுத்துவரும் நாடாளுமன்றத் தேர்தலிலும் மூன்றிலிரண்டு பெரும்பான்மை வாக்குகளைப் பெற்று ஆட்சியதிகாரத்தை நிலைப்படுத்திக்கொள்ளும் முயற்சிகளில் அக்கட்சி தீவிரமாக ஈடுபட்டு வருகின்றது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஸ அதற்கான வேலைத் திட்டங்களை நகர்த்தி வருகின்றார். தற்போது நாடாளுமன்றில் பெரும்பான்மையை ஐக்கிய தேசியக் கட்சியே கொண்டுள்ளதால் நாடாளுமன்றத்தில் தீர்மானங்களை கொண்டுவந்து நிறைவேற்றுவதில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஸவிற்கும், பிரதமர் மஹிந்த ராஜபக்ஸவுக்கும் இயலாத நிலை உள்ளது. எனவே, எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் பெரும்பான்மை வெற்றியை அடைய வேண்டும் என்பதே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஸவின் முக்கியமான குறிக்கோள்.

ஜனாதிபதித் தேர்தலில் சிங்கள வாக்குகளினாலேயே வெற்றிபெற்ற அவர், நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ், முஸ்லிம் வாக்குகளையும் பெற வேண்டும். அது அவருக்கும் தெரியும். அந்த வகையில் குறிப்பாக மலையக மக்களின் அதிகமான வாக்குகளை வசப்படுத்த அவர் திட்டமிடுகின்றார். மலையக தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபாய் நாளாந்த அடிப்படை சம்பளம் வழங்கப்படும் என்று அவர் உறுதியளித்துள்ளமை இதன் பாற்பட்டதே. தோட்ட நிர்வாகத்தை நடத்தும் நிறுவனங்கள் இதற்கு மறுப்புத் தெரிவித்து



வருகின்ற நிலையிலும் எவ்விதத்திலேனும் இந்த சம்பள உயர்வை எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்னர் நடைமுறைப்படுத்தினால் நிச்சயமாக தோட்டத் தொழிலாளர்களின் வாக்குகள் அவரது கட்சிக்கே செல்லும்.

முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் இப்போது ஐக்கிய தேசியக் கட்சியினரை சந்திப்பதில்லை என்ற தகவலும் வெளிவருகின்றது. ஐக்கிய தேசிய முன்னணியில் அங்கம் வகிக்கும் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ஐக்கிய தேசிய முன்னணியின் முக்கிய கூட்டங்களுக்கு அழைப்பு விடுத்தும் செல்வதில்லை என்று அறிய முடிகின்றது. நாடாளுமன்றத் தேர்தலில் கோட்டாபயவுடன் பேரம் பேசும் வாய்ப்பு கிடைத்தால் முஸ்லிம் காங்கிரஸ் அந்தப்பக்கம் தாவக்கூடிய நிலையும் வரலாம். ஏற்கனவே இருபக்கமும் தாவிய அனுபவம் அக்கட்சிக்கு இருந்துள்ளது.

இவ்வேளையில், ஐக்கிய தேசியக் கட்சிக்குள் ஏற்பட்டுள்ள பிளவுகளும் பொதுஜன பெரமுனவிற்கு பெரும்பான்மை வெற்றியை ஏற்படுத்திக் கொடுத்து விடுமோ என்பது தான் நடுநிலையாளர்களின் கவலை. நாடாளுமன்றத்தில் பலமானதோர் எதிர்க் கட்சி அமைகின்ற போதுதான் நாட்டில் ஜனநாயகம் நிலவும். ஜனநாயகம் தோற்றுவிடக் கூடாது என்பதே நடுநிலை சிந்தனையாளர்களின் கவலையாக உள்ளது.

நல்லாட்சி என்ற மகுடத்துடன் ஆட்சிக்கு வந்த கடந்த அரசாங்கம் அதன் பொறுப்புக்களை சரிவர செய்யவில்லை என்பது ஒருபுறமிருக்க, நாட்டில் ஜனநாயக வெளியொன்று ஏற்பட்டமையை யாரும் மறுக்க முடியாது. அந்த சூழலை குழப்பியடித்த பெருமை முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவையே சாரும். இன்று அவர் அரசியலில் எந்தவொரு முடிவையும் மேற்கொள்ள முடியாத நிலையிலேயே இருக்கின்றார். கோட்டாபய அரசாங்கத்தையே ஆதரிப்பதாக அவர் இப்போது கூறிக்கொண்டிருக்கின்றார். ஆனாலும் அவர் தலைமையிலான ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி பொதுஜன பெரமுனவுடன் கூட்டுச் சேர்வதில் சிக்கல்களை எதிர்கொண்டே வருகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சிக்குள் ஏற்பட்டுள்ள தலைமைப் போட்டி காரணமாக சுதந்திரக் கட்சியைப் போன்று பலவீனமடையும் நிலை ஏற்படலாம் என்றே பலரும் விமர்சிக்கின்றனர். எதிர்க்கட்சித் தலைமை, கட்சித் தலைமை, பிரதமர் வேட்பாளர் பதவி யாவும் தனக்கே வழங்கப்பட வேண்டும் என்று சஜித் பிரேமதாச கோரி வருகின்றார். எதிர்கட்சித் தலைமை அவருக்கு வழங்கப்பட்டுள்ள போதும் அனைத்து தலைமைப் பொறுப்பும் தன்னிடம் வந்தால்தான் கட்சியை சரியான முறையில் வழிநடத்த முடியும் என்று கூறுகின்றார். ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரின் ஆதரவு சஜித் பிரேமதாசவின் பக்கமே உள்ளது.

பிரதமர் வேட்பாளராக சஜித் பிரேமதாசவை முன்னிறுத்துவதில் கட்சிக்குள் பிரச்சினை இல்லை. ஆனால் கட்சியின் தலைமையை அவரிடம் வழங்க முடியாது என ரணில் ஆதரவாளர்கள் கூறுகின்றனர். ஐக்கிய தேசியக் கட்சியின் இது தொடர்பான கூட்டங்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்ற போதும், எந்தவொரு தீர்மானத்தையும் எடுக்க முடியாமலேயே அக் கூட்டங்கள் முடிவடைகின்றன. இந்த நிலையில், ரணில் சரியான முடிவை எடுக்கா விட்டால் புதிய கூட்டணியொன்றை அமைத்து களமிறங்கப் போவதாக சஜித் பிரேமதாசவும் அவரது ஆதரவாளர்களும் கூறி வருகின்றனர்.

ஆனால், ஐக்கிய தேசியக் கட்சி பிளவடையக் கூடாது என்கின்ற எண்ணம் ரணில் விக்ரமசிங்க உள்ளிட்ட கட்சியின் மூத்த உறுப்பினர்களுக்கு உள்ளது. எனினும், ரணில் கட்சித் தலைமையை விட்டுக்கொடுக்க மனமில்லாமல் உள்ளார். இன்னொரு புறத்தில் சஜித் கட்சியிலிருந்து விலகி புதிய கூட்டணி அமைத்தால் அடுத்த கட்டமாக என்ன முடிவெடுக்கலாம் என்கின்ற சிந்தனையும் ரணில் தரப்பினரிடம் உள்ளது. கட்சியின் மூத்த உறுப்பினர்களில் ஒருவரும், தற்போதைய சபாநாயகருமான கரு ஜயசூரியவை களமிறக்கலாம் என்கின்ற நோக்கமும் வெளிப்படுத்தப் படுகின்றது.

இதனை கட்சி உறுப்பினர்கள் ஏற்றுக் கொள்வர் என்று ரணில் தரப்பினர் எதிர்பார்க்கின்றனர். அத்துடன் ஐக்கிய தேசிய முன்னணியில் அங்கம் வகிக்கும் ஆதரவுக் கட்சிகளும் இதற்கு ஆதரவளிக்கும் என்றும் எதிர்பார்க்கின்றனர். ஆனால் அது தவறான எதிர்பார்ப்பாகவே இருக்கும். ஐக்கிய தேசிய முன்னணியில் இருக்கும் கட்சிகளில் தமிழ் முற்போக்குக் கூட்டணி, முஸ்லிம் காங்கிரஸ் போன்ற கட்சிகளின் ஆதரவில்லாமல் தனியே ஐக்கிய தேசியக் கட்சி வெற்றிபெற முடியாது. இதில் முஸ்லிம் காங்கிரஸ் ஜனாதிபதி தேர்தல் நடந்து முடிந்த கட்டத்திலிருந்து சற்று மௌனமாக இருப்பதை காண முடிகின்றது.

தமிழ் முற்போக்குக் கூட்டணி வெளிப்படையாக தங்கள் நிலைப்பாட்டை அவ்வப்போது தெரிவித்து வருகின்றது. அது சஜித் பிரேமதாசவிற்கே ஆதரவை தெரிவித்துள்ளது. ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையை ரணில் விக்ரமசிங்க சஜித்திற்கு வழங்குவதன் மூலமே கட்சி பிளவடையாமல் பாதுகாக்க முடியும் என்கின்ற கருத்தை தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் அடிக்கடி குறிப்பிட்டு வருகின்றார். தாங்கள் கோட்டாபய அரசாங்கத்துடன் இணைந்து செயற்படப்போவதில்லை என்பதையும் அவர் உறுதியாக தெரிவித்து வருகின்றார்.

ஐக்கிய தேசியக் கட்சிக்குள் ஏற்பட்டுள்ள குழப்பநிலை தொடருமானால் தமிழ் முற்போக்குக் கூட்டணி எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தனித்து போட்டியிடும் என்கின்ற கருத்தும் அக்கட்சியினால் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சி பிளவடைவதை தவிர்க்க வேண்டுமானால், ரணில் விக்ரமசிங்க தலைமைப் பதவியை விட்டுக் கொடுப்பதைத் தவிர வேறு வழிகள் இல்லை. அதற்கான காலத்தை இழுத்தடிப்பதும் சிக்கலையே ஏற்படுத்தும். ஜனாதிபதி தேர்தலில் தான் தோல்வியடைந்தமைக்கு ரணிலின் இழுத்தடிப்பே காரணம் என இப்போது சஜித் தெரிவித்து வருகின்றார். அதனால் சஜித் தரப்பினர் தங்கள் முடிவுகளை விரைவாக எடுக்கக் கூடும். அவர் அண்மைய நாட்களாகக் கட்சியின் அடிமட்ட உறுப்பினர்கள் வரை சந்தித்துக் கலந்துரையாடி வருகின்றார்.

இந்த நிலையில், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் கட்சித் தலைமையையும் சஜித் பிரேமதாசவிடம் கையளித்து கட்சியை பாதுகாக்க வேண்டும். ஐக்கிய தேசிய முன்னணியில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் விருப்பமும் அதுவே என்பதால் அந்த முடிவை அவர் விரைந்து எடுக்க வேண்டும். நாடாளுமன்றத்தில் கணிசமான ஆசனங்களையுடைய எதிர்க்கட்சியாக அது செயற்பட்டு ஜனநாயகத்தைப் பாதுகாக்க வேண்டும் என்பதே ஜனநாயகத்தை விரும்பும் நாட்டு மக்களின் எதிர்பார்ப்பு.

29வது ஆண்டில்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
விளம்பரம்
VLAMBARAM™

பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
ஆசிரியர்: சந்தியா மகேந்திரன்
முகாமையாளர்: கமல் செல்லையா
விடயப்பொறுப்பாளர்: விஜய் செல்லையா
தட்டச்சு: கலா விஜயபாலன்
அலுவலக பொறுப்பாளர்: பிரசாந்தி அருள்நாதன்
பதிப்பு: Canyon Press Inc.

Vlambaram Publications Inc.
GTA SQUARE, 5215 FINCH AVE. E.,
#201, TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059 / FAX: 416-286-0334
e-mail: Vlambaram@sympatico.ca / info@vlambaram.com
Web: www.vlambaram.com / www.tamilvanakkam.com

விளம்பரம் பத்திரிகை 'விளம்பரம் பப்ளிகேஷன்ஸ் இங்' நிறுவனத்தால் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களும், விளம்பரங்களுக்கு விளம்பரதாரர்களுமே பொறுப்பாளர்கள். பதிப்புரிமை: 2004 விளம்பரம் பப்ளிகேஷன்ஸ் இங். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

416-666-5515

MATH

EXAM REVIEW

Gr.12,11,10,9

GUARENTEED RESULTS

GTAMATH.COM

90%+ AVG

30 YRS EXP.

# கனடா...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

பாகக் கவலையடையத் தேவையில்லை என்றார்.

நோயாளியின் இருமல் மற்றும் தும்மலால் பாதிக்கப்பட்ட நீர்த்துளிகள் 2 மீற்றர் தூரமே பயணிக்கும் என்றபடியால்தான் இந்த ஏற்பாடு செய்யப்பட்டது என்றார். ரொறொன்ரோ ஸ்ரார் ஊடகத் தகவலின்படி 30 பிரயாணிகளே சுகாதார சேவையால் அடையாளம் காணப்பட்டு தொடர்பு கொள்ளப்பட்டனர்.




சுகாதார சேவை அமைச்சர் Patty Hajdu, "கனேடியர்களுக்கு கொரோனா வைரஸ் பரவுவதற்குரிய சாத்தியக் கூறுகள் மிகவும் குறைவு. கனேடியர்கள் பயப்பட வேண்டிய அவசியம் இல்லை. கனடாவின் பொது சுகாதார சேவை எதற்கும் தயார் நிலையில் உள்ளது. 2003ஆம் ஆண்டில் SARS வைரஸ் பரவிக் கனடாவில் 44 பேர் உயிரிழந்தனர். அதிலிருந்து பெறப்பட்ட அனுபவத்தால் கனடாவின் சுகாதார சேவை தற்போது மிகவும் சிறந்த நிலையில் உள்ளது." என்றார். சீனாவில் இருந்து 2002ஆம் ஆண்டில் ஆரம்பமாகி உலகம் முழுவதும் பரவிய SARS வைரஸ் ஆல் 800 பேர் உலகம் முழுவதும் இறந்துள்ளனர். கனேடியத் தலைமைப் பொது சுகாதார அதிகாரி, வைத்தியர் Theresa Tam தற்போது நடைமுறையில் இருக்கும் உலகளாவிய பயண முறைகளைக் கவனித்தால் கனடாவிற்குள் மேலும் கொரோனா வைரஸ் ஆல் பாதிக்கப்பட்டோர் வருவது தவிர்க்க முடியாது. நாங்கள் தான் எதற்கும் தயாராக இருக்க வேண்டும். பொதுமக்கள் சாதாரண சுகாதார முறையைக் கைகொண்டாலே வைரஸ் தொற்றுக்களைத் தவிர்க்கலாம். அடிக்கடி கைகளை கழுவ வேண்டும். எதிரில் உள்ளவர் மேல் இருமாமல் முழங்கைக்குள் இருமலாம் அல்லது Tissueஇல் இருமி அதைப் பாதுகாப்பாகக் குப்பையில் எறிந்து விடலாம். இருமல், காய்ச்சல் போன்றவை வந்தால் வீட்டில் இருந்து இளைப்பாறவும்" என்றார்.




தற்போது ரொறொன்ரோ, வன்கூவர் மற்றும் மொன்றியல் சர்வதேச விமான நிலையங்களில் வந்திறங்கும் பயணிகளுக்கு அவர்களுக்குக் காய்ச்சல், இருமல் போன்ற அறிகுறிகள் இருந்தால் அவர்கள் விமான நிலைய எல்லை அதிகாரிகளிடம் (Border officials) கூறுமாறு அறிவுறுத்தப்படுகிறது. ரொறொன்ரோவின் இணை சுகாதார மருத்துவ அதிகாரி, வைத்தியர் Rita Shahin ரொறொன்ரோ ஸ்ரார் ஊடகத்திற்குத் தெரிவிக்கையில் இந்த நடைமுறை ஜனவரி 23இல் இருந்தே ஆரம்பமானது என்றார். அதனால் ஜனவரி 22இல் வுஹான் நகரில் இருந்து வந்த பிரயாணிக்கு இவ்வாறான அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருக்க மாட்டாது என்றார்.

ரொறொன்ரோ சுகாதார சேவை அதிகாரி, வைத்தியர் Eileen de Villa ரொறொன்ரோ ஸ்ரார் ஊடகத்திற்குத் தெரிவிக்கையில் தற்போது Sunnybrook வைத்தியசாலையில் வைத்துக் கண்காணிக்கப்படும் நோயாளி விமானத்தில் இருந்து வந்தவுடன் எந்த ஒரு பொதுப் போக்குவரத்துச் சாதனத்தையும் பாவிக்கவில்லை. அவர் தனியார் வாகனம் மூலமே தனது வீட்டிற்குச் சென்றார். அவருடன் அவரது குடும்ப உறுப்பினர் ஒருவர் மட்டுமே நெருங்கிய தொடர்பில் இருந்துள்ளார். அவர் தற்போது சுகாதார சேவையின் கண்காணிப்பில் உள்ளார். அவருக்கு எந்தவிதமான நோய்க்கான அறிகுறிகள் எதுவும் இதுவரை தென்படவில்லை. இந்தக் குடும்ப உறுப்பினரைத் தவிர எவருடனும் நோயாளி தொடர்பில் இருக்கவில்லை என்றார்.



Sunnybrook வைத்தியசாலையைச் சேர்ந்த நோய்த் தொற்று, தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு மருத்துவ இயக்குனர், வைத்தியர் Jerome Leis ஊடகங்களுக்கு விடுத்த அறிக்கையில் தமது கண்காணிப்பில் உள்ள நோயாளி நிலையான நிலையில் (Stable condition) உள்ளார். அவர் நோய் குணமாகி மற்றவர்களுக்கு நோய் தொற்று ஏற்படாத நிலை அடைந்த பிற்பாடே வீட்டிற்குச் செல்ல அனுமதிக்கப்படுவார். Sunnybrook வைத்தியசாலையில் எல்லா வேலைகளும் வழமை போலவே நடைபெறுகின்றன. ஏனைய நோயாளர்கள் எந்தவித பாதிப்போ இடைஞ்சலோ இல்லாமல் வழமைபோல் வைத்தியசாலைக்கு வந்து செல்கின்றனர்" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் என்பது வைரஸின் ஒரு பெரிய குடும்பமாகும். இது சாதாரண சளி முதல் பலவிதமான சுவாச நோய் வகைகளைத் தரக்கூடியது. 2019 டிசம்பர் மாதத்தில் வுஹான் பகுதியில் சில நோயாளிகள் மருத்துவரிடம் சென்று தமக்குக் காய்ச்சல், சளி, மூச்சுத்திணறல் போன்றவை இருப்பதாக தெரிவித்தனர். அதைத் தொடர்ந்தே ஒரு புதிய வைரஸ் மக்களிடையே பரவுவதை மருத்துவர்கள் அறிந்தனர். இவ் வைரஸ் 2019 டிசம்பர் 31இல் உறுதி செய்யப்பட்டு சீனாவின் தேசிய சுகாதார அதிகாரிகளால் மக்களுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டன.

ஏற்கனவே கொரோனா வைரஸ் இல் 6 வகை இருந்ததால் இதை 7ஆவது வகை வைரஸாக அறிவித்தனர். இதற்கு 2019-nCoV எனப் பெயரிடப்பட்டது. அதாவது 2019இல் கண்டுபிடிக்கப்பட்ட 'newstrain of Corona Virus' என்பதை குறிக்குமாறு இப்பெயர் வழங்கப்பட்டது.

இந்த வைரஸ் ஒருவரைத் தாக்கினால் முதலில் உடல் வெப்பநிலை வழக்கத்தை விட அதிகமாகிக் காய்ச்சல் வரும். அதைத் தொடர்ந்து இருமல் வரும். பின்னர் சுவாசிப்பதில் பிரச்சினை ஏற்படும். இப்படி படிப்படியாக நிலைமை தீவிரமாகும். தொடர்ந்து மற்ற சுவாசத் தொற்றுகளான: மூக்கு ஒழுகுதல், தொண்டைப் புண், களைப்பு, தலைவலி, மூச்சுவிடுவதில் சிரமம் எல்லாம் ஏற்படும்.

சீனாவின் பெரும் தொழில்துறை நகரமான வுஹானில் உள்ள காட்டு விலங்குகள், பாம்பு, வௌவால், ஊர்வன மற்றும் கடல் பிராணிகள் மனித உணவிற்காக விற்கப்படும் மிகப் பெரிய சந்தையில் இருந்தே இந்த வைரஸ் மனிதருக்கு முதலில் பரவியது. இந்தச் சந்தையே கொரோனா வைரஸ் தொற்று வியாதியின் மையப் புள்ளி எனக்கூறப்படுகிறது. இந்தச் சந்தையில் இருந்துதான் இந்த நோய் ஆரம்பமானது என உறுதிப்படுத்தினாலும் எந்த விலங்கினத்தில் இருந்து மனிதருக்கு இந்த நோய் தொற்றியது என இதுவரை உறுதிப்படுத்தப்படவில்லை.

(தொடர்ச்சி 16ஆம் பக்கம்...)

# தேவைப்படாத தொலைபேசி அழைப்புகளைத் தடுக்கும் கனடாவின் சட்டங்கள்!

## கனடியத் தகவல் தொடர்- 322




### Do not call Legalization

அறிமுகமும் இல்லாத வர்த்தகம் செய்வோரிடமிருந்து எமக்குதட தேடிவரும் தொலைபேசி அழைப்புகளின் தொல்லைகளைத் தடுக்கக் கனடிய அரசு சட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றது.

**'அறிமுகமில்லாத வர்த்தக சேவையாளர்களின் தொலைபேசி அழைப்புகள் எனது தொலைபேசிக்கு வரக்கூடாது.'** என்பதனை அரசின் வழிகாட்டல்களின்படி பதிவு செய்து வையுங்கள். அதனைமீறி அழைக்கக் கூடாது என்பது கனடிய அரசினால் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய சட்டமாகும். அதனையும் மீறி தொலைபேசி அழைப்புகளின் தொல்லைகள் தொடர்ந்தால் என்ன செய்வது? அங்கு அடுத்த நட்வடிக்கை உண்டு.

**'Bill – 37 An act to amend the telecommunication act'** என்னும் திருத்தப்பட்ட சட்டமூலம் 2004 டிசம்பர் மாதம் முதலில் அறிமுகப்படுத்தப்பட்டது. **'கனடிய ஒலிபரப்பு - தொலைகாட்சி - தொலைதொடர்பு சபை'** Canadian Radio – Television and Telecommunication Commission) என்ற அரச நிறுவனம் இச்சட்ட அமலாக்கங்களை நிர்வகிக்கின்றது.

**'தொலைபேசி அழைப்பினைத் தடுக்கும் தேசிய ஆதரவு மையம்'** (Do not call list support centre) என்பது அந்நிறுவனத்தின் ஒரு பிரிவாகும். அறிமுகமில்லாத வர்த்தக சேவைகளின் அழைப் புகள் எமது தொலைபேசிக்கு வரக்கூடாது என்பதனை இந்நிறுவனத்தில் ஒருமுறை பதிந்து வைத்துவிட்டால் போதும். அந்நிறுவனத்தின் விபரங்கள் பின்வருமாறு

Phone: **1-866-580-DNCL (3625)**
Fax: **1-888-DNCL – Fax (362-5329)**
Email: **support@lnnte-dncl.gc.ca**
Website: **www.lnnte-dncl.gc.ca**
For online registration and complaint

பதிவு செய்த நிலையிலும் மீறித் தொலைபேசி அழைப்பு வந்தால் முறைப்பாடு செய்யவேண்டிய இடமும் இதுவாகும்: முறைப்பாடு செய்யும்போது:

- பெயர் அழைப்பு வந்த தொலைபேசி இலக்கம்
- தொலைபேசி அழைப்பு வந்த திகதி
- என்ன மாதிரியான முறைப்பாடு
- உங்களின் விபரங்கள்

எனப் பல தகவல்களை வழங்க வேண்டும்.

உங்கள் தொலைபேசி இலக்கங்களுக்கு வேண்டப்படாத வர்த்தக நிறுவனங்களின் தொலைபேசி ஊடாக அழைப்பு வருவதை நிறுத்துவதற்கு எதுவிதமான கட்டணமும் இல்லாது இங்கு பதிவு செய்யலாம். பதிவு செய்யப்பட்டு 31 நாட்களுக்குப் பின்பு இவை அமலாக்கப்படும்.




உங்கள் தொலைபேசி சேவையினைப் பெறும் தொலைபேசிக் கம்பனிகள் மூலமும் (Bell, Rogers and fido) வேண்டப் படாத தொலைபேசி அழைப்பினை நிறுத்தும் கோரிக்கையினைப் பதிவு செய்யலாம். பதிவு செய்யப்பட்டதனை விரும்பினால் ரத்தும் செய்யலாம். இப்பதிவுகள் வேண்டப்படாத வர்த்தக ரீதியான தொலைபேசி அழைப்புகளுக்கு மட்டுமே அமலாக்கப்படும். தனிப்பட்டோரின் குறிப்பிடப்பட்ட ஓர் இலக்கத்திலிருந்து வரும் தொலைபேசி அழைப்புகளை இலகுவாக அவர்களாகவோ அல்லது அவர்களின் தொலைபேசிக் கம்பனிக்கு அறிவித்தோ தடை செய்யலாம். ஆனால் வர்த்தக தொலைபேசி இலக்கங்களை (Business telephone lines) பெற்று வைத்திருப்போர் தங்கள் இலக்கங்களுக்கு அழைக்க வேண்டாம் என்ற சட்டரீதியான கோரிக்கையினை பதிவு செய்ய முடியாது.

பின்வரும் அமைப்புகளில் மட்டும் இருந்து வரும் தொலைபேசி அழைப்புகளை தடை செய்யவும் முடியாது. அவர்களின் தொலைபேசி அழைப்புகளுக்கு எதிராக எதுவிதமான சட்ட நடவடிக்கைகளும் எடுக்க முடியாது. அவையாவன:

◆ கனடாவின் பதிவு செய்யப்பட்ட தொண்டு நிறுவனங்கள். (Canadian Registered Charities)
◆ அரசியல் கட்சிகள், தேர்தல் வேட்பாளர்களின் தொகுதி அலுவலகங்கள். (Political Parties, Riding Associations and Candidates
◆ புள்ளிவிபரக் கணக்கெடுப்புகளுக்காக அழைக்கும் நிறுவனங்கள் மற்றும் நபர்கள். (Persons or Entities Collecting Information for Survey
◆ சந்தா சேர்ப்பதற்காக அழைக்கும் பத்திரிகைகள். (News Papers of General Circulation for the Purpose of Soliciting Subscriptions)
இவை தவிர
◆ ஒரு குறிப்பிட்ட காலாவதியாகும் திகதி வரை ஏதாவது தங்களின் வர்த்தக தொடர்புகளை வைத்திருக்கும் நிறுவனங்களிடம் இருந்து வரும் அழைப்புகள்.

(தொடர்ச்சி 16ஆம் பக்கம்...)




## வெளிநாடுகளில் மேற்கொள்ளும் சிகிச்சை செலவுகள் மாகாண மருத்துவ காப்புறுதி திட்டத்திலிருந்து மீள் பெறுவது நிறுத்தம்!

### Termination of out of Country OHIP claim

கனடாவில் குறிப்பாக ஒன்ராரியோ மாகாணத்தில் வாழ்வோர் தங்களின் வெளிநாட்டுப் பிரயாணங்களின் போது தங்கியிருக்கும் நாடுகளில் ஏதாவது அவசர சிகிச்சைகள் மேற்கொள்ள வேண்டி வந்தால், அதற்காக அங்கு செலவழித்த செலவுகளின் ஒரு பகுதியினை கனடாவுக்குத் திரும்பி வந்ததும் மாகாண சுகாதார அமைச்சுக்கு ஆதாரங்களுடன் சமர்ப்பித்து மீள்பெறும் வசதிகள் பல வருடங்களாக நடைமுறைப்படுத்தப்பட்டு வந்த விடயமாகும்.

இவை தொடர்பாகக் கனடியத் தகவல் தொடரில் விபரமாக வழிகாட்டப்பட்டதுடன் ஏராளமான விளம்பரம் வாசகர்கள் செலவுகளை மீளப் பெற்றதை நன்றியுடன் தெரிவித்தனர். கடந்த ஜனவரி 01, 2020இல் இருந்து இப்பணம் மீளப்பெறும் வசதிகள் யாவற்றினையும் இன்றைய மாகாண அரசு நிறுத்தியுள்ளது.

இனிமேல் காலங்களில் பிரயாணம் செய்வோர் பிரயாணக் காப்புறுதி சொந்தமாக எடுத்துக்கொண்டு செல்வதே பாதுப்பானது என்பது அறிவுரையாக வழங்கப்படுகிறது.

# இன்னல் நீக்கும் இயற்கை - 65



- அகணி -
authorakani@gmail.com

அன்பான விளம்பரம் வாசகர்களே!

இன்று அல்சர் நோய்க்கான இயற்கை மருத்துவ முறைகள் பற்றி ஆராய்வோம். நாளாந்த உணவுகளை நேரத்துக்கு உட்கொள்ளாது காலதாமதமாக உட்கொள்ளுதல், ஒழுங்கின்மையான உணவுப்பழக்கங்கள் போன்றவற்றால் அல்சர் பிரச்சினை ஏற்படுகிறது.

ஆரம்பத்தில் அல்சர் உள்ளவர்களுக்குப் பசியின்மை ஏற்படுகிறது. அல்சர் நோயின் பாதிப்புக் கூடும்பொழுது அடிக்கடி பசியுண்டாகும். வயிற்றில் எரிச்சல் உண்டாகும். வயிற்றுப் பகுதி வீங்கும். உதட்டின் உட்பகுதி, நாக்கின் அடிப்பகுதி, வாயின் உட்பகுதி போன்ற இடங்களில் புண்கள் உண்டாகும். சிலருக்கு உடலின் எடை சடுதியாகக் குறையும். அல்சரின் ஆரம்பத்திலேயே மருத்துவரிடம் சென்று ஆலோசனை பெறவேண்டும்.

எப்படி இருந்தாலும், இயற்கையான வழிமுறைகளும், நோயின் பாதிப்பை குறைக்கவும், ஓரளவுக்கு குணமடையச் செய்யவும் பெரிதும் உதவுகின்றன. இயற்கை வழிமுறைகள் சாதாரணமாகப் பயன்படுத்தப்படும் உணவுவகைகள் என்பதால் இவற்றை அறிந்து உட்கொள்வதால் ஆபத்து இல்லை. எனவே எனது தேடலில் கிடைத்த தகவல்களை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

அல்சர் உள்ளோர் அடிக்கடி நீர் பருக வேண்டும். கோவா இலைகளை கிரைண்டரில் அரைத்து சூப் செய்து குடிப்பது அல்சர் பிரச்சினை உள்ளோருக்கு உகந்தது. ஓர் ஆய்வுத்தகவலில் 13 மனிதரில் 10 நாட்களுக்கு இந்த சூப் கொடுக்கப்பட்டபொழுது அல்சர் பிரச்சினை குணமாகியதாகக் கூறப்பட்டுள்ளது. மேலும் 100 மனிதரில் இதேயளவு சூப்பினைக் கொண்டு ஏற்கனவே மருத்துவ சிகிச்சை அளித்துப் பயன் கிடைக்காதவர்களுக்குக் கொடுக்கப்பட்டபொழுது 80 சதவீதமானோர் குணமடைந்ததாகக் கூறப்பட்டுள்ளது. கோவா இலைகளில் உள்ள விற்றமின் சி மற்றும் சில பதார்த்தங்கள் அல்சர் நோயைக் குணப்படுத்த வல்லது.

தேன் சாப்பிடுவதாலும் அல்சர் வியாதிகளால் ஏற்படும் பாதிப்புக்களில் இருந்து நிவாரணம் பெறலாம். வயிற்றில் ஏற்படும் அல்சருக்கு தேனில் உள்ள இரசாயனப் பதார்த்தங்கள் பெரிதும் உதவுகின்றன.

இரண்டு பல்லு வெண்பூடு சற்று வெறும் சட்டியில் போட்டு வறுத்து நாளாந்தம் சில நாட்களுக்கு சாப்பிட்டு வர அல்சர் பிரச்சினை உள்ளோருக்கு நோயின் பாதிப்பு குறையும். அல்சர் நோயுள்ள 25 மனிதருக்கு மஞ்சள் 600 மில்லிகிராம் ஒரு நாளைக்கு ஐந்து தடவை கொடுக்கப்பட்டபொழுது 4 வாரத்திற்குப் பின்பு 48 சதவீதமானோருக்கும், எட்டு வாரங்களுக்குப் பின்பு 87 சதவீதமானோருக்கும் குணமடைந்ததாக ஆய்வாளர்கள் கூறியுள்ளனர்.




மணத்தக்காளிக் கீரையை சிறிதாக வெட்டி வறைசெய்து அல்லது அவித்து சூப் செய்து அடிக்கடி சாப்பிட்டு வர உடலில் அல்சர் காரணமாக ஏற்படும் குடற்புண், வயிற்றுப் புண், வாய்ப்புண் போன்றவை குணமாகும். பச்சை வாழைப்பழத்தை நாளாந்தம் உட்கொண்டு வந்தால் பழுதாகிய சவ்வுகளை திரும்பவும் வளரச் செய்து அல்சர் நோயால் ஏற்படும் பாதிப்புக்களைச் சீராக்கும்.

நாளாந்தம் உணவுகளில் தேங்காய்ப்பால் கலந்து உட்கொள்ளுவதால் அல்லது சிறிதளவு தேங்காய்ப்பாலைக் குடித்துவந்தால் குடல், வயிறு, வாய் போன்ற பகுதிகளில் ஏற்படும் புண்களை மாற்றி விடுகிறது. தேங்காய்ப்பாலுக்குப் பதிலாக தேங்காய்ச் சொட்டுக்களை (வெட்டி எடுத்து துண்டுகளை) நன்றாக வாய்க்குள் பற்களால் அரைத்துச் சாப்பிட்டும் வரலாம். கசகசாவை தேங்காய்ப் பாலில் ஊறவைத்துச் சாப்பிட்டால் அல்சர் காரணமாக ஏற்படும் வயிற்றுப் புண்கள் குணமடையும். நாளாந்தம் கிரைண்டரில் அப்பிள் சாறு செய்து குடித்து வர அல்சர் காரணமாக ஏற்படும் வயிற்றுவலி குணமாகும்.

பழுத்த பாகற்காயை சமைத்து சாப்பிட்டு வரும்பொழுது குடலுக்கு வலிமை கிடைக்கிறது. வயிற்றில் ஏற்படும் கிருமிகளை அழிக்கிறது. உடலில் உள்ள பித்தத்தன்மையைக் குறைக்கவும் செய்கிறது. மிளகு, சீரகம், கொத்தமல்லி, மஞ்சள் ஆகியவற்றை உளுத்தம் மாவில் கலந்து அரைத்துக் கஞ்சி காய்ச்சிக் குடித்து வர அல்சர் காரணமாக ஏற்படும் குடற்புண்கள் குணமாகும். காலை நேரத்தில் வெறும் வயிற்றில் வேப்பம் இலையைச் சாப்பிட்டு வந்தால் அல்சர் பிரச்சினையைக் குறைத்து வயிற்றில் ஏற்படும் பாதிப்புக்களையும் சீர் செய்கின்றது.

கோவா என அழைக்கப்படும் முட்டைக் கோஸ் வறுவல், அகத்திக் கீரை, ஏனைய கீரை உணவுகள் போன்றவற்றில் இரும்புச் சத்து, சுண்ணாம்புச்சத்து அதிகமாக உள்ளதால் இவையும் அல்சர் பிரச்சினை உள்ளோருக்குப் பயனளிக்கின்றன. புழுங்கல் அரிசியில் கஞ்சி செய்து குடித்து வர அல்சர் பிரச்சினை குணமாகும். நெல்லிக்காய் சாப்பிடுவதும் அல்சர் பிரச்சினைக்குத் தீர்வாகவுள்ளது.

புரோபயற்றிக்ஸ் (probiotics) அல்சர் உள்ளோருக்கு நல்ல பலனை வழங்கக் கூடிய உணவு ஆகும். தயிர் போன்ற புரோபயற்றிக்ஸ் உணவுகளை சாப்பிடுவது நல்லது. பால், தேநீர், கோப்பி, மதுபானம் போன்றவற்றை அல்சர் பிரச்சினை உள்ளோர் முற்றாகத் தவிர்க்க வேண்டும். கிறீன் ரீ குடிப்பது நல்லது.


அல்சர் இருப்போர் சாப்பிட வேண்டிய பழங்களில் மாதுளம்பழம் முக்கியமானது. மாதுளம்பழத்தில் பிஞ்சாக உள்ள நிலையில் சாப்பிடுவது அல்சர் பிரச்சினை உள்ளோருக்கு நன்மை பயக்கும். மாதுளம் பழம் அல்லது சாற்றை ஒவ்வொரு நாளும் சாப்பிட வேண்டும். ஒரு நாளைக்கு இரண்டு அல்லது மூன்று தடவை இரண்டு மேசைக்கரண்டி மாதுளம் பழ முத்துக்களைச் சாப்பிடவேண்டும்.

நிறைந்தளவு விதைகள் கொண்ட நாட்டுக் கொய்யாப்பழம் அல்சர் இருப்போருக்கு நல்லது. ஒரு நாளைக்கு இரண்டு அல்லது மூன்று சிறிய பருமன் கொண்ட நாட்டுக் கொய்யாப்பழங்கள் அல்சர் நோயுள்ளோர் சாப்பிட்டு வர வேண்டும்.

எலுமிச்சம் பழச்சாற்றை தேனுடன் கலந்து சாப்பாட்டுக்குப் பின்பு சிறிதளவு குடித்து வருதல் நல்லது. விதைகொண்ட கறுப்புத் திராட்சைப் பழம் அல்சர் பிரச்சினை உள்ளோர் சாப்பிடவேண்டும். அரை மேசைக்கரண்டி சுக்குத்தூளை கரும்புச் சாற்றில் கலந்து உட்கொள்ள வேண்டும். வெற்றிலையை நன்கு மென்று உண்டு வந்தால் வயிற்றுப் புண்கள், குடற்புண்கள் ஆகியவை குணமாகும். புடலங்காய் கறி உணவில் சேர்த்துச் சாப்பிடுவது சமிபாட்டுக்கும், அல்சர் காரணமாக ஏற்படும் புண்களை மாற்றுவதற்கும் உதவும்.

**அன்பான விளம்பரம் வாசகர்களே!**

இயற்கை வளங்களால் எவ்வாறு இன்னல் நீங்கி வாழலாம் என்று அறியும் பொருட்டு எழுந்த தேடலில் கிடைத்த தகவல் பதிவாக அசைந்து கொண்டிருக்கும் இந்தத் தொடர் கட்டுரை எமது பொது அறிவை விருத்தி செய்யும் நோக்குடன் எழுதப்படுகின்றது. இந்தக் கட்டுரையில் கூறப்படும் கருத்துக்கள் இயற்கை சார்ந்து இருந்தாலும் உங்கள் உடல்நிலைக்கேற்ப பொருத்தமான மருத்துவ கருத்துக்களாக அமைந்துவிடாது என்பதை கவனத்தில் எடுத்துக் கொள்ளுங்கள். எப்பொழுதும் பொருத்தமான வைத்திய ஆலோசனையை மேற்கொள்ளுங்கள் என்று வலியுறுத்திக் கூறிக்கொள்கின்றேன். ஆனாலும் நாம் இயற்கையோடு இணைந்து வாழ்வதற்கான தகவலையும், விழிப்புணர்வையும், ஆரோக்கியமாக வாழ்வதற்கு வேண்டிய பொதுவறிவையும் இந்தக் கட்டுரை வழங்கும் என்று நம்புகின்றேன்.



ARISTO PEST CONTROL
Set Your Mind At Rest, We Will Get Rid Of The Pest
24HRS / 7 DAYS EMERGENCY SERVICES & ANIMAL REMOVAL

• Cockroach • Bedbug • Animal Control • Mice
• Bird Control • WASPS • Hornets Removal • Rat
Same Day Service - Residential, Commercial, Industrial
We Also Provide No Obligation Inspection For Commercial & Residential Clients
Government Licensed Exterminator
(We Speak English, Gujarati & Hindi)
Written Guarantee & Discounted Rates - Call Now 647.339.3926
info@aristopestcontrol.ca / www.aristopestcontrol.ca



# நிலாவிலும் உலாவி வருவோம்

## இதுவோர் அறிவியற் தொடர்






கடந்த இரண்டு இதழ்களிலும் எங்களின் சங்க இலக்கியங்களான இரட்டைக் காப்பியங்களில் விஞ்சையர் (எலியன்) பதிவுகள் எவ்வண்ணமாக உள்ளன என் பதனையும் அவற்றின் பின்னணியினையும் எனது பார்வையிற் காட்டியிருந்தேன். இளங்கோ அடிகளும் சாத்தனாரும் தெரிந்துதான் எழுதினரோ என்னவோ தெரியவில்லை, ஆனாலும் எங்களின் சிலப்பதிகாரமும் மணிமேகலையும் 'அந் நாள் அந்நியர்' பதிவுகளின் தமிழ் வடி வமா? என்று பார்த்து வியந்திருப்பீர்கள். இவ்வண்ணமான விஞ்சையர் காட்சிகள் மேலைநாட்டாரின் கதைகளில் இன்றும் திரைப்படங்களாக வருவதைக் காணலாம். நிலாவில் உலாவி வருகையில் இது போன்ற பல சிந்தனைகள் எம்மிடையே எழத்தான் செய்யும். இடையிடையே அவை பற்றியும் கதைத்துக் கொண்டே நிலாவில் உலாவுவோம், சரிதானே.

நிலாவில் நடை பயிலுகையில் இன்றி லிருந்து நிலாவினைப் பற்றிய சில அடிப்படையான விடயங்களைத் தெரிந்து கொள்வோம். முதலில் நிலா எப்படி, எப்போது தோன்றியது என்பது பற்றிப் பார்ப்போம். இதுபற்றிப் பல கருத்துகள், கொள்கைகள் வந்து போயின. ஒரு வேளை இனிவரும் நாட்களிலும் வரலாம். ஆனாலும் பெருமளவில் சரிபார்க்கப்பட்டு இன்று விண்வெளியாளர்களிடையே ஏற் றுக் கொள்ளப்பட்ட இரண்டு விடயங் களைக் கூறப் போகின்றேன். அவை சுவாரசியமான அறிவியற் கதைகள். கேட்பீர்கள்தானே! என்ன இது! விக்கிர மாதித்தன் கதையில் வருகிற வேதாளம் கூறுகின்ற கதைகள் போன்றது என்று எண்ணுகின்றீர்களா? கவலைப்படாதீர்கள், இங்கே கேள்வியுமில்லைப் பதிலுமில்லை, வேதாளமுமில்லை, முருங்கைமரமு மில்லை. ஏனென்றால் இது அறிவியற் கதையல்லவா!

சரி, விடயத்திற்கு வருகின்றேன். முன் னொரு காலத்திலே என்று கூறப்படக் கூடிய காலமாகிய காலமது. புடவியின் (பேரண்டத்தின்) மூன்றாம் தலைமுறை விண்மீன்கள் அண்டவெளியிலே தோன்றிக் கொண்டிருந்தன. இப்படியாக இருக்கை யில் மிகவும் பெரியதான ஒரு தூசுக் கூட்டத்தில் இருந்து 4.6 பில்லியன் ஆண்டு முன்னராக எங்களது கதிரவனும் மூன்றாம் தலைமுறை விண்மீன்களில் ஒன்றாகத் தோன்றுகிறது. கதிரவனுடன் சேர்ந்து கொஞ்சம் முந்திப்பிந்தியென வேறும் சில விண்மீன்களும் தோன்றிக் கொண்டிருக்கின்றன. இப்படியாகக் கதிர வன் தோன்றுகையில் வெறுமனே தோன்ற வில்லை. அதனது குழந்தை குட்டிகள் எனக் கூறப்படக் கூடிய கோள்கள், கோள் களின் சந்திரன்கள், விண்கற்கள் போன்ற வற்றுடன் தோன்றுகின்றது. அப்படியாகத் தோன்றியவற்றில் இருந்து தோன்றியவை தான் எங்களின் புவி உட்பட மற்றக் கோள்கள் எல்லாம். இவையெல்லாம் புத்தம் புதிய கதிரவனைச் சுற்றிக் குப்பை வெளிநோக்கித் தள்ளுண்டு கொண்டு போய்க் கொண்டிருந்தது. அப்படியாகப் போகையில் புவிக்கு அண்மையாக அது வருகையில் புவி தனது ஈர்ப்பினாற் சந்திரனை இழுத்துத் தன்னைச் சுற்றச் செய்து விட்டது. இதனால் புவியினதும் சந்திரனதும் நிலைகள் உறுதியாக்கப்படக் காலங்காலமாக அவை தொடர்ந்து வந்த சிறுசிறு மாற்றங்களுடன் இன்று இவ்வடிவிற்கு வந்து விட்டன. இதுதான் ஒரு காலத்திலே வானவியலாளர்கள் மத்தியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட கருத்தாக இருந்தது. ஆனாலும் சில ஆய்வுகளுக்கு இவை ஒத்து வராததால் அவர்கள் சந்திரனின் தோற்றத்திற்கான புதிய கருத்திற்கான ஆய்வுகளில் ஈடுபட்டனர். அப்போதுதான் தற்காலத்தில் பெருமளவில் ஏற்றுக் கொள்ளப்பட்ட, 'மோதுகைக் கொள்கை' வெளிவந்தது.




களாக, ஒழுங்கில்லாமல் கண்டகண்ட போக்குகளில் அப்போது ஓடிக் கொண் டிருந்தன. இதனால் ஒன்றுடனொன்று மோதிக் கொள்ளும் நிலைகளும் கூட அடிக்கடி ஏற்பட்டிருந்தன. அதனால் தானோ என்னவோ இவற்றினை ஒழுங்கு படுத்தும் வேலையில் கதிரவன் ஈடுபடத் தொடங்கியது.

தனது துப்பரவாக்கும் முயற்சியில் 4.5 பில்லியன் ஆண்டு முன்னராக, பெருமளவு சக்தியைக் கதிரவன் வெளிவீச, சுற்றி இருந்த குட்டிப் பொருட்கள் எல்லாம் தெலைதூரத்திற்கு அள்ளுப்பட்டுப் போகத் தொடங்கின. அக்காலத்தில் கதிரவன் அடிக்கடி இப்படியான வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தது. இந்நிலையில் தான் எங்களின் சந்திரனுக்கான பிறப்பின் கதைகள் தொடங்குகின்றன. அதுவும் ஒன்றல்ல, இரண்டு வகையான கருத்துகள். இரண்டையுமே அறிவியற் பாதையிற் தெரிந்து கொள்வோம்.

முதலாவதாக, கதிரவனின் வீசுசக்தியின் வலிமையினால், அதற்கு அண்மையில் இருந்த பொருட்கள் எல்லாம் வெளி நோக்கித் தள்ளப்பட்டுக் கொண்டிருந்தன. ஆனால், புவி, வெள்ளி, புதன் போன்ற கோள்கள் அவற்றின் பருமன், கதிரவனில் இருந்து அவை இருந்த தூரம், கதிர வனை அவை சுற்றிவரும் வேகம் என் பவை காரணமாகக் கதிரவனின் வீசுசக்தி யால் பெரிதாகப் பாதிப்படையாமல், சின்னச் சின்ன தளம்பல்களுடன் தங் களைச் சரி செய்து கொண்டன. இப் படியிருக்கையில், கதிரவனின் வீசுசக்தி யினால் அப்போதிருந்த இளம் சந்திரன் 4.5 பில்லியன் ஆண்டு முன்னராக, பெரு மளவு சக்தியைக் கதிரவன் வெளிவீச, சுற்றி இருந்த குட்டிப் பொருட்கள் எல்லாம் தெலைதூரத்திற்கு அள்ளுப்பட்டுப் போகத் தொடங்கின அல்லவா. இவ்வண்ணம் அள்ளுண்டு போகையிலே, ஒன்றுடன் ஒன்று மோதிப் பலத்த சத்தங்களும் பெரும் தூசிகளும் கதிரவனைச் சுற்றி உண்டாகிக் கொண்டிருந்தன. இந் நிலையில் வேகமாக இயங்கிக் கொண் டிருந்த இரண்டு பெரும் பாறைகள் ஒன்றுடன் ஒன்று மோதிக் கொண்டன. ஒரு பாறை, கிட்டத்தட்ட இன்றுள்ள செவ்வாயின் பருமனானது. அதனைத் தியா (Theia) என்கின்றனர், மற்றப் பாறை எங்களின் புவியின் பருமனையும் விடச் சற்றுப் பெரியது. அதனைக் காயா (Gaia) என்கின்றனர். காயாவையும் தியாவையும் கோள்கள் என்றே குறிப்பிடுவர். இங்கு காயா என்பது கிரேக்கரின் புவிக்கான தெய்வமாகும். கிரேக்கரின் புராணப்படி, காயா என்ற புவித் தெய்வத்தில் இருந்து பிறந்ததுதான் எங்களின் புவி என்பதற்கு ஒப்பாகத்தான் காயா என்ற பெயரினை அக்கோளுக்குக் கொடுத்தனர் எனச் சிலர் கூறுவர்.

இம்மோதலில் கோள் காயா உடைந்து போகின்றது. அதனால் காயா இருந்த இடத்தில் பெருமளவு குட்டிக்குட்டிக் கற் களும் பெரிய பாறைத்துண்டொன்றும் சிறிய பாறைத் துண்டும் மிஞ்சின. கால ஓட்டத்தில் இவ்விரு துண்டுகளும் தம்மைச் சுற்றியுள்ள சிறுகற்கள், தூசுக்

(தொடர்ச்சி 20ஆம் பக்கம்...)

கைலாஷ் யாத்ரா
16 Days
9 - 24 JUNE 2020



3500 CAD with Tax
Flight Fare NOT included
Only 5 Seats Available
விரிவான தகவல்களுக்கு எங்களை அணுகவும்
செல்வராஜ் Travel Counsellor
India (Delhi)+91 986-816-5715
Scarborough +1 437-246-7323
tico.ca T1302463
tamilcartrip.com

# என் மொழி திரைப்படம்தான்

## திரைப்பட இயக்குனர் மிஷ்கின் -நேர்காணல்

**சந்திப்பு: கண்ணன்**

மிஷ்கினின் ‘சைக்கோ’ வெளியாகி இருக்கிறது. மனிதன் சமூகமயமாவதில் யார், யாருக்கெல்லாம் பங்கிருக்கிறது. எங்கேனும் ஒரு பிழை நடந்தால் அது எப்பேற்பட்ட மனிதர்களை உற்பத்தி செய்யும் என்பதைப் பேசுகிறது இந்தப் படம். தமிழ் திரைப்படங்களில் முக்கிய மான படம். தமிழில் மிக அபூர்வமாக நடக்கும் ஒரு திரையனுபவத்தை தருகிறது என்றும், மிகக் கொடூரமான கொலை சித்திரம் குழந்தைகளுடன் பார்ப்பதை தவிர்க்கவும் எனவும் கலவையான விமர்சனங்கள் வெளியாகி வருகின்றன. இந்நிலையில் மிஸ்கினை சந்தித்தோம்.

**‘சைக்கோ’ படத்தின் திரைக் கதையை எதன் பாதிப்பில் இருந்து உருவாக்கினீர்கள்?**

ஒரு கதை எல்லாவற்றையும் தொடும் தொடவேண்டும். அப்படியொரு கதைதான் ‘சைக்கோ’. இது எதன் பாதிப்பும் கிடையாது. என் ஆழ்மனதில் தோன்றிய கதை.

சைக்கோ என்பது மனப்பிறழ்வு. அந்த மனப்பிறழ்வு எல்லோரிடமும் இருக்கிறது. உலகில் இரண்டு விதமான சைக்கோக்கள் இருக்கின்றனர். மூளையில் விபத்து ஏற்பட்டால் மனப்பிறழ்வுக்கு ஆளாவது ஒன்று. குழந்தையின் 6 வயதிலிருந்து 12 வயதிற்குள் எந்தத் தவறான பாதிப்புக்கும் ஆட்படுத்தாமல் மனநிலையை சரியாக வைத்திருக்க வேண்டும். அப்படி இல்லையென்றால், பெரியவர்களானதும் அடுத்தவர்களின் வலியை உணராதவர்களாக உருவாகுவோர் இரண்டாம் வகையினர். இதுதான் சைக்கோக்கள் உருவாவதற்கான கோட்பாடு.

இதில் கதாநாயகனுக்கு ஏற்பட்ட பெரிய விபத்தால் மனநிலை எப்படி பாதிக்கிறது என்பதை சொல்லியுள்ளேன். மனைவியை ஒருவன் தொடர்ந்து நான்கைந்து வருடங்களாக அடித்துக்கொண்டே இருக்கிறான் என்றால், அது புருஷன் - பொண்டாட்டி பிரச்சினை கிடையாது. அவனுக்கு மனப் பிறழ்வு இருக்கிறது என்று அர்த்தம். இப்படிப் பல சைக்கோக்கள் சமூகத்தில் வியாபித்து இருக்கின்றனர்.

**சைக்கோக்களை கண்டுபிடிப்பது எப்படி?**

சைக்கோவை கண்டுபிடிப்பது ரொம்ப கஷ்டம். ஆனால், நம்மோடுதான் உலாவிக்கொண்டிருப்பர். அவர்களுக்கு அறிவு அதிகமாக இருக்கும். ரொம்ப பாதுகாப்பாகத் திட்டமிடுவர். அவர்கள் ஏரியாவுக்குள் போகும்போது கடுமையான, மன சாட்சியற்ற மனிதராக மாறிவிடுவர். அதில், சரிப்படுத்த முடிந்தோரை சரிப்படுத்தலாம். முடியாதோரை தனியாக சிறையில் அடைத்து வைக்க வேண்டியதுதான். ஏனென்றால், வெளியில் விட்டால், அவர்களால் மற்றவர்களுக்கும் ஆபத்து நேரிடலாம். நம் குழந்தைகளை வளர்க்கும்போது ரொம்ப கவனமாக அன்போடும் பண்போடும் வளர்க்க வேண்டும். எல்லாக் குழந்தைகளும் ஒரே மாதிரி வளர்வது கிடையாது. அவர்களை நல்லபடியாக வளர்ப்பது பெற்றோர் கையில்தான் உள்ளது.



**உங்களின் எல்லாத் திரைப் படங்களிலும் ‘குற்றம்’ வருகிறதே, என்ன காரணம்?**

நான் வருடத்திற்கு ஒரு படம்தான் இயக்குகிறேன். அந்த ஒரு கதையை எடுத்துக்கொண்டு ஆழமாக இறங்குகிறேன். 150 ரூபாய் கொடுத்துப் படம் பார்ப்போர் ‘படம் பார்த்தேன். ஜாலியா இருந்துச்சி’ என்று சொல்வதற்கு நான் படமே எடுக்காமலே போகலாம். நான் கதை சொல்லும் மிக முக்கியமான பொறுப்பில் இருக்கிறேன். சமூகம் எனக்கு கொடுத்திருக்கிற மிகப்பெரிய பொறுப்பு கதை சொல்லல்தான். அப்படி இருக்கும்போது நம் வாழ்க்கையில் என்ன இருக்கிறது என்பதை ஆழமாகக் காட்டுகிறேன். மனிதனின் ஆழ்மனதில் இருக்கக் கூடிய பிரச்சினைகளைப் பேசுகிறேன். குற்றம் என்பதே கதைதான்.

**அதுபோல் உங்கள் கதாபாத்திரங்கள் மிகக் குறைவாகவே பேசுகின்றன?**

எனக்கு பேசுவதில் நம்பிக்கை இல்லை. திரைப்படம் என்பது ஒரு காட்சியைச் சொல்வதுதான். எனது கதாபாத்திரங்கள் குறைவாகப் பேசவேண்டும் என்று நினைக்கிறேன். திரைப்படம் ஒரு காட்சி வடிவம். வளவளவென்று பேசிக்கொண்டே இருக்க, இது மேடைப்பேச்சு கிடையாது.

**உதயநிதி ஸ்டாலின் உங்கள் திரைக் கதைக்குள் எப்படி வந்தார்?**

உதயநிதியின் மனைவி கிருத்திகா உதயநிதி என்னிடம் உதவி இயக்குநராகப் பணிபுரிந்தவர். அதனால், இருவரும் நன்கு பழக்கம். நானும் உதயநிதியும் பல வருடமாகவே படம் பண்ணவேண்டும் என்று பேசிக்கொண்டே இருந்தோம். அவருக்கு எனது படங்கள் மிகவும் பிடிக்கும். அவரை இயக்குவதற்கான சூழல் இப்போதுதான் வந்தது. ‘சைக்கோ’ கதை அவருக்கு ரொம்பவே பிடித்திருந்தது.

**உதயநிதி ஸ்டாலினின் அரசியல் ஈடுபாட்டைப் பற்றி உங்கள் கருத்து?**

நான் எதுவும் சொல்ல முடியாது. அது அவருடைய அரசியல் நிலைப்பாடு. ஆனால், படப்பிடிப்பு தளத்துக்குள் உதயநிதி வரும்போது ஒருநாள்கூட தன்னை அரசியல்வாதியாக, ஒரு கட்சியைச் சார்ந்த பிரமுகராகக் காட்டிக் கொண்டதே இல்லை. மிகவும் பண்பானவர். பெரிய அரசியல் பின்னணி கொண்ட குடும்பம் என்றாலும் எல்லோரிடமும் எளிமையாக மரியாதையாகப் பழகுவார். எந்தக் காரணத்தைக் கொண்டும் படப்பிடிப்பில் அரசியலை வெளிப்படுத்தியதே இல்லை.

**இளையராஜாவின் பாடல்கள் மிகப் பெரிய அளவில் வெற்றிபெற்றுள்ளதே?**

கதை எழுதும்போதே ராஜாதான் இசை என்று முடிவெடுத்துவிட்டேன். இந்தப் படத்துக்கு ரொம்ப முக்கியமானது இசை. நிறைய இடங்களில் இசை ஒரு மருந்து மாதிரி இருக்கும். அதனால், அவர்தான் பண்ணமுடியும் என்று தெரியும். உலகின் முக்கியமான மேன்மையான இசைக் கலைஞர் ராஜா. அவரின் இசை நம் மனதில் இருக்கும் அழுக்குகளை எல்லாம் கழுவும். படம் பார்த்துட்டு, “ரொம்ப அழகா வந்திருக்கு. எனக்கு ரொம்ப பிடிச்சிருக்கு” என்று சொன்னார். என் காட்சி மொழியைப் புரிந்தவர் அவர்.


**ஏன் இன்னும் ரஜினி, கமல், அஜித், விஜய் போன்ற பெரிய நடிகர்களை இயக்கவில்லை?**

அதற்கான வாய்ப்புகள் வரும்போது செய்வேன். இப்போது, எனது 11ஆவது படம் பண்ணிக்கொண்டு இருக்கிறேன். எனக்கென்று அன்பான கூட்டம் இருக்கின்றனர். நான் பெரிய கதாநாயகர்களிடம் செல்லும்போது, அந்தக் கதை அவர்களுக்கும் பிடித்திருந்தால் பணிபுரியலாம். எனது கதைக்கேற்றவாறுதான் நடிகர்களை நான் தேர்வு செய்கிறேன்.

**வெற்றிமாறன் அடுத்தடுத்து தமிழின்**

(தொடர்ச்சி 20ஆம் பக்கம்...)





## நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய நோய் தடுக்கும் வழிமுறைகள்

# உலகம் போற்றும் உன்னத யோகா



ஆரோக்கிய வாழ்வு
N. செல்வசோதி
(Diploma in Yoga Therapy( India)
416.617.5721/416.289.2033
(After 7 pm)

பொதுவாக யோகா என்றவுடன் அனைவரின் கண்முன் விரிவது மூச்சைப் பிடித்துக்கொண்டு உடலையும் கை, கால்களையும் வளைத்து, நீட்டி, மடக்கிச் செய்யும் யோகாசன காட்சிகள்தான். ஆனால் யோகா என்பதற்கு அர்த்தமே வேறு. யோகா என்ற சமஸ்கிருத சொல்லுக்கு நேர் அர்த்தம் சேர்க்கை என்பதாகும்.

நமது உடலையும் ஆன்மாவையும் லயப்படுத்தி, அந்த ஆன்மாவை இறைவனுடன் இணைக்கச் செய்வதே யோகா எனப்படுகிறது. இந்த யோகா நான்கு வகைப்படுகிறது. நமது உடலைப் பயன்படுத்தி சில செயல்களின் மூலம் யோக நிலையை அடைவது 'கர்ம யோகம்' எனப்படுகிறது. மனத்தை ஒருநிலைப்படுத்தி அதன்மூலம் யோக நிலையை அடைவது 'ஞான யோகம்'. நமது உள்ளத்து உணர்ச்சிகளைப் பயன்படுத்தி அதன்மூலம் யோக நிலையை அடைவது 'பக்தி யோகம்' எனப்படுகிறது.

மூலாதார உயிர்ச் சக்தியைப் பயன்படுத்தி யோக நிலையை அடைவது 'கிரியா யோகம்' ஆகும். இதனையொட்டியே பதஞ்சலி முனிவர் தனது யோக சூத்திரம் என்ற நூலை நான்கு பகுதிகளாகப் பிரித்து இருக்கிறார். அவை சமாதி, சாதனா, விபூதி, கைவல்யம் என்று அழைக்கப்படுகிறது. பதஞ்சலி தனது காலத்திற்கு முன் இருந்தவற்றைப் பின் பற்றியதோடு அவற்றில் சில மாறுதல்களைச் செய்து யோக சூத்திரத்தை உருவாக்கி இருக்கிறார். அவர் தனது நூலில் யோகாசனம் பற்றிக்கூறி இருப்பது மிகச் சிறிய பகுதி தான்.

அவர் மொத்தம் 196 சுலோகங்களில் இதனை அமைத்து இருக்கிறார். 8 விதமான யோகங்களை அவர் முறைப் படுத்தி இருக்கிறார். 'அஷ்டாங்க யோகம்' என அழைக்கப்படும் அவையாவன 1. இயமம், 2. நியமம், 3. ஆசனம், 4. பிரணாயாமம், 5. பிரத்தியாகாரம், 6. தாரணம், 7. தியானம், 8. சமாதி என வகைப்படுத்தப்பட்டுள்ளன. இவற்றில் 'இயமம்' என்பது 'செய்தல்', 'நடத்துதல்' ஆகும். 'நியமம்' என்பதற்கு 'ஏற்பாடு' அல்லது 'முன்னேற்பாடு' என்பது அர்த்தம்.

தனிமனித ஒழுக்கம் இதில் அடங்கும். ஆசனம் எனப்படுவது தான் நாம் கொண்டாடும் யோகாசனம் ஆகும். அதாவது ஒருநிலையில் இருப்பது அல்லது இருக்கை தான் யோகாசனம். 'பிரணா யாமம்' என்பது மூச்சுப் பயிற்சியை குறிக்கும். 'பிரத்தியாகாரம்' என்பது வெளி உலகப் பொருளில் இருந்து விடுபடுவது. 'தாரணம்' என்பது ஒரு விளக்கு அல்லது ஒளி அல்லது புருவ மத்தி ஆகியவற்றில் மனதை ஒரு நிலைப்படுத்துவது. 'தியானம்' என்பதை அனைவரும் அறிவோம்.



அது மனதை அலைபாய விடாமல் பிடித்து வைத்து ஒரே சிந்தனையில் இருப்பது. 'சமாதி' என்பது மனதை ஆன்மாவுடன் ஒருங்கிணைப்பது அல்லது ஆன்மாவின் பேரின்ப விடுதலை.

நமது உடலில் உள்ள அவயவங்கள் என்னென்ன? அவை எவ்வாறு செயற்படுகின்றன? அதனை நமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவது எப்படி? நமது மனதின் அபார சக்திகள் எவை? அந்த சக்திகளைக் கொண்ட என்ன சாதிக்கலாம் என்ற விஞ்ஞானபூர்வ அறிவு பழங்காலத்திய இந்தியர்களுக்கு பரிபூரணமாக இருந்தால் அதையொட்டி உருவானதுதான் இந்த யோகா மற்றும் யோகாசனம், மூச்சுப் பயிற்சி ஆகியவை.

எனவேதான் யோகாசனம் என்பது நமது பழங்கால மக்களின் திறனுக்கு சரியான சான்றாகக் கருதப்படுகிறது. உடலை குறிப்பிட்ட ஒரு வகையில் வளைத்து, ஆசனங்களைச் செய்யும்போது அதனால் குறிப்பிட்ட உடல் பாகத்தின் மூலதார சக்தி தூண்டப்படுகிறது. அதன்மூலம் அபார சக்தியைப் பெற முடியும் என்ற சூட்சுமத்தை நமது முன்னோர் மிகத் தெளிவாகத் தெரிந்து வைத்து இருந்தனர்

ஏதோ ஒரு வகையான உடல்நலக் குறைவு ஏற்பட்டால் அதற்குத் தக்க ஆசனம் செய்வதன் மூலம் அந்தக்குறையை நிவர்த்தி செய்ய முடியும் என்பதை அனுபவபூர்வமாக அறிந்து வைத்து இருந்தனர். அதுபோன்ற காரணங்களால்தான் யோகாசனம் என்பது உலகம் முழுவதும் ஏற்றுக் கொள்ளப்பட்டு இருக்கிறது.

குழந்தைகள் முதல் பெரியோர்வரை யாரும் அவரவர் தகுதிக்கு ஏற்ப, தேவைக்குத் தக்கபடி யோகாசனம் செய்து பயன்பெறலாம் என்பது இதன் கூடுதல் சிறப்பு. யோகாசனம் போலவே மூச்சுப் பயிற்சி மூலம் ஏராளமான பயன்களைப் பெற முடியும் என்பதை விஞ்ஞான பூர்வமாக நிரூபித்துக் காட்டியோர் நமது முன்னோர் ஆவர். இந்த மூச்சுப் பயிற்சியும் இந்தியாவுக்கு என்றே தனி அடையாளம் கொண்டது ஆகும்.



# கனடா...

10ஆம் பக்கத்தொடர்ச்சி

முன்னர் 2002இல் SARS நோய் சீனாவின் குவாங்சோ நகரில் காட்டு விலங்குகளின் நுகர்வால்தான் ஏற்பட்டது. பின்னர் அது உலகம் முழுவதும் பரவி 17 நாடுகளில் 800 பேரைப் பலி கொண்டது. அதன் பின்னர் சீனா இவ்வாறான காட்டு விலங் குகள் விற்கும் சந்தைகளைத் தடை செய்தது. பல ஆண்டுகளுக்குப் பின்னர் இவ்வாறான சந்தைகள் மெல்ல மெல்ல மீண்டும் ஆரம்பமானது. தற்போது காட்டு விலங்குகளைச் சீனாவில் இணையத்தளம் மூலம் தெரிவுசெய்து பெற்றுக் கொள்ளக் கூடிய நிலை உருவாகியிருந்தது. சீன அரசு தற்போது மீண்டும் வனவிலங்கு களை உணவிற்காக விற்பனை செய்வதற்குத் தடை போட்டுள்ளது.

தற்போது சீன அரசால் 11 மில்லியன் மக்கள் வாழும் வுஹான் நகரம் முற்றாகத் தனிமைப்படுத்தப்பட்டுள்ளது. இதைவிட இந்த வுஹான் நகரத்தை உள்ளடக்கிய கூபே (Hubei) மாகாணம் முழுவதுமே பிரயாணத்திற்குத் தடை விதிக்கப் பட்டுள்ளது. இந்த மாகாணத்தில் 51 மில்லியன் மக்கள் 16 நகரங்களில் வாழ் கின்றனர். சீன அரசு எவ்வாறு இந்தப் பிரயாணத் தடையை அமல்படுத்தும் என ஊடகவியலாளர் சந்தேகம் தெரிவித்து உள்ளனர்.

2020 ஜனவரி 31ஆம் திகதிவரை சீனாவில் மட்டும் 9,821 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளது உறுதி செய்யப்பட்டுள்ளது. இவர்களில் 213 பேர் இறந்துள்ளனர் என உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது. இதைத் தொடர்ந்து ஜனவரி 30இல் உலக சுகாதார நிறுவனம் 'சர்வதேச பொது சுகாதார அவசர நிலை' ஐப் பிரகடனப்படுத்தியுள்ளது.

கொரோனா வைரசால் பாதிக்கப்படடோரில் 2%மானோரே இறந்துள்ளனர். முன்னர் SARS வைரசினால் பாதிக்கப்பட்டோரில் 10%மானோர் இறந்தது குறிப்பிடப்பட்டுள்ளது.

கனடாவிலும் முதல் கொரோனா வைரசால் பாதிக்கப்பட்டவருடன் சேர்ந்து வுஹான் நகரில் பிரயாணம் செய்து அவருடனேயே கனடாவுக்கு வந்த அவரது மனைவியும் தற்போது கொரோனா வைரசினால் பாதிக் கப்பட்டுள்ளார். இவர்களைவிட சீனாவுக்கு அடிக்கடி பிரயாணம் செய்யும் 40 வயது ஆண் ஒருவர் பிரிட்டிஷ் கொலம்பியாவில் கொரோனா வைரசால் பாதிக்கப்பட்டுள்ள தாக ஜனவரி 30இல் உறுதிசெய்யப்பட்டுள் ளார் என பிரிட்டிஷ் கொலம்பியா மாகாண அதிகாரி, வைத்தியர் Bonnie Henry ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார். இவர்கள் மூவர் மட்டுமே ஜனவரி 31ஆம் திகதிவரை கனடாவில் கொரோனா வைரசால் பாதிக்கப்பட்டோர் என உறுதி செய்யப்பட்டவர்களாவர்.

இதுவரை கொரோனா வைரஸ் ஆல் சீனா, ஹொங்கொங்ஜத் தவிர அமெரிக்கா, அவுஸ்ரேலியா, மலேசியா, ஜப்பான், பிரான்ஸ், கனடா, தாய்லாந்து, தென் கொரியா, சிங்கப்பூர், தாய்வான்,



கம்போடியா, ஜேர்மனி, இலங்கை, வியட்நாம், நேபாளம், பின்லாந்து, ஐக்கிய அரபு இராச்சியம், பிலிப்பைன்ஸ் இத்தாலி, பிரித்தானியா மற்றும் இந்தியா ஆகிய 22நாடுகளுக்குப் பரவியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் காற்று மூலம் பரவாமல் பாதிக்கப்பட்டவர் வெளிவிடும் நீர்த்துளிகளில் உள்ள வைரசால் பரவு வதால் வாய் மற்றும் மூக்கை மூடி முகமூடி (mask) அணிவதால் கொரோனோ வைரஸ் தொற்றுவதைத் தடுக்க முடியாது. ஏற்கனவே இந்த வைரசால் பாதிக்கப் பட்டவர் இவ்வாறு முகமூடி அணிவதால் ஏனையவர்களுக்குப் பரவாமல் தடுக் கலாம். அடிக்கடி கை கழுவுதல் போன்ற சாதாரண சுகாதார முறைகளை கடைப் பிடிப்பதாலேயே இந்நோய் தொற்றுவதை தடுக்கலாம் என்பது குறிப்பிடத்தக்கது.




# நாமும்...

04ஆம் பக்கத்தொடர்ச்சி

அதிகரிக்க வேண்டிய நிலையிலேயே உள்ளனர். சாதாரணமான கனேடிய (உள்ளூர்) வாங்குனர்களின் நிலைமை மிகவும் பரிதாபமாகவே காணப்படுகின்றது. குறிப்பாக ரொறொன்ரோவின் மத்திய பகுதியில் தொழில் புரிவோரில் ஏறக்குறைய தமது வருமானத்தின் 40% இற்கு மேலானே வருமானத்தை வாடகைக்கே செலுத்துகின்றனர். இத்துடன் இவர்களால் இன்றைய நிலைமையில் புதிதாகக் கொள்வனவு செய்வது முயல் கொம்பாகவே காணப்படுகின்றது. அல்லது பெற்றோரின் பண உதவியுடன் ஆரம்பமுதலீடு செய்து ஆதனம் வாங்குவதே சிறந்த வழியாகும். மற்றும் இருவர் அல்லது மூவர் சேர்ந்து மனை வாங்குவதனையும் காணக் கூடியதாக உள்ளது. புதிதாக சந்தைக்கு வரும் மனைகளின் அமைப்பில் மாற்றம் ஏற்படுகின்றது. மூவர் அல்லது மேற்பட்டோர் வாழக் கூடிய அறைகளுடன் கூடிய குளியல் அறைகள் (washrooms) அமைக்கப்பட இருக்கின்றன. இதனால் வாடகைப் பணத்தைப் பகிர்ந்து கொடுப்பனவு செய்யக் கூடியதாக இருக்கும். இந்நிலைமையை எதிர் காலத்தில் அதிகமான கட்டிடத் தொகுதிகளில் எதிர்பார்க்கலாம்.

இன்றைய காலத்தில், புதிதாக நிர்மாணம் செய்யும் வீடுகளின் விலை அதிகரிப்பு, மக்களை மறுவிற்பனையில் (Resale) உள்ள அடுக்கு மனை அல்லது தொடர் வீடுகள் வாங்கும் நிலையை ஏற்படுத்தலாம். எனவே எதிர்வரும் காலங்களில் மறுவிற்பனையில் அதிக வியாபாரத்தை எதிர்பார்க்கலாம். இத்தகைய வியாபாரத்தை ஏற்கனவே காணக் கூடியதாக உள்ளது.

# தேவை...

11ஆம் பக்கத்தொடர்ச்சி

◆ கடந்த ஆறு மாத காலத்தினுள் ஏதா வது வர்த்தக சேவையினை தாங்கள் கோரியிருந்த நிலைமையில் அவர்களிடம் இருந்து வரும் அழைப்புகள்.

◆ ஏற்கெனவே ஏதாவது தொலைபேசி தொடர்பு மையங்களுக்கு உடன்படிக்கை ரீதியாக அனுமதி வழங்கி அங்கிருந்து வரும் அழைப்புகள்.

ஆகியவற்றினையும் தடை செய்ய முடி யாது. அவர்களின் தொலைபேசி அழைப்பு களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்க முடியாது.

தமது தொலைபேசிக்கு அழைக்கக்கூடாது எனப் பதிவு செய்யப்பட்ட இலக்கங்களின் விபரங்களை விரும்பினால் தொலை பேசியூடாக வர்த்தகம் செய்வோர் மற்றும் நிறுவனங்கள் கட்டணம் செலுத்திய சந்தா உறுப்பினராகச் சேர்ந்து, அதனைப் பெற்று, அங்கு பதிவு செய்யப்படாத இலக்கங்களுக்கு மட்டும் அழைத்து வர்த்தக அறிமுகங்களை செய்யலாம்.

மாறாக தங்களுக்கு அழைக்கக் கூடாது எனப் பதிவு செய்தோரின் தொலைபேசி இலக்கங்களுக்கு அழைத்து அந்த முறைப்பாடு குற்றமாகக் கருதப்பட்டால் $1500 - $15,000 வரை ஒவ்வொரு தவறுக்கும் தண்டனைப் பணம் செலுத்த வேண்டி வரலாம்.

ஏனைய நாடுகளிலிருந்து வரும் தேவைப் படாத தொலைபேசி அழைப்புகளில் சட்ட அமலாக்கல்கள் சிரமமாகவிருந்தாலும், அவர்களுக்கு நிறுவனத்தினால் எச்சரிக் கைக் கடிதம் அனுப்பப்படுவது வழமை யாகும். சட்டங்களை மீறித் தண்டிக்கப் பட்டோரின் செய்திகள் பின்வரும் தலைப்பு



களில் கனடிய ஊடகங்களில் வெளிவந்து இருந்தன.

'Duct cleaning company pay $55,000 for violating do not call list'
(CBC news March 24, 2018)

' Metroland pays $240k for violating do not call list CRTC says'
(CBC news April 16, 2015)

# கூடைப்பந்து வீரர் கோபி பிரயன்ற்



விதுசிகா அருள்தாசன்
அகவை -14

கோபி பிரயன்ற் (Kobe Bryant) உலகளாவிய ரீதியில் மிகவும் பிரபல்யம் அடைந்த கூடைப்பந்து வீரராவர். ஜனவரி மாதம் 26ஆம் திகதி ஹெலிகொப்ரறில் பயணித்தபோது இடம்பெற்ற விபத்தில் உயிரிழந்தார். இதன்போது அவரது 13 வயதான மகள் கியானா பிரயன்ற் உம் உயிரிழந்துள்ளார். இவர்களது மரணம் ஒட்டுமொத்த உலக கூடைப்பந்தாட்ட ரசிகர்களை பெரும் அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

கோபி பிரயன்ற் 1978ஆம் ஆண்டு ஒகஸ்ற் மாதம் 23ஆம் திகதி Philadelphiaவில் பிறந்தார். கோபி அவரது குடும்பத்தின் ஒரே மகனாவர். அவரது அப்பா, ஜோய் பிரயன்ற் (Joe Bryant) முன்னாள் NBA கூடைப்பந்து வீரராவர். அவரது அம்மா பமிலா கொக்ஸ் (Pamela Cox Bryant).

கோபி தனது மூன்று வயதில் கூடைப்பந்து விளையாடத் தொடங்கினார். மேலும் அவருக்கு பிடித்த அணி Lakers ஆகும். கோபி பிரயன்ற் உயர்தரப் பாடசாலையில் இருந்து நேரடியாக NBA அணியில் நுழைந்தார். அவர் 1996ஆம் ஆண்டு வரை NBAயில் இருந்தார். பின்னர் Charlotte Hornets அணியால் தேர்ந் தெடுக்கப்பட்டார். பின்னர், Hornets அவரை தனது விருப்பமான அணியான Lakers அணியால் கொள்வனவு செய்யப்பட்டார். அப்போதைய காலப் பகுதியில் இரண்டாவது சீசனில் மட்டுமே அவர் நட்சத்திரமாக காணப்பட்டுள்ளார். இந்நிலையில் அவர் வெற்றிபெற மாட்டார் என்று அவரது ஆலோசகர் தெரிவித்தார். எனினும் அது தவறான புரிதல் என்பதனை அவர் புரிய வைத்தார்.

கோபி பிரயன்ற் 5 NBA சாம்பியன்ஷிப் போட்டிகளை வென்றார். அவர் NBA அணிகளில் 15 முறை உறுப்பினராக இருந்தார். 18 முறை சகல துறைகளிலும், 12-முறை 'All defensive' மற்றும் 2008ஆம் ஆண்டில் அவர் NBA அணியின் மிகவும் மதிப்புமிக்க வீரராக இருந்தார்.
2016ஆம் ஆண்டில் அவரது நிகர மதிப்பு சுமார் 350 மில்லியன் டொலராகும். 2001ஆம் ஆண்டு அவர் Vanessa Laine என்பவரை திருமணம் செய்தார். 2003ஆம் ஆண்டில், அவரது மூத்த மகள் Natalia Diamante பிரையன்ற் பிறந்தார். அவரது இரண்டாவது மகள் Gianna Marie-Onore பிரயன்ற் 2006ஆம் ஆண்டில் பிறந்தார். அவரது மூன்றாவது மகள் Bianka Bella பிரயன்ற் 2016ஆம் ஆண்டு பிறந்தார், கடைசியாக, அவரது நான்வாது மகள் Capri பிரயன்ற் 2019ஆம் ஆண்டு பிறந்தார். அவரது இரண்டாவது மகளே அவருடன் சென்ற ஹெலிகொப்ரறில் விபத்தில் உயிரிழந்தவராவர்.





34 வயதில் லீக் வரலாற்றில் 30,000 தொழில் புள்ளிகளை எட்டிய இளைய வீரர் என்ற பெருமையை அவர் பெற்றார். மிகவும் சிறிய காலப்பகுதியில் அவருக்கு 4 'All star' மிகவும் மதிப்புமிக்க வீரர் விருதுகள் கிடைத்தன. 2008 மற்றும் 2012 கோடைகால ஒலிம்பிக்கில் அவர் இரண்டு பதக்கங்களை வென்றார். 2018ஆம் ஆண்டில், அவர் தனது 'Dear Baskbetball' பட்டத்திற்காக சிறந்த அனிமேஷன் குறும்படத்திற்கான அக்கடமி விருதை வென்றார். எல்லோரும் அவரை 'பிளாக் மாம்பா' என்று அழைப்பர். இப்பெயர் அவர் தனக்குத்தானே உருவாக்கிய புனைப்பெயராகும்.

### கியானா பிரயன்ற்

கியானா பிரையன்ற் 13 வயதில் ஓர் அன்பான, வலிமையான மற்றும் பலரின் இதயங்களில் இடத்தைப் பிடித்த சிறுமியாகக் காணப்பட்டார். அவர் தனது அப்பாவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி ஓர் இளம் கூடைப்பந்து வீரராக மாறினார். விளங்கினார்.

கியானாவும் தந்தை கோபியும் மிகவும் இறுக்கமான பிணைப்பைக் கொண்டிருந்தனர். கியானா தந்தையிடமிருந்து கூடைப் பந்தாட்டத்தைக் கற்றுக் கொண்டார். மேலும் அவர் விளையாடுவதற்கு அதிக உத்வேகம் பெற்றார். அவர் UConn Huskies அணியில் விளையாடினார்.

இவ்வளவு இளம் வயதில் அவரது கூடைப் பந்து திறன்களை பார்த்த அனைவரும் அவருக்கு உற்சாகம் அளித்தனர். அவர் வளர்ந்து வந்து ' பெண்கள் தேசிய கூடைப்பந்து சங்கத்தில்' (WNBA) சேருவார் என்று பலரும் நம்பினர். WNBA சங்கத்தில் இணைவதென்பது அவரது கனவாக இருந்தது. ஆனால் துரதிர்ஷ்ட வசமாக, ஹெலிகொப்ரர் விபத்தில் உயிரிழக்க நேரிட்டது.

NBA நட்சத்திரமான கோபி பிரயன்ற் அவரது வருங்கால நட்சத்திரமான கியானா பிரயன்ற் உடன் சேர்ந்து 9 பேர் உயிரிந்தனர். அவர்கள் எப்போதும் அனைவரின் இதயத்திலும் ஓர் இடத்தைப் பெறுவர்.


ஹெலிகொப்ரர் விபத்தில் கோபி பிரயன்ற் மற்றும் அவரது மகள் உட்பட கூடைப் பந்தாட்ட பயிற்சியாளர் John Altonelli, அவரது மனைவி Keri Atobelli, அவர்களது மகள் (கியானாவின் அணித் தோழர்) Alyssa Altobelli, Alyssaவின் கூடைப்பந்துப் பயிற்சியாளர் Christina Mauser, கோபியின் தனியார் விமானி Ara Zobayan, Sarah Chester மற்றும் அவரது மகள் Payton Chester ஆகியோர் உயிரிழந்தனர்.

# உலகை அச்சுறுத்தும் கொரோனா உயிர்கொல்லி

2020ஆம் ஆண்டின் ஆரம்பப் பகுதியில் சீனாவின் பெரிய பிராந்தியமான வுஹானில் உருவான உயிர்க்கொல்லி நுண்ணங்கிக்கு கொரோனா வகை வைரஸ் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. பல்வேறுவிதமான வைரஸ் வகைகளில் இதுவும் ஒன்றாகும். இது விலங்குகள் மற்றும் பாலூட்டிகளைப் (மனிதர்) பாதிக்கின்றது. கொரோனா வைரஸ் பெரும்பாலும் வௌவால் மற்றும் சிலவகைப் பாம்புகளிலிருந்து வருகிறதென்றே நம்பப்படுகின்றது.

11 மில்லியன் மக்கள் வாழும் வுஹான் பிராந்தியத்தில் நிமோனியா காய்ச்சல் ஏற்பட்டபோது இந்த வைரஸ் தொடர்பில் தகவல் வெளியானது. ஆனால் இது என்ன நோய் அல்லது எதனால் காய்ச்சல் ஏற்பட்டது என்பதற்கான ஆதாரபூர்வமாக எந்தத் தகவல்களும் இல்லை. இந்த வைரஸ் குழந்தைகள் மற்றும் வயதானோரை மிகவும் பாதிக்கிறது. இது சுவாச மண்டலத்தைப் பாதிக்கும். பலவீனமான சுவாச அமைப்பு உள்ளோருக்கு இது மிகவும் தீவிரமாகப் பாதிக்கும்.

மூக்கு வடிதல், இருமல், தொண்டை புண், சளி போன்றவை இதற்கான அறிகுறி களாகும். இந்த வைரஸ் தாக்கம் தீவிரமானோருக்கு நிமோனியாவின் அறிகுறிகள் ஏற்படலாம். கொரோனா வைரஸ் மனிதத் தொடர்பு அல்லது நோய் வாய்ப்பட்ட ஒருவருக்கு அருகில் இருப்பதன் மூலம் மிக வேகமாகப் பரவுகிறது. இது இருமல், தும்மல்



அல்லது உடல் தொடர்புகளிலிருந்து பரவுகிறது.

நோய்வாய்ப்பட்ட ஒருவரைத் தொட்டுவிட்டு அதே கைகளோடு நமது கண், வாய் அல்லது மூக்கைத் தொட்டால் அது நம்மை பாதிக்கும். வுஹானில் உள்ள ஒரு

(தொடர்ச்சி 20ஆம் பக்கம்...)

## இளையோர் ஆக்கம்

இதில் 19 வயதும் அதற்கு உட்பட்டவர்களும் தமிழில் எழுதும் சொந்த ஆக்கங்கள் கதை, கட்டுரை, கவிதை எதுவாக இருந்தாலும் தரமானதாயின் பிரசுரிக்கப்படும்.

**இலங்கை பொறியியல் பட்டதாரிகள் கனடாவில் பொறியியல் துறையில் வேலை பெறுவதற்கான கருத்தரங்கு**

காலம்: பெப்ரவரி 15, 2020 மாலை 6:30 முதல் 11:00 மணிவரை
இடம்: JC Banquet Hall.
1686 Ellesmere Road, Scarborough Town Centreக்கு அருகில்

ஏராளமான துறைசார் நிபுணர்களும் நிறுவனங்களும் கலந்து கொள்கின்றன. பொறி யியல் துறையில் வேலை பெறுவதற்கான தொடர்புகள், சந்தர்ப்பங்கள் மற்றும் ஆலோசனைகள்.
முக்கிய பேச்சாளர்கள்: பேராசிரியர் சேவியர் பெர்னாண்டோ Ryerson University, பேராசிரியர் சான் வீரசிங்க - முன்னாள் பொறியியல் துறை பீடாதிபதி University of Calgary
தொடர்புகளுக்கு: தயாபரன் 647.340.8649
Underground Parking, Buffet Dinner, Cash Bar

# சித்தர்கள் வாழ்ந்த சிறப்புப் பெற்ற சித்தன்கேணி ஊர்

கணபதிப்பிள்ளை மாரிமுத்து
கனடா



## பகுதி - 02

### ஆலயங்களும் வழிபாடும்

சித்தர்கள் காலம் தொடக்கம் சகல ஆலயங்களும் நல் விருட்சமாகிய ஆலமரம், அரசமரம், வேம்பு, புளி, நாவல் போன்ற படர்ந்த மரங்களின் அருகே கொட்டில்களாக அமைத்தே எம் முன்னோர் வழிபாடுகள் செய்தனர். இவ்வூரிலுள்ள பிள்ளையார், சிவன், அம்மன் ஆலயங்களும் இவ்வாறே அமைத்து வழிபடலாயினர். பிள்ளையார் ஆலயத்திற்கு அருகே உள்ள நாகதம்பிரான் ஆலயமும் புளியமரத்தின் கீழ் வைத்தே ஆதரிக்கப்பட்டதாகும். தற்பொழுது கடம்ப முருகன் வழிபாடும் அந்த இடத்தில் கடம்ப மரம் இருந்ததினால் தான் கடம்ப முருகன் என அழைத்தனர். இப்போ அங்கு புளியமரமும், கடம்பமரமும் இல்லை. ஆரம்பத்தில் இருந்த விருட்சமான மரங்களும் இவ்வாறே மறைந்திருக்கலாம். எனினும் சித்தன் கேணியை அடுத்த கிராமத்தில் உள்ள அரசடி வைரவர் ஆலயத்தை சுற்றியும் அரசமரம் இன்றும் காட்சி தருகின்றது. இவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட ஆலயங்கள் படிப்படியாகக் கட்டிடங்கள் அமைத்து மூலஸ்தானங்கள், கோபுரங்களைக் கொண்ட ஆலயங்களாக மாறின. இவ் ஆலயங்களின் மூல மண்டபங்களை அமைக்கத் தொண்டாற்றிய சித்தன்கேணி ஊரையும் சங்குவேலியையும் சேர்ந்த முதலாளி கா. வைத்திலிங்கம் குடும்பத்தாரின் பெயர்கள் இவ் ஆலயங்களின் முகப்புக் கல்வெட்டில் இன்றும் காணக் கூடியதாக உள்ளது. காலப்போக்கில் இக் கோவில்களுக்குக் கோபுரங்கள் கட்டப்பட்டு இன்று கோபுர தரிசனம் செய்யக் கூடிய நிலையில் உள்ளன. இக்கோவில்களில் கொடித்தம்பம் நிறுவப்பட்டு ஆண்டு தோறும் கொடியேற்றம் திருவிழாக்கள் இனிதே நடைபெறுகின்றன. தற்பொழுது இவ் ஆலயங்களுக்கு ஊர் மக்களால் பரிபாலன சபை அமைக்கப்பட்டு முறை தவறாது சமயக் கிரிகைகள், வழிபாடுகள் என்பன சிறப்பாக நடைபெறுகின்றன. இலங்கையிலேயே ஆரம்பத்தில் முப்பத்தி மூன்று ஓமகுண்டங்கள் வைத்து மஹா கும்பாபிஷேகம் நடந்த பெருமை மகா கணபதிப்பிள்ளையார் ஆலயத்திற்கே உண்டு. சிவன் கோவில் ஆனி உத்தரத் திருவிழாவும், மார்கழித் திருவெம்பாவை உற்சவமும் நடைபெற்று வருகின்றன. வருடத்தில் இரு தடவை ஐந்து தேர்களிலும் எம் பெருமான் வெளிவீதி வரும் காட்சியைத் தரிசிக்கக் கூடியதாக இருக்கின்றது. சிதம்பரத்தைப் பின்பற்றி இங்கு உற்சவங்கள் நடைபெறுகின்றன. துறட்டிப் பனையில் கோவில் கொண்டுள்ள முத்து மாரி அம்மன் வருடத்தில் இருமுறை தன் இருப்பிடத்தில் இருந்து புறப்பட்டு பிள்ளையார் கோவிலுக்கு வந்து காட்சி கொடுத்து, இருப்பும் செல்வார். கோவில் திருவிழாவின் போது வேட்டைத் திருவிழாவுக்கு சங்கரத்தை பத்திரகாளி அம்மன் கோவில் சென்று அங்கு வாழை வெட்டி, பூசை நடந்த பின்னர் பிள்ளையார் ஆலயம் வந்து பூசை நிறைவேற்றிச் செல்வதும், அடுத்ததாக நவராத்திரிக்கு பிள்ளையார் ஆலயம் வந்து கன்னி வாழை வெட்டி பூசை நடத்தி ஊர்வலமாக இருப்பிடம் சேர்வதும் இக் காட்சிகளாகும். சித்தன்கேணியைச் சுற்றி கண்ணகை அம்மன் ஆலயம், அடைக்கலந்தோட்ட கந்தசுவாமி கோவில், வழக்கம்பரை அம்மன் ஆலயம், சங்கரத்தை பத்திரகாளி அம்மன் ஆலயம், அரசடி வைரவர் ஆலயம், வீரபத்திர சிவன் ஆலயம் என்பன அமைந்து எமது ஊருக்கு அருளாட்சி வழங்குகின்றன. எமது ஊர்க் கோவில்களில் நவராத்திரி பூசை, திருவெம்பாவை பூசைகள் நடைபெறும். இரு கோவில்களுக்கு ஊஞ்சல் பாக்கள் உண்டு அத்தெய்வங்களை வெளிநாட்டில் உள்ளோர் தமது குல தெய்வங்களாக நம்பிக்கையுடன் வணங்கி வாழ்கின்றனர். பிள்ளையார் ஆலயத்தில் கல்யாண மண்டபமும், அம்மன் ஆலயத்தில் அன்னதான மண்டபமும் நிறுவப்பட்டுள்ளன.



### காவல் தெய்வமான வைரவர் ஆலயங்கள்.

தொண்டு தொட்டு இங்கு மக்கள் வளவுகளில் வைரவ சூலங்கள் அமைத்தும் வழிபாடுகள் செய்து வருகின்றனர். போத்துக்கேயர், டச்சுக்காரரின் சமய ஆக்கிரமிப்பே இவ் வழிபாடு முக்கியத்துவம் பெறுவதற்குக் காரணமாக அமைந்தது. வெளிநாட்டவர்கள் சிலுவை வழிபாட்டுக்கே முக்கியத்துவம் கொடுத்து சைவ சமய வழிபாட்டிற்குத் தடை செய்த காரணத்தால் அவர்கள் பகலில் பயந்து சிலுவை போல கம்பியை நேராக நீட்டிப் பின்னர் தாம் வணங்கும்போது வைரவர் சூலமாக உருப்படுத்தி மடித்து வணங்குவர். தற்பொழுது உறுநாவலை பன்னமூலை காசிப் பேரன் வைரவர் ஆலயம், சேமாகலட்டி வைரவர் ஆலயம், கலட்டிவீதியின் முன் உள்ள சிவ சக்தி வைரவர் ஆலயம், கலைநகரில் இருக்கும் வைரவர் ஆலயம், சித்தன் கேணி கேணியின் அருகில் அமைந்துள்ள வைரவர், கலட்டிப் பகுதியில் புனலை வைரவர், வட்டுக் கிழக்கில் கலட்டி வீதியில் உள்ள புனரமைக்கப்பட்ட வைரவர் ஆலயம் மற்றும் அனேகமான வீட்டின் வளவுகளில் அமைந்து வணங்கும் பல வைரவர் ஆலயங்களும் உள்ளன. எல்லா வைரவர் ஆலயங்களும் அந்த வளவுகளில், அயலில் வாழ்பவர்களே பராமரித்து வருகின்றனர். இவற்றை விட அந்திரான் ஒழுங்கைப் பகுதியில் கேணியடிப் பிள்ளையாரும், சித்தன்கேணி சந்திக்கு வடக்கே நாககன்னி ஆலயமும் அமையப் பெற்று அலங்காரத் திருவிழாக்களும் நடந்து வருகின்றது.

### கேணிகளும் கிணறுகளும்

இவ்வூரில் கோவில்களுடன் இருக்கும் கேணிகளை விட, சித்தன்கேணியின் எல்லைகளிலும் பாதை ஓரங்களிலும் பல கேணிகள் அமைந்துள்ளன. ஆரம்ப காலத்தில் இருந்த சித்தர் காலத்தின் பல கேணிகள் பராமரிப்புகள் இன்றித் தூர்ந்து போய் மூடப்பட்டுவிட்டன. சித்தர்கள் வழிபாடு செய்த இடமான சிவன் ஆலய பிரதான வீதிப் பகுதியில் உள்ள கேணி திருத்தம் செய்து பராமரிக்கப்பட்டு வருவதால் அது பார்வைக்குரியதாக உள்ளது. சித்தர்கள் ஊர் எல்லைகளில் ஏழு கேணிகள் அமைத்துப் பாவிக்கப்பட்டதாக வரலாறு உண்டு. துறட்டிப்பனையில் இரண்டு கேணிகள் உள்ளது அதில் வயல் பக்கத்தில் உள்ள கேணியை சின்னக்கேணி என அழைத்தனர். அன்றைய மக்கள் இறந்தவர்களின் பிதிர்க் கடன் இங்கு செய்தார்கள். காலப் போக்கில் அது மருவி விட்டது. இப்பகுதி வயலும், பனைகள் சார்ந்த இடமாகையால் இப் பெரும் நிலத்தில் யானைகள் கட்டி வளர்க்கப்பட்டதாகவும், வயல் வெளியில் உள்ள குளமும், இக் கேணிகளும் யானைகளின் நீர்ப் பாவனைக்கு செய்ததாகவும், துறட்டி கொண்டு யானைகளை அடக்கி பனை வெளியில் கட்டி வளர்த்ததன் காரணமாக துறட்டிப்பனை என்ற பெயர் வந்ததாகவும் அறிய முடிகிறது. எது எப்படியோ அன்றைய மக்கள் வயலில் விவசாயம் செய்து, யானை கட்டிப் போர் அடித்திருக்கிறார்கள். அன்று இவ் ஊர் இளைஞர்களின் நீச்சல் தடாகமாக சித்தன்கேணி கோவில் கேணிகள் இருந்தது. இங்கு ஒல்லித் தேங்காய் கட்டி அதன் உதவியுடன் நீச்சல் பழகினார்கள். வளவுகளில் நல்ல நீர் நிலைகொள்ள கேணிகள் நீர்த்தேக்கம் உதவியாக அமையும் என்று ஆராச்சியாளர்களின் கருத்தாகும். எல்லா வளவுகளிலும் கிணறுகளும் உண்டு. கிணற்று நீர்கள் யாவும் நன் நீர்களாகும். என்றும் கோவில்க் கிணற்று நீரும், வயல் கிணற்று நீரும் தனிச் சுவையுடையன. அதிலும் பிள்ளையார் கோவிலின் கிணற்று நீர் தனிச் சுவையுடையது. இதன் காரணமாக அயல் ஊரில் உள்ளவர்களும் இங்கு வந்து தண்ணீர் எடுத்துச் செல்வார்கள். அந்த விடயத்தில் சித்தன்கேணி மக்கள் கொடுத்து வைத்தவர்களே.

## வாழ்க்கைப்பயணம்

முருகனைப்போலொரு கணவன் என்றேன்
சண்முகநாதனே கணவரானார்!
அவன் தேவியரைப் போல் குழந்தைகள் இரண்டு வந்தன!
குமரனைப் போலும் ஒன்று!
நிறைய உறவுகள் கண்டேன்
உறவுகளோடுபேசி மகிழ நினைத்தேன்!
உறவுகளால் பேசப்படும் பொருள் நானானேன்!
எப்போதும் விமர்சிக்கப்படுவதாலேயே
சரியாகச் செயல்படுகிறேன் என்று
இறுமாந்திருந்தேன்!
இறுமாப்பு கர்வமாயிற்று கணவரைப் பிரிந்தேன்!
திரும்பிப்பார்க்கிறேன்
கடந்து வந்த பாதை
சரிதானா என்று தெரிந்தவர்கள் சொல்லுங்களேன்!!



TUTORING
KEEN TUTORING CENTRE
By Qualified & Experienced Tutors
➢ CHEMISTRY, PHYSICS, BIOLOGY
➢ FUNCTIONS, ADV. FUNCTIONS
➢ CALCULUS & VECTORS, DATA MGT
➢ SCIENCE, MATH, ENGLISH
GR 9-12, UNIV. 1st & 2nd Yr; "Affordable Fees"
Call: 647 341 3975 / 647 869 3974 / 416 335 5956
www.keentutoringcentre.com
✓ High School ACADEMIC/UNIVERSITY
✓ IB & AP PROGRAMME
✓ MCAT Classes
✓ EQAO GR 3 & 6

# கல்லீரல் அழற்சி



சிந்தனைப்பூக்கள்
எஸ். பத்மநாதன்

## Hepatitis


கல்லீரல் அல்லது ஈரல் என்பது முதுகெலும்புள்ள உயிரினங்களிலும் வேறு சில விலங்குகளின் உடலிலும் காணப் படும் முக்கிய உள்ளுறுப்பாகும். மனி தருக்கு மார்புக்கூட்டின் கீழ்புறத்தில் வயிற்றறைக்கு வலதுமேல் பக்கத்திலும் நெஞ்சறையையும் வயிற்றறையும் பிரிக்கும் உதரவிதானத்திற்குக் கீழாகவும் பெரிய ஆப்பு வடிவத்தில் கல்லீரல் அமைந்திருக் கிறது. இதற்குக் கீழே பிந்தப்பை (Gallbladder) இருக்கிறது. இடது புறத்தில் இரைப்பை உள்ளது. உடல் உறுப்புகளில் தோலுக்கு அடுத்தபடியாக பெரிய உறுப்பு இதுவாகும்.

கல்லீரல் 500இற்கு மேற்பட்ட தொழிற்பாடு களைச் செய்கிறது. உடலின் உள்ளே உள்ள சூழலைக் கட்டுப்படுத்தி சமன் படுத்துதல் உட்பட பல செயல்களை இது செய்கிறது. பித்தத்தை உற்பத்தி செய்வது டன் உடலின் வளர்சிதை மாற்றம் (Metabolism) மூலம் நச்சுத்தன்மையை அகற்றுவதும் இதன் தொழிற்பாடாகும். உணவு செரிமாணம் செய்ய இதுவே உதவுகிறது. க்ளைகோஜன் (Glycogen) என்னும் சக்கரைத் தன்மையை சேகரிப் பதுடன் உயிர்ச் சத்துக்களான: A, D,E, K, B12 யாவற்றையும் தனக்குள் பாதுகாக்கி றது. எமது இரத்தம் உறையாமல் பாதுகாப்பதும் இதுதான். இரத்தத்தை சுத்திகரிப்பதும் இங்கு நடைபெறுகிறது. 1 நிமிடத்திற்கு 1.4 லிட்டர் இரத்தத்தை சுத்திகரிக்கிறது. ஒரு குறிப்பிட்ட நேரத்தில் எமது உடலிலுள்ள இரத்தத்தில் 10 வீதம் இங்கு இருக்கும்.

சராசரி 3 இறாத்தல் நிறைகொண்ட கல்லீரல் ஒவ்வொருவரது நிறை, பால் வேறுபாடுகளுக்கு ஏற்ப மாறலாம். ஓர் இரசாயனத் தொழிற்சாலையைப் போன்று உள்ள கல்லீரல் எமது பலம் ஆகும். அதுவே ஓர் இயந்திரம் மற்றும் மருந்தகம். இதன் ஒரு பகுதியை அகற்றினாலும் வளரக்கூடியது. இது வாகும். தனது சேதத்தைத் தானே சரி செய்யும் அற்புத ஆற்றல் இதற்குண்டு. இவ்வளவு முக்கிய உறுப்பான கல்லீரலில் ஏற்படும் நோய்கள் பலவாகும். கல்லீரல் அழற்சி, மஞ்சள் காமாலை (Jaundice) வயிற்று நோவு, இரத்தப் பெருக்கு, களைப்பு, எடை குறைதல், ஈரல் வீக்கம், ஈரல் புற்றுநோய் போன்றவை கல்லீரலில் ஏற்படும் நோய்களாகும். இவற்றுள் கல்லீரல் அழற்சி முக்கியமனதாகும். எல்லா நோய்களுக்கும் அடையாளமாவது இந்த அழற்சியாகும்.

கல்லீரலில் ஏற்படும் அழற்சியின்போது திசுக்கள் சார்ந்த உயிரணுக்கள் (Cells) சற்று வீக்கம் பெறுகிறது. பொதுவாக ஈரல் இதனை சரி செய்யும். அவ்வாறு சரி செய்ய முடியாத ஆரம்ப நிலையில் அது தற்காலிக (Acute hepatitis) அழற்சி யாகும். பல மாதங்களாக நீடித்த பின்பு நீண்டகாலம் தொடர்ந்தால் அது மிகக் கடுமையான (Chronic hepatitis) அழற்சி யாகும். உலகில் பெருமளவு மக்களை இவ்வாறான அழற்சியே பாதிக்கிறது.

Liver, Gallbladder, Pancreas and Bile Passage



தற்போது மருத்துவர்கள் இவ்அழற்சியை A B C D E என ஐந்து பிரிவுகளுக்குள் வரையறை செய்துள்ளனர். ஒவ்வொரு அழற்சியும் வேறுவேறு நோய்க் குறிகளை கொண்டதாகும்.

### கல்லீரல் அழற்சி நோய்களின் வகைகள்:

**பொதுவான கல்லீரல் அழற்சி நோய்கள் (Hepatitis A,B,C):**

**கல்லீரல் அழற்சிநோய் A:** இது கல்லீரல் அழற்சி நுண்ணுயிரி Aயால் உண்டாகிறது. நுண்ணுயிரியினால் உண்டாகும் கல்லீரல் அழற்சியில் இதுவே பரவலான வகை யாகும். இது பொதுவாக சுகாதாரமற்ற இடங்களிலும் சாக்கடை வசதிக் குறைபாடு உள்ள இடங்களிலும் ஏற்படும். இந்நோய் பெரும்பாலும் வாய்வழிக் கழிவு களினாலும் மலக் கழிவுகளினாலும் பரவு கிறது. இது பொதுவாகக் குறைந்த கால அளவினதாகும்.

ஒவ்வொரு அழற்சிக்கும் பொதுவானதும் விசேடமானதுமான நோய் அறிகுறிகள் உள்ளன. அழற்சி என்பதற்குப் பொதுவாக வாந்தி எடுத்தல், களைப்பு, வயிற்றைக் குமட்டுதல், வயிற்றுவலி, களிமண் நிறமான மலம் வெளியேறுதல், கருமை யான சிறுநீர், மூட்டுவலி, தோல்கடி என்பன ஏற்படலாம். சிலவேளைகளில் கண் மஞ்சளாதல் நிகழலாம். இதனால் ஏற்படுவது மஞ்சள் காமாலை நோய் ஆகும். இது ஒருசில மாதங்களில் போய் விடலாம். இல்லாதுவிடில் வைத்தியரின் உதவி தேவையாகும். நாட்டை விட்டு வெளியே சென்று வந்தோர், அழற்சி உள்ளவர்களுடன் பழகியோர், அழற்சி உள்ளவர்களுடன் பாலுறவு கொண்டோர் இதனால் பாதிப்புறுவர். தடுப்பூசி போட வேண்டிய சூழ்நிலை ஏற்படலாம். இதன் அறிகுறிகள் மூன்று மாதத்திற்குள் மறைந்துவிடும். அறிகுறிகளை நீக்கும் இபுபுரூஃபன் (Ibuprofen) போன்ற வலி குறைப்பான்களைக் (Pain killers) கொடுப் பதைத் தவிர இந்த A வகை கல்லீரல் அழற்சிக்கு வேறு மருத்துவம் எதுவும் இல்லை. இந்நோயைத் தடுக்கும் தடுப்பூசி உண்டு. இந்நுண்ணுயிரிகள் அதிகமாக இருக்கும் இந்தியத் துணைக்கண்டம், ஆபிரிக்கா, மத்திய மற்றும் தெற்கு அமெரிக்கா, தொலை கிழக்கு மற்றும் கிழக்கு ஐரோப்பா நாடுகளுக்குச் செல்லும் ஒருவருக்கு இத்தடுப்பூசி பரிந்துரை செய்யப்படுகிறது.

**கல்லீரல் அழற்சிநோய் B:** இது கல்லீரல் அழற்சி நோய் நுண்ணுயிரி B யால் ஏற்படுகிறது. இது இரத்தத்திலும், இரத்த நீர்மங்களான விந்து, பெண் உறுப்புக் கசிவுகள் ஆகியவற்றிலும் காணப்படுகின்றன. எனவே பாதுகாப்பற்ற உடலுறவு அல்லது போதைப் பொருள் செலுத்தும் ஊசி ஆகியவைகளால் பரவுகிறது. போதைப் பொருள் பழக்கம் உள்ளோரிடம் இது பரவலாகக் காணப் படுகிறது. இது இந்தியாவில் பரவலாகவும், சீனா, மத்திய மற்றும் தென்கிழக்கு ஆசியா, சகாராவை ஒட்டிய ஆபிரிக்கப் பகுதிகள் போன்ற உலகின் பிற பகுதி களிலும் காணப்படுகிறது. இந்நோயால் பாதிக்கப்பட்டிருக்கும் பெரும்பாலானோர் இந்த வகையான நுண்ணுயிர்களை எதிர்த்து நின்று இரண்டொரு மாதங்களில் முற்றிலுமாகக் குணமடைய முடியும். இந்த நோயுடன் வாழ்வது சுகமாக இல்லா விட்டாலும் இது பெரும்பாலும் நீடித்த பாதிப்பை ஏற்படுத்துவதில்லை. இருப்பினும் ஒருசிலருக்கு இது நீடித்த நோயாக உருவாகும் வாய்ப்புள்ளது. இது குறுகிய காலக் கல்லீரல் அழற்சி B என்று அழைக்கப்படுகிறது. இதற்குத் தடுப்பூசி உண்டு. போதைப் பொருளை ஊசி மூலம் பயன்படுத்துவோருக்கு இந்நோய் தாக்கும் ஆபத்து உள்ளதால் இத்தடுப்பூசி பரிந்துரைக்கப்படுகிறது.

அழற்சி B இரத்தத் தொடர்பு உள்ளது. அழற்சியுள்ளோர் மூலமான குழந்தை களும் தாய் மூலமாகப் பிறப்பிலேயே இவ் அழற்சிக்கு உட்படலாம். உமிழ்நீர் மூலம் வைரஸ் உட்செல்லலாம், டயலிசிஸ் எனப்படும் சிறுநீரக வைத்தியம், மருத்துவ நிலையங்களில் வேலை செய்தல், பச்சை குத்துதல் போன்றவற்றால் இவ் அழற்சி ஏற்படலாம். இவ்வாறான அழற்சி உள்ளோருக்கு: களைப்பு, வயிற்று நோவு, வயிற்றில் நீர் சேர்தல், வயிறு, தொண்டை என்பனவற்றில் இரத்தக் கசிவு ஏற்படல், தடுமாற்றம், நிமோனியா போன்றவை ஏற் படலாம். உடலில் நீர் வற்றுதல் நிகழும். சிலருக்குப் புற்றுநோயும் ஏற்படலாம்.

ஆசியா, ஆபிரிக்கா, தெற்கு பசுபிக் தீவுகள், மத்திய கிழக்கில் சில பகுதிகள், கிழக்கு ஐரோப்பா, தென் அமெரிக்கா ஆகிய நாடுகளில் பரவல் உள்ளதாக உலக சுகாதார நிறுவனம் (WHO) கருதுகிறது.

இவ் அழற்சிக்குப் பல இரத்தப்

(தொடர்ச்சி 34ஆம் பக்கம்...)

MOHAN
HOMEOPATHIC CLINIC
& MASSAGE CLINIC

• கழுத்து, முதுகு நோவு
• வாகன விபத்து, மன அழுத்தம்
• விளையாட்டுக் காயங்கள்
• தலையிடி, தலைவருத்தம்

போன்ற நோய்களிற்கு அணுகுங்கள் டாக்டர் ஜே. மோகன்



Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

• STRESS
• SKIN PROBLEM
• RESPIRATORY PROBLEMS
• DIGESTIVE PROBLEMS
• VARICOSE VEINS
• BACK PROBLEM / NECK PROBLEM
• TENNIS ELBOW PROBLEM
• TREAT WITH MASSAGE THERAP
• ALLERGIES
• SEXUAL PROBLEMS
• SEXUAL PROBLEMS
• CHOLESTEROL • TUMOR
• FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

Cough, Flu, Depression, Anxiety, Asthma, Tonsillitis
Gout, Arthritis, P.M.S, Leucorrhea, Migraines, Hair Loss
Diabetes, Cystitis, Cancer, Prostatitis, Obesity, Hemorrhoids
Stomatitis, Colitis

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

TEL: 416-298-7537/416-291-3022

5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4

# நிலா...

13ஆம் பக்கத்தொடர்ச்சி

களைத் தமது ஈர்ப்பின் வலிமையினால் இழுத்துச் சேர்த்துக் கொள்ள, பெரிய துண்டு புவியாகவும், மற்றையது சந்திரன் ஆகவும் தங்களை மாற்றிக் கொண்டன. இதனை ஏற்றுக்கொள்ளக் கூடியதாக, புவியின் கனிமங்கள் சந்திரனில் அதிகம் இருப்பதைச் சுட்டிக் காட்டுகின்றனர், இதனை ஆதரிக்கும் வானவியலாளர்கள்.

கோள் தியா முற்றாகவே உடைந்து விண்கற்களாகவும், தூசுக்களாகவும் மாறிவிட கதிரவ வீசுசக்தி அவற்றினை வெகு தூரத்திற்குத் தள்ளிக் கொண்டு போய்விட்டது. ஆனால் சில வானவியலாளர்களின் கருத்து வேறாக இருக்கின்றது. காயா, தியா மோதலில் காயாவின் பெரும்பகுதி பாறையாகவே இருந்து விட்டது. அதுதான் புவியாகப் பின்னர் மாறியது. காயாவின் மீதி, தூசுக்களாக மாறிவிட்டது. தியாவும் உடைந்து பெரும் தூசிப்படையாக மாறிவிட்டது. இவ்விரு தூசுப்படைகளும் ஈர்ப்பினால் ஒன்றிணைந்து காயாவின்



இப்போதிருக்கும் பாறை உலகினை, அதாவது எங்களின் புவியினை சுற்றிவரத் தொடங்கின. இக்கூட்டுத் தூசுப்படையே காலப் போக்கில் ஒன்றிணைந்து ஈற்றில் சந்திரனாக மாறியது என்கின்றனர்.

சந்திரன் தோற்றம் பற்றிய ஏராளமான கருதுகோள்களில் இவையிரண்டுமே பெரிய அளவிற் கருத்திற் கொள்ளப் படுகின்றன. ஆனாலும் இன்னமும் சுவாரசியமான விடயங்கள் இந்தப் பிறப்புத் தொடர்பாக உள்ளன. இனிவரும் நாட்களின் உலாக்களில் அவை பற்றியும் பார்ப்போம், சரிதானே!

# என் மொழி...

14ஆம் பக்கத்தொடர்ச்சி

**முக்கியமான நாவல்களைப் பட மாக்குகிறார். நல்ல வாசிப்பு பழக்கம் உடைய உங்களிடமிருந்து ஓர் இலக்கியப் படைப்பைப் படமாக எப்போது பார்க்கலாம்?**

ஒரு நாவலை முழுதாகப் படமாக எடுக்க முடியாது. நிறைய மாற்றங்கள் ஏற்படுத்த வேண்டும். வெற்றிமாறன் அந்தக் கையை பிடித்துவிட்டார். அதனால், அடுத்தடுத்து பண்ணுகிறார். ஆனால், எனக்கு சொல்ல வேண்டிய கதைகள் நிறைய என்னிடமே இருக்கிறது.

**சென்னை புத்தகக் காட்சியில் என்னென்ன புத்தகங்கள் வாங்கினீர்கள்?**

எதுவும் வாங்கவில்லை. புத்தகங்கள் வாங்கிக்கொண்டே இருக்கிறேன். புத்தகத் திருவிழாவில்தான் போய் வாங்கவேண்டும் என்று அவசியமில்லை. இப்போதுதான் லண்டன் போய்விட்டு வந்தேன். அங்கு, ஐந்தரை லட்சம் ரூபாய்க்குப் புத்தகம் வாங்கினேன். என்னுடைய துணிகளை எல்லாம் சாலையில் போட்டுட்டு புத்தகத்தை மட்டும் பெட்டியில் போட்டுக் கொண்டு வந்துவிட்டேன். அதுவும், அதில் பாதிதான் எடுத்துவர முடிந்தது. மீதி நண்பன் வீட்டில் உள்ளது. அது எப்போது வரும் என்று யோசிக்கிறேன். அதைக் கொண்டு வருவதற்கான செலவு புத்தகத்தைவிட இரண்டு மடங்கு அதிகமாக உள்ளது.



**உங்கள் கதாநாயகர்கள் நேராகவே பார்ப்பதில்லையே, ஏன்?**

இந்த வாழ்க்கையை என்னாலே நேராகப் பார்க்க முடியவில்லை. அவனால் மட்டும் எப்படி நேராக பார்க்கமுடியும்? என்னுடைய கதாநாயகர்கள் எல்லாருமே என்னுடைய ஒரு பகுதிதான். எல்லா கதா நாயகர்களிலும் நான் வாழ்ந்திருக்கிறேன். எல்லா கதாபாத்திரங்களிலும் நான் இருக்கிறேன். மேடைகளில் பல இடங்களில் என்னைப் பார்த்தால் ஒன்றை கவனித்திருப்பீர்கள், தலைகுனிந்துதான் இருப்பேன். என் கதாபாத்திரத்தை வாழ்க்கையின் கடைகோடி வரை தள்ளிப் பிறகு எப்படிப் போராடி வருகிறான் என்று காட்டுகிறேன். தலைகுனிந்து வருவதை முக்கியமான உடல்மொழியாகப் பார்க்கிறேன்.

**இந்திய குடியுரிமை திருத்த சட்டத் திற்கு எதிரான போராட்டங்கள் நாடு முழுவதும் வலுப்பெற்றுள்ளதே? ஒரு படைப்பாளியாக எப்படி பார்க்கிறீர்கள்?**

ஒரு படைப்பாளியாக சமூகம் இயங்கு வதை சுய கருத்தோடு தள்ளி நின்று பார்க்கிறேன். போராட நல்ல அரசியல் வாதிகள் இருக்கின்றனர். மற்றபடி, ஒரு படைப்பாளியாக என் கருத்தை சொல்ல வேண்டும் என்பது எனக்கு அவசியமாகப் படவில்லை. அதற்காக கருத்துகளை சொல்லாமல் இருந்ததில்லை. எனது படங்களில் தீர்க்கமாக எனது அரசியலை முன்வைக்கிறேன். என் மொழி திரைப்படம் தான்.

**ஆனால், அனுராக் காஷ்யப் உட்பட பல முக்கிய இந்திய திரைப்பட இயக்குநர்கள் தங்கள் கருத்தை வெளிப்படையாக சொல்கிறார்களே?**

அனுராக் காஷ்யப் அவரது மனதில் படுவதைப் பேசுகிறார். அது அவருடைய சுயசிந்தனை. அவர் மாதிரி நான் ஆக முடியாது. என்னுடைய சுயசிந்தனை வேறாக இருக்கும்.

**ரஜினி, கமல் என திரைப்படத் துறை யிலிருந்து அரசியலுக்கு வருகிறார்களே?**

அவர்களுக்கு சுதந்திரம் இருக்கு. இந்தியா ஒரு ஜனநாயக நாடு. அவரவர் விருப்பம்.

**சமீபத்தில் நீங்கள் பார்த்து வியந்த தமிழ் படம்?**

நான் தமிழ்ப் படங்கள் அதிகம் பார்ப்ப தில்லை. வருடத்திற்கே இரண்டு படங்கள் தான் பார்ப்பேன். கடைசியாக நான் பார்த்தவற்றில் ராஜுமுருகனின் 'ஜோக்கர்' பிடித்திருந்தது.

# உலகை...

17ஆம் பக்கத்தொடர்ச்சி

மீன் சந்தையில் இருந்தே இந்தக் கொரோனா வைரஸ் ஆரம்பித்திருக்கலாம் என்று மக்கள் நம்புகின்றனர்.

அந்தச் சந்தையில் எலிகள், வௌவால்கள், நாய்கள் மற்றும் பல காட்டுவிலங்குகள் மனித உணவிற்காக விற்பனை செய்யப்படுகிறது. மக்கள் அவற்றை வாங்கிச் சாப்பிடுகின்றனர். இது மனிதரைப் பாதிக்கிறது, ஏனென்றால் வௌவால் மற்றும் சிலவகைப் பாம்பு போன்ற சில காட்டுவிலங்குகள் கொரோனா வைரஸைக் கொண்டுள்ளன.

கொரோனா வைரஸ் கனடா, அமெரிக்கா உட்பட 22இற்கும் மேற்பட்ட நாடுகளுக்குப் பரவியுள்ளது. ஆனால் சீனாவில் மட்டுமே உயிரிழப்புகள் பதிவாகியுள்ளன. இதுவரை கொரோனா வைரஸ் தாக்கம் காரணமாக 213 உயிரிழப்புக்கள் பதிவாகி உள்ளது. இந்த வைரஸ் தாக்கம் காரணமாக சீனாவில் மாத்திரம் 8,000 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

வைரஸிலிருந்து உங்களைப் பாதுகாப்பாக வைத்திருக்க, சவர்க்காரம் கொண்டு 20 வினாடிகளேனும் கைகளைக் கழுவ வேண்டும். தும்மல் மற்றும் இருமலின் போது வெளியே பரவாத வகையில் முழங்கைகளால் மூடிக்கொள்ள வேண்டும். தும்மல் மற்றும் இருமல் இருந்தால் முகக் கவசங்களை அணிந்துக்கொள்ள வேண்டும். மாமிச உணவுகள் நன்கு சமைக்கப்பட்டுள்ளனவா என்பதனை உறுதி செய்துகொள்ள வேண்டும். காட்டு விலங்குகள் அல்லது நோய்வாய்ப் பட்டோருடன் உடல் ரீதியான தொடர்புகளை தவிர்த்துக் கொள்வது சிறந்ததாகும்.




**வாழும் திறன்**

இயற்கையுடன் இணைந்து இன்புற்று வாழ்தலுக்கான சிறப்பு வகுப்புக்கள் பிரபல்யமான இந்திய சமய சாஸ்த்திர நிபுணர் வி. கணேஷ் அவர்களால் Middlefield & Mcnicoll சந்திப்புக்கு அருகாமையில் நடைபெறுகின்றது. ஆர்வமுள்ளவர்கள் பங்குபற்றலாம்.

வி. கணேஷ்: 416.816.2563 மகேன்: 416.893.1222

ஆறுமுகம் (AGR): 416.832.9467

# Leasing(Rental), Buying, Selling & Investing

## வீடு வாங்க, விற்க, வாடகைக்கு பெற்றிட

**Taunton & Garrard Whitby**




**Detached 4 BR /4 WR**

**Islington/Major Mackenzie**




**Detached 4 BR /3 WR**

**Sheppard & Meadowvale Scarborough**




**Basement 1 BR /1 WR**

**Rossland & Church Ajax**




**Attached/Townhouse 2 BR /1 WR**

**Rathiga Thillaivannan** B.com
Sales Representative
**647.839.0079**
rathiga24@hotmail.com
www.rathigahomes.com
MLS MULTIPLE LISTING SERVICE
HOMELIFE HIGHER STANDARDS
Bus: 905.201.9977 Fax: 905.201.9229
HomeLife/Future Realty Inc., Brokerage+ 7-205 Eastwale Dr, Markham ON. L3S 4NS





## 07-Feb-2020 தைப்பூசம் அன்று பரத நாட்டிய வகுப்புகள் ஆரம்பம்

**நிருத்திய கலாஷேத்திர நாட்டிய மன்றம்**

**Niruthya Kalashesthira Dance Academy**

இந்தியா பத்மஸ்ரீ அடையார் இலக்சுமணனின் மாணவியும்,
பல சிறப்புப் பட்டங்கள் பெற்றவருமான



**ஸ்ரீமதி. செல்வானந்தி சுதுமார் M.A**
**Smt. Selvananthy Sukummar**




M.A in Dance (Annamalai University)
நட்டுவாங்க கலைமணி (அண்ணாமலைப் பல்கலைக்கழகம்)
Dip. நாட்டிய கலைமணி (யாழ். பல்கலைக்கழகம்)
பரதகலா வித்தகர் (வட இலங்கை சங்கீத சபை).
சிறந்த நடன இயக்குனரும், 24 வருட கற்பித்தல் அனுபவமுடையவர்.



- Exams
- Stage Program
- Arangetram





**Markham / Ajax / Scarborough / Stouffville**
For More Info:
**416-278-5345 / 416-754-9047**


# பனிகொட்டும் நாடெங்கள் நாடே



பாதிப்பு அதிகந்தான் பெய்யும் பனியால்
தனதானி யங்களும் தப்ப வில்லை
மனிதவாழ்வு மங்கிடவே மதியி ழந்தே
இனமறியாத் துன்பமும் இணைந்து கொள்ள
செய்வதறி யாச்செயற் பாடேது மின்றி
மனமழிந்தே மாற்றுக் கருத்தின்றி மயக்கத்தால்
மாசுற்ற காலமதில் மாறுபட் டிருந்தனரே.

கொட்டும் பனிகண்டே கோடையும் மறைந்திடவே
கொட்டும் பனியுடனே குளிர்காற்றும் சேர்ந்திடவே
முட்டிமோதும் வாகனங்கள் மட்டுமா? மனிதரும்
மோசமான பாதிப்புக் குள்ளாகும் பரிதாபம்
சட்ட ஒழுங்குகளும் சற்றே தளர
சாதனை யாளராம் பொலிஸ்கண் காணிப்பு
விட்ட பாடில்லை விரைந்தங்கே தம்பணியை
விரைந்து செய்கின்ற சீரும் சிறப்பே!

பாதிப்பு மக்களுக் கென்றாலும் பயனுண்டே
சறுக்கி விளையாடும் சாதனை யாளர்க்கு
கோதுமை விதைப்போர்க்குக் கொடிய பனிதான்
கோணாத விளைச்சலையும் கோலோச்ச வைத்திடுமே
பாதுகாப்பு உடைகளைப் பக்குவமாய் அணிந்துமே
பல்தொழில் தேடியே பக்குவமாய்ச் செல்வதுண்டே
சாதனை என்றேதான் சாற்றுதல் வேண்டுமே
சற்றேயே சிந்தித்தால் சாதனை தானே.

அழகுக்கோர் அணிகலனாம் பனியின் தூறல்
ஆழமாய்ச் சிந்தித்தால் இயற்கையின் ஆற்றலது
வழுக்கி விழுவோரால் பாதிப்ப ரசுக்கும்
வலுவான 'இன்சூரன்ஸ்' நிறுவனங் கட்குமே
இளைஞர்க்கோர் இன்பந்தரு இனிய நன்னாளே
இன்பமும் துன்பமும் இணைந்ததே வாழ்வு
களைத்திருப் போர்க்கோ கனடாவின் கொடுப்பனவு
காலந் தவறாதே வங்கியிற் சேருமே.

முருகேசு மயில்வாகனன்

# ROYAL MEDICAL AND PROFESSIONAL CENTRE

2225 Markham Road, Scarborough

**SUITABLE FOR:**

- Dentists
- Pharmacists
- Medical Labs
- Chiropractors
- Physiotherapists
- Family Physicians
- Lawyers
- Accountants
- Real Estate
- Mortgage Brokerages
- Insurance & Financial Services
- Other Professionals


**Retail not permitted**




## UNITS AVAILABLE FOR SALE



Raja Mahendran**
416.315.9397



Gulshan Sharma**
416.407.5911

- Great investment for medical and other professionals to design their own future
- Around 48,000 Sq.ft, 4- storey building with 35+units
- Units ranging from 400-1700 sq.ft., and 11-foot ceiling
- Over 100 free parking spots with 24/7 access
- Extra space in the basement for imaging centres ( Xrays, Ultrasound), office, etc
- Rooftop ZEN garden ( Terrace) for relaxation
- Leisure tree shades in the parking lot, with benches
- Located on a high traffic major road in Toronto.
- Situated in the middle of four major hospitals
- Easy access to two major highways ( HWY 401 & 407)
- 24/7 public transportation at your door step
- Located in the middle of growing population
- Close to malls, fast - spreading consumer shops and restaurants
- Easy access to the building from North & South bounds traffics

DON'T MISS THIS OPPORTUNITY TO OPERATE YOUR BUSINESS IN YOUR OWN PLACE

For More info. Call:

HOMELIFE HIGHER STANDARDS

HomeLife / GTA Realty Inc. Brokerage*

416.321.6969

5215 Finch Ave. E., #203, Toronto ON. M1S 0C2

*Independently Owned & Operated **Broker

# Proud to be serving you through these two Funeral Homes!

**GTA EAST**

OGDEN FUNERAL HOMES

4164 Sheppard Ave E,
Scarborough, ON M1S 1T3.
www.ogdenfuneralhome.com

**GTA WEST**

LOTUS
Funeral and Cremation Centre Inc.

121 City View Dr,
Etobicoke, ON M9W 5A8.
www.lotusfuneralandcremation.com

:: Family owned and operated for over 70 years
:: East Toronto location just off Hwy 401, between Kennedy Road and Midland Ave
:: Affordable funeral plans to meet your budget

:: On-Site Crematorium
:: West Toronto location just off Hwy 401,410, 427 & 407 North of Belfield Rd and East of Hwy 27
:: Beautiful Facility With Up To 500 Seating

State of the art technology
Financing plans available for both preplanned funerals and at-need funerals
Diverse staff to care for your needs, honour your traditions and speak your language
Travel Repatriation Insurance available (**$495.00 only**) for your lifetime coverage



## Patricia Peter BBM
*Licenced Funeral Preplanning Director*
*Licenced Insurance & Investment Advisor*

Direct: **416-834 5753**
Email: advisorpat10@gmail.com

*"Serving With Dignity, Compassion and Excellence"*





# (சினம் கொண்டு) நிமிர்ந்து நில்

- கிறிஸ்ரி -

தட்டிக் கொடுக்க மாட்டார்கள்!

நிறைக்கு முதல் குறையை முன்வைப்பர்! உலகமே கொண்டாடும் நம் படைப்பு என்றாலும், எங்கள் கலாசாரத்துக்கும் இதற்கும் சம்பந்தமே இல்லை என்று முகமூடி போடுவர்!

நடந்த வரலாற்றை நடந்தபடியே பதிவு செய்தாலும், நடந்ததை நடந்தபடியே சொல்ல உங்களுக்கு ஏது உரிமை என்பர்!

சினம்கொள்!

ஐயையோ... ரஞ்சித் ஜோசபின் கனவாக, லட்சியமாக, சினமாக உலகெங்கும் பிரமாண்டமாகக் கலக்கிக் கொண்டிருக்கும் ‘சினம்கொள்’ வேறு என்று சொல்கிறீர்களா?

துரோகம்

காசு மரம்


It is all about

மேலே சொல்லப்பட்டவை இவரின் வளர்ச்சிப் பாதையின் குறும் திரைப்படங்கள்.

பின்பு துணை இயக்குனராக பூ (பார்க்கவில்லையா நீங்கள்? ஐயோ, ஓர் அருமையான காவியத்தை மிஸ் பண்ணி இருக்கிறீர்கள்] திரைப்படத்தில் பணியாற்றி இருக்கிறார்.

2010இல் வெறும் $9.50இல் (திரைப்படத்தின் பெயர் அதுதான்), புலம்பெயர் சமூகத்தில், விளிம்பு நிலையில் வாழும் இளையவர்களின் உள்ளங்களைத் திறந்து காட்டி, எங்களைப் பதைபதைக்க வைத்தார்.

(91இல் இருந்து இப்போதுவரை நான் பார்த்த நம்மவர் படங்களில், எனக்குப் பிடித்த மூன்று படங்களைத் தெரிவு செய்யும்படி சொன்னால்: Red winter,



ரஞ்சித் ஜோசப்

$ 9.50, ரூபா இவையே எனது தெரிவாக இருக்கும்.)

இப்போது தடாலடியாகக் கிட்டத்தட்ட ஒன்பது பத்து வருடங்களுக்குப் பிறகு சினம்கொள்!

எப்போதும் மனதில் ஒரு கதையை வைத்துக்கொண்டு அதை யாருக்காவது சொல்லிவிட வேண்டும் என்ற ஆர்வத்தில் இருக்கிறார் ரஞ்சித் ஜோசஃப். அதற்காக இப்போதெல்லாம் கமரா லென்ஸ் மூலம் கதைசொல்லி நம்மை படிக்க வைக்கிறார். தாயகம் என்றவுடனே ஒவ்வொருவர் மனதிலும் ஓர் ஏக்கம் படர்ந்து விடுவது இயல்பு.

2009ஆம் ஆண்டு, அங்கு நடந்த பாரிய மாற்றங்களுக்குப் பிறகு நமது தாயகம் வேறுவிதமாக சிதைவுறுகிறதே என்ற எண்ணம் பலரின் நெஞ்சதில் நீறுபூத்த நெருப்பாக எரிகிறது.

“ஏன் சினம்கொள்?” என்ற எனது கேள்விக்கு சினம் கொள்ளாமல் பின்வருமாறு பதிலளிக்கிறார் இயக்குனர்: 2005 இல் தாயகத்துக்கு சென்றிருந்தபோது, அங்கிருந்த வாழ்வியல் சூழ்நிலைகளைப் பார்த்தபொழுது என்னுடைய மண் சார்ந்த ஒரு திரைப்படத்தை இயக்க வேண்டு மென்பது எனக்கு ஒரு பெரிய ஆவலாக இருந்தது. ஆனால் 2009 யுத்தத்துக்குப் பிறகு அதற்கான வாய்ப்புகள் இல்லாமலே போய்விட்டது.

தொடர்ந்து தமிழகத்தில் இருந்துகொண்டு இந்தியத் திரைப்படங்களை இயக்குவதற்கான முயற்சிகளில் நான் இருந்தாலும், 2017இல் எனக்கு ஒரு வாய்ப்புக் கிடைத்தது. தாயகத்துக்கு சென்று ஒரு படைப்பை உருவாக்குவதற்கு, அதுதான் சினம்கொள்! இந்த திரைப்படத்தை உருவாக்க வேண்டும் என்ற அடிப்படை எனக்கு வந்ததற்குக் காரணம் என்னுடைய சமூகம், என்னுடைய மக்கள் தான்.

2009க்கு முன்பு கிட்டத்தட்ட முப்பது நாற்பது ஆண்டுகளுக்கான விடுதலைப் போராட்டத்தையும் அதன் தொடர்ச்சியாக இழப்புகளையும் மனித அழிவுகளையும் எத்தனையோ பிரச்சனைகளையும் சந்தித்தாலும், நாம் ஒருங்கிணைக்கப்பட்டு ஒரு சமூகமாக ஏதோ ஒரு வழியில் நமது தேச விடுதலைக்கான ஒரு விடயத்தில் இணைந்து இருந்தோம். 2009க்கு பிறகு பிரிவினை வாதமும் ஒற்றுமையின்மை போன்ற நிறைய விடயங்களும் எமது சமூகத்தில் உருவாக்கப்பட்டுக் கொண்

(தொடர்ச்சி 25ஆம் பக்கம்...)

# கோலாகலமான தக்காளித் திருவிழா



சுந்தரம் இந்திராஜா
indrarajah@gmail.com

ஸ்பெயின் நாட்டின் கிழக்கே உள்ள புனோல் (Buñol) நகர சதுக்கத்தில் ஓகஸ்ற் 29, 1945, புதன் கிழமையன்று நடைபெற்ற அணிவகுப்பில் இளைஞர்கள் சிலர் பங்கேற்றனர். அந்த சமயத்தில், அணிவகுப்பில் சென்ற ஒருவர், அலங்கார வண்டியிலிருந்து தவறி விழுந்தார். கோபம் அடைந்த அவர், அங்கு இருந்தோருடன் சண்டை போடத் தொடங்கினார். கையில் கிடைத்த பொருட்களை, அங்கிருந்தோர் மீது வீசி எறிய ஆரம்பித்தார். பதிலுக்குக் கூடியிருந்த மக்கள் அருகிலிருந்த கடைகளில் வைக்கப்பட்டிருந்த தக்காளிப் பழங்களை எடுத்து வீசத் தொடங்கினர். அதன்பின் காவல் துறை தலையிட்டு சண்டையை நிறுத்தியது.

அடுத்தடுத்த ஆண்டுகளில் ஓகஸ்ற் மாதக் கடைசி புதன்கிழமை, இளைஞர்கள் இந்த விளையாட்டுச் சண்டையை தொடர ஆரம்பித்தனர். விளையாட்டுச் சண்டை விபரீதமாகிப் போக சிலர் கைது செய்யப்பட்டனர். இதனால் கொண்டாட்டமும் நிறுத்தப்பட்டது. 1957இல் 'தக்காளி சண்டைக்கு இறுதிச் சடங்கு' கூட நடைபெற்றது. இறுதிச் சடங்கில் பெரிய தக்காளி ஒன்று சவப்பெட்டியில் வைக்கப்பட்டு வாத்திய இசையுடன் ஊர்வலமாக எடுத்து செல்லப்பட்டது.

ஆனால் அடுத்தடுத்த ஆண்டுகளில் மக்கள் தாங்களாகவே தக்காளிப் பழங்களை எடுத்துவந்து விழாவை உற்சாகமாக நடத்தத் தொடங்கினர். அன்றிலிருந்து இது வருடாந்த விழாவாக மாறியது. 1975இல் புனோல் நகரத்தின் மேயரே தக்காளிப் பழங்களை வரவழைத்து விழாவை நடத்தத் தொடங்கினார். 'லா டொமாடினா' என்ற தக்காளி வீசி எறியும் திருவிழா ஸ்பெயினில் இன்றும் கொண்டாடப்பட்டு வருகிறது.

தக்காளி வீசி எறியும் திருவிழாவின் புகழ் பெருகப்பெருக இதில் கலந்து கொள்வதற்காகப் பல்வேறு நாடுகளிலிருந்தும் சுற்றுலாப் பயணிகள் ஸ்பெயினுக்கு வருகை புரிவது வழக்கம். புனோல் ஒரு சிறிய நகரம். சுமார் 10,000 மக்கள் மட்டில் வாழ்கின்றனர். இப்பகுதியில் புனோல் மிகவும் பிரபலமான சுற்றுலாத் தலங்களில் ஒன்றாக மாற்றியுள்ளது. புனோல் நகரத்தில் தங்குமிடம் பற்றாக்குறையினால் வாடகை உயர்ந்து காணப்படுகிறது. பெரும்பாலானோர் 40கி.மீ தொலைவில் அமைந்துள்ள வலென்சியாவிலிருந்து கார் மூலம் அல்லது நிரம்பிய ரயில்களில் வருகின்றனர். இதில் கலந்து கொள்வதற்குப் பல வாரங்களுக்கு முன்பாகவே முன்பதிவு செய்ய வேண்டியது அவசியம்.



'லா டொமாடினா' எனும் தக்காளித் திருவிழா, ஒவ்வொரு ஆண்டும், ஓகஸ்ற் மாதம் கடைசி புதன்கிழமை, புனோல் நகர சதுக்கத்தில் கொண்டாடப்படுகிறது. இதற்காக, பெருமளவு தக்காளி பழங்கள் அவ்விடத்தில் குவிக்கப்படுகின்றன. சுமார் ஒரு மணி நேரம் நடைபெறும் இந்தச் சண்டையில் பங்கு பெறுவோர் உற்சாகத்துடன் ஒருவர் மீது ஒருவர் தக்காளிப் பழங்களை சரமாரியாக விளையாட்டாகத் தூக்கி எறிந்து கும்மாளமடிக்கின்றனர்.

தக்காளித் திருவிழா நாளில் காலை 10 மணியளவில் நெரிசலான நகர சதுக்கத்தில் ஒரு வழுக்கும் கிறீஸ் (Grease oil) கம்பத்தின் மேல் ஒரு பதப்படுத்தப்பட்ட இறைச்சிப் பொதி (Ham) (a jamón) தொங்கவிடப்பட்டிருக்கும். வழுக்கும் கம்பத்தில் ஏறி 'Ham' மை மீட்டெடுக்கும் முதல் நபராக இருக்கவேண்டும். கூட்டத்தினர் கோஷமிட்டும், பாடியும் ஊக்கப்படுத்துவதோடு நீரை சிறிய குழாய்கள் கொண்டு நனைந்தும் கொண்டிருப்பர். Ham பொதியை அப்புறப்படுத்தப்பட்ட தருணம், ஓர் உரத்த சமிக்ஞையுடன் தக்காளி லொறிகள் தோன்றும். உலகம் முழுவதிலுமிருந்தும், உள்ளூர்வாசிகளும் அதிகபட்சம் 40,000 பேர் பங்கேற்பர். குறைந்தது 18 வயதுடைய பெரியவர்கள் மாத்திரம் பங்கேற்கலாம். தக்காளித் திருவிழா காலை 11 மணிக்கு ஆரம்பமாகிறது. மறைமுகமாக வெப்பம் காரணமாகவும் அல்லது தக்காளிகளால் தங்கள் ஆடைகள் எவ்வளவு குழப்பம் அடைந்துள்ளது என்பதைப் பார்க்கவும் பங்கேற்பாளர்களில் பெரும்பாலானோர் வெள்ளை நிறத்தில் ஆடை அணிந்துகொள்கின்றனர். தக்காளிகளை ஏற்றிய லொறிகள் சண்டைப் பகுதி வழியாகச் செல்லும்போது, லொறிகளின் பின்புறத்தில் உள்ள சில உள்ளூர்வாசிகள் திருவிழாவுக்குச் செல்லும் அனைவருக்கும் தக்காளியை வீசுகின்றனர். லொறிகள் கடந்து சென்றவுடன் எல்லோரும் தக்காளிப் போரில் தங்களைத் தாங்களே ஈடுபடுத்திக்கொண்டு தக்காளிக் குளத்தில் மூழ்கி விடுகின்றனர். வேடிக்கை தொடங்கி அடுத்த ஒரு மணிநேரம் உங்கள் வாழ்க்கையின் மிகவும் தீவிரமான மற்றும் பெருங்களிப்புடைய அனுபவங்களில் இது ஒன்றாக இருக்கும். அந்தப் பகுதியே சிவப்பு வண்ணம் பூண்டு காட்சி அளிக்கும். ஏராளமான ஸ்பானிஷ் ஆண்கள் தக்காளியை ஒருவருக்கொருவர் தங்கள் உள்ளாடைகளில் வீசுவதை நீங்கள் காண்பீர்கள். அதேநேரத்தில் ஏராளமான மக்கள் தங்கள் கண்களுக்குள்ளும் மூக்குக்குள்ளும் தக்காளிச் சாறு (purée) புகாவண்ணம் நீச்சல் கண்ணாடி அல்லது ஸ்நோர்கெல்லிங் கியர் (Snorkeling gear) அணிவர்.

கடந்த ஆண்டு வழக்கமான உற்சாகத்துடன் நடந்த தக்காளித் திருவிழாவில், 6 லொறிகளில் சுமார் 145 தொன் தக்காளிகள் கொண்டுவரப்பட்டு பங்கேற்பாளர்களுக்கு வழங்கப்பட்டது. சுமார் 150,000 அதிகமாக பழுத்த தக்காளி சிதறடிக்கப்படுகிறது. சுவை குறைவாக மற்றும் பழுத்த தக்காளி ஸ்பெயினின் எக்ஸ்ட்ரெமடுரா (Extremadura) பகுதியில் இருந்து மிகவும் மலிவாக வாங்கப்படுகிறதாம். தக்காளி என்பது ஓர் இயற்கை கிருமிநாசினியாகும். அதாவது தக்காளித் திருவிழாவுக்குப் பிறகு உங்கள் தோல் அசுத்தங்களிலிருந்து சுத்தப்படுத்தப்படும். விழாவில் பங்கேற்போரின் உடல் மற்றும் உடைகள் மட்டுமல்ல, அந்த இடம் முழுவதுமே தக்காளிச் சாற்றால் மெழுகப்பட்டு அந்தப் பகுதியே சிவப்பு கம்பளம் விரித்ததுபோல இரத்தச் சிவப்பாகக் காட்சி தரும். ஆனால் ஒரு மணி நேர தக்காளிச் சண்டையின் பின்னர் ஒரு பெரிய அமைதிநிலை வந்துவிடும். கண்களுக்கு விருந்து படைக்கும் தக்காளித் திருவிழாவை சுற்றுலாப் பயணிகளின் மகிழ்ச்சி ஆரவாரத்துடன் கண்டு களித்து வருகின்றனர். 'லா டொமடினா' ஒரு குறுகிய தக்காளிச் சண்டை மட்டுமல்ல, முக்கிய நிகழ்வுக்கு அந்த வாரம் நகரத்தின் தெருக்களில் அணிவகுப்பு, பட்டாசு மற்றும் பேலா சமையல் (paella cooking) போட்டிகளால் நிரம்பியிருக்கும். கொண்டாட்டங்கள் முடிந்ததும், தீயணைப்புப் பிரிவினர் தண்ணீரை விசிக்கி அடித்து,



தக்காளிச் சாற்றைக் கழுவி மக்களையும், சுற்றுப்புறத்தையும் சுத்தப்படுத்துகின்றனர். பாதுகாப்பை முன்னிட்டு தக்காளியைத் தவிர வேறு எந்தப் பொருளும் சண்டையில் உபயோகப்படுத்தப் படுவதில்லை. ஸ்பெயின் நாட்டைத் தொடர்ந்து, அமெரிக்கா, சீனா, சிலி போன்ற நாடுகளின் சில நகரங்களில் கூட இதுபோன்ற கொண்டாட்டங்கள் நடைபெறுகின்றன. பெங்களூர், இந்தியாவில் ஒரு முயற்சியாக இதேபோன்றதொரு தக்காளித் திருவிழா ஆரம்பித்தது. 'தக்காளி விரயம்' மிகவும் சர்ச்சைக்குரியதாக இருந்ததால் நிகழ்வு விரைவில் தடை செய்யப்பட்டது. தக்காளி திருவிழாக்காட்சிகள், ஆங்கிலப் படங்களில் இடம் பெற்றுள்ளன. 'ஸிந்தகி ந மிலேகி டுபாரா' (Zindagi Na Milegi Dobara) என்ற இந்தி படத்திலும், இந்த விழாக்காட்சி வருகிறது.

களங்கமில்லாத நகைச்சுவையுடன் கூடிய அன்பை ஒருவருக்கொருவர் பரிமாறி விளையாடி ஒருமைப்பாட்டை விளக்குவதே தக்காளி திருவிழாவின் தலையாய நோக்கம். பேரின்பம் வேண்டாம் சிறுசிறு சந்தோசங்கள் போதும் நம் வாழ்வை அனுபவித்து வாழ...!

## சினம்...

24ஆம் பக்கத்தொடர்ச்சி

டிருக்கிறது. இதற்குக் காரணமாக பின்புலத்தில் பலர் இருந்தாலும் ஒரு விடுதலைக்காகப் புறப்பட்ட இனம் அந்த விடுதலைக்கான போராட்டம் இடைநிறுத்தப்பட்டு சிதைவுறு நிலையில் இருக்கும்போது ஏற்படும் சினம் தான் 'சினம்கொள்' ஆக மாறுகிறது. இதை இளம்வயதில் விடுதலைப் போராட்டத்திற்குப் போன ஒரு போராளியின் பார்வையில் சொன்னால் எப்படி இருக்கும்? இது என்னுடைய சினம்! இந்த சமூகத்தில் தன்னுடைய தாயகம் சார்ந்து இருக்கக் கூடிய ஒவ்வொருவரின் சினம்! இயல்பாக, கோர்வையாகப் பேசுகிறார் ரஞ்சித் ஜோசப்.



இந்தத் திரைப்படத்தைப் பார்ப்பது ஒவ்வொரு தமிழனதும் வரலாற்றுக் கடமை என்று உலகமே கிறுகிறுத்துக் கொண்டு இருக்கிறது.

மேலும் சினப்போம் வரும் வாரங்களில்....

கனடா தமிழ் எழுத்தாளர் இணையம்

**சர்வதேச சிறுகதைத் தொகுப்பு நூல் வெளியீடு - 11-04-2020**

கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் முத்தமிழ் விழாவும், நூல் வெளியீடும் வருகின்ற ஏப்ரல் மாதம் 11ஆம் திகதி (11-04-2020) சனிக்கிழமை மாலை கனடா ஐயப்பன் கோயில் கலாசார மண்டபத்தில் நடைபெறும் என்பதை அங்கத்தவர்களுக்கும், இலக்கிய ஆர்வலர்களுக்கும் அன்புடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

எழுத்தாளர் இணையத்தால் சர்வதேசரீதியாக நடத்தப்பட்ட சிறுகதைப் போட்டியில் பரிசு பெற்ற பதினாறு சிறுகதைகள் இந்தத் தொகுப்பில் இடம் பெற்றிருக்கின்றன என்பதையும், இந்த நிகழ்வின்போது எழுத்தாளர் இணைய அங்கத்தவர்களின் நூல்களும் காட்சிக்கும், விற்பனைக்கும் வைக்கப்படும் என்பதையும் அறியத் தருகின்றோம்.

குரு அரவிந்தன் (தலைவர்)    ஆர். என். லோகேந்திரலிங்கம் (செயலாளர்)

# நினைவில் நிற்பவை-33

# இந்தியச் சுற்றுலா-மைசூர்



- துறையூரான் -

அடுத்தநாள் காலை கடுகதி பஸ்ஸில் புறப்பட்டு பெங்களூரிலிருந்து மைசூருக்குச் சென்றோம். இது 90 மைல் தூரத்தில் 2427 அடி உயரத்தில் சாமுண்டி மலைத் தொடரின் அடிவாரத்தில் அமைந்துள்ள அழகான நகரம். இது மைசூர் மாவட்டத்தின் தலைநகராக உள்ளது. இந்நகர் மைசூர் ராஜதானியின் தலைநகராக வாடியார் அரச பரம்பரையினரின் ஆட்சியின் கீழ் 1399 முதல் 1956 வரைக்கும் ஏறக்குறைய 600 ஆண்டுகளாக தலை நகரமாகத் திகழ்ந்தது. இக்காலத்தின் போது 1760 முதல் 1770 வரைக்கும் ஹைதர் அலியும், திப்பு சுல்தானும் ஆட்சி செய்தனர். வாடியார் பரம்பரையின் ஆட்சியின் போது கலை, பண்பாடு, பொருளாதார வளம் மிக்க நகரமாக இது விளங்கியது. இதனால் இது கர்நாடக மாநிலத்தில் பண்பாட்டுத் தலைநகர் என அழைக்கப்பட்டது.

மைசூர் பரம்பரைக் கட்டிடங்கள் மாளிகைகள், தசராக் கொண்டாட்டம், மைசூர் ஓவியங்கள், மைசூர் பாகு (இனிப்பு), மைசூர் சந்த சோப், மைசூர் சேலைகள், மைசூர் தலைப்பாகை, வாசனைத் திரவியங்கள் போன்றவற்றிற்குப் புகழ் பெற்ற இடமாக இன்றும் விளங்குகிறது. தசராக் கொண்டாட்டத்தை பார்ப்பதற்கு இந்தியாவின் பல்வேறு மாகாணங்களிலிருந்து மட்டுமல்லாமல் உலகின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் மக்கள் வந்து குவிகின்றனர். மைசூர் என்ற பெயர் மகிசூரு என்ற கன்னடப் பெயரின் ஆங்கில வடிவமாகும். மகிசா என்றால் சமஸ்கிருதத்தில் எருது என்று அர்த்தம். இங்கே புராணக் கதையின் மகிசாசுரனைக் குறிக்கும். இவன் இப்பகுதியை முன்னர் ஆட்சி செய்ததனால் மகிசபுரி என அழைக்கப்பட்டதாகப் புராணக் கதைகள் கூறுகின்றன. இவனை சாமூண்டீவரி என்ற பெண் தெய்வம் கொன்றதாகக் கூறப்படுகின்றது. சாமுண்டி மலையின் உச்சியில் சாமுண்டீஸ்வரிக்குக் கோவில் அமைக்கப்பட்டுள்ளது.

காலையில் புறப்பட்ட பஸ் வண்டி இடையில் ஓரிடத்தில் நிறுத்தியபின் ஏறக்குறைய பத்து மணியளவில் மைசூர் நகரை அடைந்தது. ஏற்கனவே ஒழுங்கு செய்திருந்த ஒரு ஹோட்டலுக்குச் சென்று இளைப்பாறினோம். அன்று பிற்பகல் நகரிலிருந்த பல்வேறு கடைகள் சில பூங்காக்கள் என வாடகை வண்டியில் சென்று பார்த்தோம். நகரின் முக்கிய சுற்றுலா இடங்களை பார்ப்பதற்கு தங்கியிருந்த ஹோட்டல் மனேஜரின் உதவியுடன் ஒரு சுற்றுலா பஸ் வண்டியில் இடம் ஒதுக்கினோம். அடுத்த நாள் காலை வண்டி ஹோட்டலுக்கு வந்து எம்மை ஏற்றிச் சென்றது. தங்கியிருந்த இடத்திலேயே சாப்பாட்டு வசதியும் இருந்தது. அறையும் விசாலமானதாயும் காற்றோட்டமானதாயும் முதலாவது மாடியில் அமைந்திருந்தது.



மைசூர் மகாராஜா மாளிகை

அன்று காலை சுற்றுலா வண்டியில் வேறு பல பயணிகளுடன் மைசூர் மகாராஜாவின் மாளிகையைப் பார்க்கச் சென்றோம். இது பொது மக்களால் அம்பா விலாசம் என அழைக்கப்படுகிறது. இது வாடியார் அரச வம்சத்தினரின் வாசஸ்தலமாகும். இது நகரின் மத்தியில் சாமுண்டி மலைத் தொடரை நோக்கிய வண்ணம் அமைக்கப்பட்டுள்ளது. மைசூரில் எல்லாமாக ஏழு மாளிகைகள் உள்ளன. அவற்றுள் மிகவும் பிரசித்தமான பெரிய, அழகிய வேலைப்பாடுகள் உள்ள மாளிகையாக இது விளங்குகின்றது. இது அமைந்திருக்குமிடம் பழைய கோட்டை என அழைக்கப்படுகிறது. இது முதலில் பழைய கோட்டையினுள் யதுராயா என்பவரால் 14ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டது. பின்னர் பலமுறை இடிக்கப்பட்டு கட்டப்பட்டு இறுதியாகப் பழைய மாளிகை எரிந்த பின் 1897க்கும் 1912க்கும் இடையில் கட்டப்பட்டது.

இது தாஜ்மகாலுக்கு அடுத்ததாக மிகக் கூடுதலான சுற்றுலாப் பயணிகள் செல்கின்ற இடமாக விளங்குகிறது. ஆண்டொன்றுக்கு 6 மில்லியன் பேர் வருவதாகக் கூறப்படுகிறது. 1896இல் தசரா விழாவின்போது ஏற்பட்ட தீயினால் மாளிகை முழுவதும் எரிந்து போயிற்று. அப்போதைய மாகாராஜா நாலாம் கிருஷ்ணராஜ வாடையாரும், அவரது தாயார் மகா ராணி கெம்பனஞ்சம் மணி தேவியும், பிரித்தானிய கட்டிடக் கலைஞர் ஹென்றி ஏர்வின் என்பவரை புதிய மாளிகை கட்டும் பணியில் அமர்த்தினர். அரச குடும்பத்தினர் ஜெகன் மோகன் மாளிகைக்குச் சென்று வாழ்ந்தனர். கட்டிட வேலையைக் கண்காணிக்க அப்போதைய அரச எந்திரவியல் அறிஞர் B.P. இராகவுலு நாயுடு நியமிக்கப்பட்டார். அவர் டெல்லி, சென்னை, கல்கத்தா போன்ற இடங்களுக்குச் சென்று அங்குள்ள மாளிகைகளை ஆராய்ந்து வந்து இப்புதிய மாளிகையினைத் திட்டமிட்டுக் கட்டுவித்தார். இப்புதிய மாளிகை ரூபா 41,47,913 (30 மில்லியன் டொலர்) செலவில் 1912இல் கட்டி முடிக்கப்பட்டது. இது பின்னர் 1930இல் மகாராஜா ஜயசாமராஜேந்திர வாடையார் காலத்தில் விஸ்தரிக்கப்பட்டு புதிய பொது மக்கள் மண்டபம் கட்டப்பட்டது.

இம்மாளிகை இந்து, மொகலாய, இராஜபுத்ர, கொதிக் கட்டிடக் கலைகளை அடியொற்றிய இந்தோசரசெனிக் கலைவடிவமாகக் கட்டப்பட்டுள்ளது. இம்மாளிகை மூன்று கல்லினாலான அடுக்குகளையும் பளிங்கு குவிந்த கூரை மண்டபங்களையும் ஐந்து அடுக்குகளைக் கொண்ட 145 அடி உயரமான கோபுரத்தையும் கொண்டுள்ளது. இம்மாளிகையைச் சுற்றி ஓர் அழகான தோட்டம் அமைக்கப்பட்டுள்ளது. நுழை வாயிலில் ஒரு வளைந்த வடிவத்தில் கோபுரமும் இரும்புப் படலையும் உள்ளன. மாளிகையின் முக்கிய பகுதி 245அடி நீளமும் 156அடி அகலமும் உடையது. தீயணைக்கும் இயந்திரங்கள் ஆங்காங்கே அமைக்கப்பட்டுள்ளன. இம்மாளிகைக்கு மூன்று வாயில்கள் உள்ளன. பிரதான கிழக்கு வாயில் (இது தசராக் காலத்திலும் முக்கிய பிரமுகரின் வருகையின்போது மட்டுமே திறக்கப்படும்), தெற்கு வாயில் (பொது மக்களுக்கு), மேற்கு வாயில் (தசராவின் போது மட்டும் திறக்கப்படும்).
சாம்பல் நிற கருங்கற்களால் கட்டப்பட்ட மூன்றடுக்கு மாளிகையில் கடும் செம் மஞ்சள் நிறப் பளிங்குகற்களாலான குவிந்த கூரைகளைத் தாங்கும் பல அகன்ற வளைவுகளும் மத்திய வளைவுக்கருகில் இரு சிறிய வளைவுகளும் உயரமான தூண்களால் தாங்கப்படுகின்றன. மத்திய வளைவுக்கு மேலே பொருள், வளம், அதிஷ்டம் ஆகியவற்றுக்குப் பொறுப்பான தெய்வம் கஜலச்சுமியின் சிலை இரு யானைகள் சூழ வைக்கப்பட்டுள்ளது. பழைய கோட்டைக்குள்ளே பிரத்தியேகமான மூன்று கோயில்களும் மாளிகைக்குள்ளே 18 கோயில்களும் உள்ளன. மாளிகை ஏற்கனவே இருந்த பரகல் மடத்துக்கு அருகே கட்டப்பட்டது. இவற்றில் வாழ்ந்த ராஜகுருமார் மைசூர் மாகாராஜாக்களுக்கு ஆசான்களாகவும் அறிவுரை கூறுபவோராகவும் இருந்தனர். மாகாராஜாக்கள் சாமுண்டித் தெய்வத்தின் அடியார்களாய் இருந்த காரணத்தினால் சாமுண்டி மலையை நோக்கி மாளிகை கட்டப்பட்டுள்ளது. இம்மாளிகையில் அரசசபை கூடுவதற்காக இரு தர்பார் மண்டபங்களையும் பல சுற்றுப் பிரகாரங்களையும் தோட்டங்களையும் பிற கட்டிடங்களையும் காணலாம். மண்டபங்கள், வளைவுகள், தூண்கள் யாவும் அழகான கண்களைக் கவரும் வேலைப்பாடுகளையும் வர்ண பூவேலைப்பாடுகளையும் கொண்டிருந்தன. உண்மையில் இம்மாளிகையைச் சுற்றிப் பார்ப்பதற்கு ஒரு நாள் போதாது.

மாளிகையில் முழுப் பகல் பொழுதையும் செலவிட்டபின் அன்று மாலை பிருந்தாவன் தோட்டத்துக்குச் சென்றோம். இது கிருஷ்ணராஜசாகர அணைக்கட்டுக்கு அருகே கட்டப்பட்டுள்ளது. காவேரி ஆற்றை மறித்து இந்த அணைக்கட்டு கட்டப்பட்டுள்ளது. பிருந்தாவன் தோட்டத்தை அமைக்கும் பணிகள் 1927இல் ஆரம்பிக்கப்பட்டு 1932இல் முடிக்கப்பட்டது. இதற்கு ஆண்டு தோறும் 2 மில்லியன் சுற்றுலாப் பயணிகள் வருவதாகக் கணக்கிட்டிருக்கின்றனர். இத்தோட்டத்தில் பல சினிமாக் காட்சிகள் படமாக்கப்பட்டுள்ளன. 60, 70பதுகளில் வந்த பெரும்பாலான தமிழ்ப் படங்களில் காதல் காட்சிகள் படமாக்கப்பட்டன. இப்போது இங்கு போகாமல் நமது படப்பிடிப்பாளர்கள் சுவிற்சர்லாந்து, பிரான்ஸ், இத்தாலி போன்ற ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்று படம்பிடிக்கின்றனர்.

மைசூர் திவானாக இருந்த சேர் மிஸ்ரா இஸ்மாயில் என்பவரே இத்தோட்டத்தைக் கட்டுவித்தார். அத்துடன் இவரை அணைக்கட்டையும் கட்டுவித்து பெரிய கால்வாய்கள் மூலம் 120,000 ஏக்கருக்கு நீர்ப்பாசன வசதிகள் ஏற்படுத்தினார். இவருக்கு ஊக்கம் கொடுத்தவர் ஹைதர் அலியென்ற அரசாராவர். இவரே பங்களூர் லால்பாக் தாவரவியல் பூங்காவையும் கட்டுவித்தார்.



மைசூர் பிருந்தாவன் தோட்டம்

இத்தோட்டம் தற்போது கர்நாடக அரசின் காவேரி நீர்ப்பாசன கூட்டுத் தாபனத்தால் நிர்வகிக்கப்படுகிறது. இத்தோட்டம் 60 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது. இதற்கருகில் 75 ஏக்கர் பழத் தோட்டமும் இரு நாகவனம் (30 ஏக்கர்), சந்திரவனம் (5 ஏக்கர்) என்ற இரு தோட்டக் கலைப் பண்ணைகளும் அமைந்துள்ளன. இத்தோட்டம் மூன்று தளங்களைக் கொண்டுள்

(தொடர்ச்சி 40ஆம் பக்கம்...)




யோகா சோதிடம்


கிரகப்பொருத்தம் பார்த்தல் · சுபமுகூர்த்தம் கணித்தல்

பலன் பார்த்தல் · சாதகக் குறிப்புக் கணித்தல்

தொடர்புகளுக்கு: 416.299.8361

# பாடசாலைகளில் ஒத்துழைப்புடன் கற்றல் செயற்பாடு வலுப்படுத்தப்பட வேண்டும்

## நாடும் நடப்பும் - 23



சி. நற்குணலிங்கம்
நெல்லியடி - இலங்கை

வகுப்பறையில் ஒத்துழைப்புடன் கற்றல் என்ற செயல்நிலையால் மாணவர்கள் அதிக பயன் பெறலாம். மாணவர்களுக்கு வழங்கப்படும் செயற்பாடுகள் மற்றும் ஒப்படைகளை கொடுக்கப்பட்ட வகுப்பறைப் பாடவேளையில் சுயேச்சையாகத் தமது இடத்தில் இருந்தவாறே தனித் தனியாக மேற்கொள்ளும் படிமுறையும் உண்டு. இந்த முறை மரபு வழிவந்த அணுகுமுறையாகக் கொள்ளப்படுகிறது. இங்கு வகுப்பறையில் சிறு குழுக்களாக அதாவது, மூன்று தொடக்கம் ஆறு அங்கத்தவர்களைக் கொண்ட மாணவர் குழுக்களை அமைத்து, ஒரு தலைப்பைக் கொடுத்து அதன்வழி அவர்களை இயங்க வைக்கும் செயற்பாடு "ஒத்துழைப்புடன் கற்றல்" என வரையறை செய்யப்படுகிறது. இக் கற்றல் முறைமை இங்கு மிகவும் அருகிக் காணப்படுகின்றது. இதன் நன்மைகளை நன்கு புரிந்து கொண்டால் இம்முறை வலுப்படுத்தப்பட வேண்டும் என்பது புரியும்.

மனித வாழ்வியலில் கல்வி என்பது அறிவின் திறவுகோலாக முதன்மை பெறுகிறது. அந்தவகையிலே ஒவ்வொருவரும் தமது அன்றாட வாழ்க்கையில் ஏதேனும் ஒன்றை அறிந்து கொள்வதற்கும், புரிந்துகொள்வதற்கும் அதன்வழி சிறப்பாக வாழ்வதற்கும் கல்வி அவசியம். இதனை உணர்ந்து பாடசாலைக்குச் செல்வோர் எண்ணிக்கை குறைவு. வாழ்க்கையோடு தொடர்புடைய சகல விடயங்களையும் அறிந்துகொள்ள முடியாத வகையில் எழுத்தறிவாற்றல் இன்றிய நிலையில் பலருள்ளனர். எமது நாட்டில் 1945ஆம் ஆண்டு அறிமுகமான இலவசக் கல்வி வசதி இருந்தும் கற்றலில் தம்மை முழுமையாக ஈடுபடுத்த முடியாமல் தத்தளிக்கும் மாணவர்கள் இருப்பது கவலைக்கு உரிய விடயம். பிள்ளைகள் எதிர் காலத்தில் நன்முறையில் வாழ்வதற்கு எத்தகைய அறிவுத்திறன்கள், தேர்ச்சிகள், மனப்பாங்குகள் தேவை என்பதை ஆசிரியர்கள் மதிப்பீடு செய்து கொள்ள வேண்டும். அதன் அடிப்படையில் எந்தக் கற்பித்தல் முறையைப் பயன்படுத்தினால் எல்லா மாணவர்களையும் ஒன்றிணைத்துக் கற்றல் செயற்பாடுகளில் ஈடுபடுத்தலாம் என்பதை உணர்ந்து செயலாற்ற வேண்டும். கற்றல் செயற்பாடுகளில் இடர்படும் மாணவர்களை வழிநடத்த வேண்டும். இதற்கு ஒத்துழைப்புடன் கற்றல் சிறந்த வழியாகும்.



கற்பிக்கப்படும் விடயத்தை முன்கூட்டியே ஒழுங்கமைத்துக் கொள்ளும் ஆசிரியர்கள் தங்கள் கற்பித்தல் செயற்பாட்டை ஆரம்பிப்பதற்கு முன்பாகவே மாணவர்களைத் திசைமுகப்படுத்தி விடுகின்றனர். Education என்ற ஆங்கிலச் சொல்லின் பொருள் "வெளிக்கொணர்தல்" எனக்கூறி, கல்வியை ஆங்கிலேயர்கள் வரையறுத்து உள்ளனர். இப்பொருள் ஒத்துழைப்புடன் கற்றல் முறைமையுடன் ஒத்துப் போவதைக் காணலாம். மகிழ்வான சூழலில் மாணவர்கள் குழுவாக இயங்குவதன் மூலம் அவர்களின் அறிவு மற்றும் திறன் வீச்சுக்களை வெளிக்கொணரும் செயற்பாடுகள் இலகுவாகவும், திறம்படவும் அமைந்து விடுகின்றன. வகுப்பறைச் செயன்முறைகள் குழுச் செயற்பாடான கற்றலில் ஈடுபாட்டை அதிகரிக்கவும், பாடங்களை விரும்பிக் கற்கவும், கிரகிப்புடன் கூர்ந்து கற்கவும் சாதகமான சூழலைத் தருகின்றன.

பயனுறுதி வாய்ந்த கற்பித்தலுக்குக் குழு சார் அம்சங்கள் பயனுறுதியாக அமையும். கற்றல் பரப்பில் கற்பித்தல் சார் தேவைகள் விருத்தியுறும். இணைந்து இயங்கும் ஆதரவை வழங்கும், கற்றல்

(தொடர்ச்சி 35ஆம் பக்கம்...)

BEST DEAL FROM ROGERS

ROGERS™

Unbeatable Cell Phone Deals

Call For Best Deal

- Home Phone
- Tamil Chanels
- High Speed -150mbps Unlimited Internet (Free advanced WiFi Modem)
- Home phone /Internet /Digital Basic TV

- $35/M 2Gb
- $45/M 4GB
- $50 /M 6Gb
- $55/M 8GB
- $65/M 10GB
- No Contract
- Canada wide free call
- Unlimited world wide text message

Free unlimited calls for
- INDIA
- PAKISTAN
- CHINA
- SINGAPORE
- Japan
- Korea
- Malaysia and Indonesia



ROGERS Smart Home Monitoring

SAVE UP TO $1350

• Free camera • Free thermostat • Free door lock

Best Internet Offer for Students
Ignite 1gb unlimited internet with free advance wifi modem

தமிழில் தொடர்புகளுக்கு: SANJAY : 416.315.2917

## BASEMENT FOR RENT

**SCARB. GOLF CLUB & ELLESMERE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to facilities. Avail. March 01, 2020.
தொடர்புகளுக்கு: **416.451.0055**

**MCCOWAN & HIGHGLEN**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking. Single or couple preferred. Close to facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.822.5949**

**MORNINGSIDE & NIGHTSTAR**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, 1 parking, laundry. Close to facilities. Avail. immediately.
**647.622.3182 / 416.335.9883**

**MORNINGSIDE & OLD FINCH**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.885.1033**

**9Th LINE & 14Th AVENUE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Couple preferred. Avail. immediately.
**647.872.0524 / 647.867.5307**

**BIRCHMOUNT & LAWRENCE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Rent+utilities. TTC at door step. Avail. March 01, 2020.
**416.759.9899 / 416.275.7764**

**BELLAMY ELLESMERE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, 1 parking, laundry. Close to mall, school, TTC. Family preferred. Avail. immediately.
**647.806.5987 / 647.710.8479**

**NEILSON & MCLEVIN**
1 Bedroom bsmt for rent. Parking, laundry. Close to all facilities. Avail. immediately.
**416.299.4904 / 416.912.1572**

**MORNINGSIDE & FINCH**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, close to TTC & park. Opposite to Eraa super market. Small family or bachelors preferred.
தொடர்புகளுக்கு: **647.606.8326**

**NEILSON & FINCH**
1 bedroom bsmt for rent. Parking, laundry. Hindu female or couple preferred. Close to all facilities. Avail. Immediately.
**416. 990. 9514 / 647. 468. 8403**

**KENNEDY & EGLINTON**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, Parking. Single preferred. Close to all facilities. Avail. immediately.
**Call 416.759.9859 After 4:00pm**

## BASEMENT FOR RENT

**LAWRENCE & MORNINGSIDE**
2 Bedroom basement for rent. Sep. entrance, Parking, utilities. Family preferred. Close to all facilities. Avail. immediately.
**416.722.1621/416.358.9747**

## BASEMENT FOR RENT

**MORNINGSIDE & FINCH**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, laundry. No parking. Couple preferred. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647. 701.6617**

**MORNINGSIDE & OLD FINCH**
2 bedroom bsmt for rent. Sep. entrance, laundry, utilities. Female preferred. TTC at door step. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.471.6815**

**NEILSON & FINCH**
2 Bedrooms bsmt for rent . Sep. entrance, parking. Single or couple preferred. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.303.8801**

**MCCOWAN & STEELES**
2 Bedrooms for rent in a basement. Sep. entrance. Close to all facilities. Avail. February 01, 2020.
தொடர்புகளுக்கு: **905.472.8528**

**MARKHAM & STEELES**
2 Bedrooms for rent in a basement. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. February 01, 2019.
**416.587.6564 / 647.678.0611**

**MARKHAM & STEELES**
Brand new 2 bedrooms bsmt for rent. Sep. entrance, private lundery. Also 1 bedroom for rent. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.826.8811**

**BRIMLEY & STEELES**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, bus. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.786.5816**

**MARKHAM & 14TH AVENUE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, 1 parking, laundry. Rent$1000. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.833.8691**

**9TH LINE & 16TH AVENUE**
2 Bedroom newly renovated bsmt for rent. Sep. entrance, Parking, laundry. 5 mints to transit, schools. Avail. Immediately.
தொடர்புகளுக்கு: **647. 395.5914**

**MORNINGSIDE & FINCH**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, Parking, laundry, internet, utilities. Close to all facilities. Avail. Immediately.
தொடர்புகளுக்கு: **416.918.1096**

**HWY 7 & NINTH LINE ( MARKHAM )**
2 bedroom new bsmt for rent $975 / 1 Room for rent $550. Parking. Female preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.505.1131**

## வீடு வாடகைக்குபெற்றிட/கொடுத்திட

வாடகைக்கு வீடுகள், Condo., Bsmtsபோன்றவற்றை Scarborough, Markham, Mississauga, Brampton, Ajax பகுதிகளில் பெற்றிட
அழையுங்கள்: **647.402.2937**

## ROOM FOR RENT

**MORNINGSIDE & LAWRENCE**
Room for rent. Sep. washroom. Internet. Ladies only. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.852.8264**

**WARDEN & FINCH**
1 Room for rent in a condo. Internet. female student only. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.983.7270**

**NEILSON & MCLEVIN**
2 bedrooms for rent. Parking. Couple or student preferred. Vegetarian preferred. Close to all facilities. Avail. immediately.
**647.534.5617 / 416.609.1484**

**CHURCH & ROSSLAND**
Rooms for rent in main floor. Parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.939.9353**

**SCAR.GOLF CLUB & LAWRENCE**
Room for rent in a bsmt. Laundry, Close to TTC, mall, bank, school. Avail. immediately.
**416.454.9986 / 416.219.4936**

**MCCOWAN & LAWRENCE**
1 Room for rent in a basement. Sep. entrance. No parking. Couple or working lady preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.826.3635**

**MORNINGSIDE & SHEPPARD**
1 Master Bedroom with washroom for rent. Can be shared by 2 people. (Couple or 2 female students). Avail. Immediately.
தொடர்புகளுக்கு: **647.532.6841**

**BROCK & TAUNTON (Pickering)**
1 Bedroom room for rent. Laundry, internet, utilities. Single Female or Students Preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.914.6099**

**ORTON PARK & LAWRENCE**
1 Bedroom for rent. Parking, laundry. Male preferred. No smoking & No drinking. Avail. immediately.
**647.707.0457 / 647.857.9536**

**KENNEDY & LAWRENCE**
1 Room for Rent. Parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.923.8283**

**9TH LINE & 14TH AVENUE**
1 Room for rent. Parking, laundry. Close to YRT & all facilities. Avail. immediately.
**416.648.1987 / 416.669.3549**

**BRIMLEY & EGLINTON**
1 Room for rent. Laundry, internet. No smoke. Close to all facilities. Avail. immediately.
**416.294.0193 / 416.892.7762**

## ROOM FOR RENT

**PHARMACY & FINCH**
1 Rooms for rent in main floor. Attached washroom. Unlimited internet. Male only. No alcohol. Avail. immediately.
**416.201.1222 / 647.261.0216**

## HOUSE FOR RENT

**TAPSCOTT & FINCH**
4 Bedroom house (Main Level) for rent. Close to all facilities. Avail. March 01, 2020
தொடர்புகளுக்கு: **289.608.9360**

**MCCOWAN & LAWRENCE**
3 Bedroom house (Main floor) for rent. Parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.678.2599**

**MORNINGSIDE & JOHN STONER DR**
3+1 Bedroom house for rent. Parking, laundry. Family Preferred. Close to all facilities. Avail. February 01, 2020.
தொடர்புகளுக்கு: **416.951.1369**

**LAWRENCE & OVERTURE**
3 Bedroom house for rent. Parking, laundry. Family Preferred. Close to all facilities. Avail. February 01, 2020.
தொடர்புகளுக்கு: **416.931.1165**

**MIDLAND & LAWRENCE**
3 Bedroom house for rent. Parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.417.9027**

## BASEMENT FOR RENT

**9th LINE & 14Th AVENUE**
3 Bedroom brand new basement for rent. Sep. entrance, 2 Parking, laundry, utilities. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.473.2988**

## BASEMENT FOR RENT

**MARKHAM & 14Th AVENUE**
2 Bedroom basement for rent. Sep. entrance. One parking, laundry. Female/small family preferred. Close to YRT & all facilities. Avail. immediately.
**416.893.4651 / 416.551.6778**

## BASEMENT FOR RENT

**NEILSON & SHEPPARD**
1 Bedroom basement for rent. Sep. entrance. Parking, laundry. Single female student or senior preferred. Close to all facilities. Avail. immediately.
**Meals facility also available for senior.**
**416.358.5859 / 647.569.7022**

மேலும் பக்கங்கள் 29, 30, 31, 32, 33

## BASEMENT FOR RENT

**Westney & Harwood (South)**

2 Bedroom basement for rent. Sep. entrance. Parking, laundry, internet, utilities. Couple or small family preferred. Close to go station, hospital, hwy 401 & Lakeside. Avail. March 01, 2020.

தொடர்புகளுக்கு: **647.608.6097**

## BASEMENT FOR RENT

**SHEPPARD & ROUGE RIVER**

2 Bedroom bsmt for rent. Sep. entrance, laundry. Close to all facilities. Avail. immediately.

தொடர்புகளுக்கு: **647.709.4746**

## BASEMENT FOR RENT

**KENNEDY & EGLINTON (Near Subway)**

2 Bedroom , living area & Kitchen. private entrance, Convenenient location. Washroom & other facilities. Working couple or studwnts preferred. Neat & clean. Parking also.

**Please call: 647.719.5853**

## BASEMENT FOR RENT

**MORNINGSIDE & NIGHT STAR**

2 Bedroom brand new bsmt for rent. Parking, laundry, utilities. Couple preferred. Close to all facilities. Avail. immediately.

**416.332.1513 / 647.980.1513**

## BASEMENT FOR RENT

**DIXIE & FINCH**

2 Bedrooms walkout bsmt for rent. Parking, laundry, internet. Close to pickering mall. Avail. immediately.

**647.880.4522 / 647.269.5717**

## CONDO FOR RENT

**KENNEDY & HWY 401**

1 Bedroom condo for rent. Parking, laundry, utilities. Close to all facilities. Avail. February 01, 2020.

தொடர்புகளுக்கு: **647.808.0406**

**MARKHAM & ELLESMERE**

Newly built condo for Rent . 2 bedrooms plus Den with 2 full wash rooms

$ 2350 per month

தொடர்புகளுக்கு: **416.918. 9848**

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை 5 நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

## BASEMENT FOR RENT

**HWY 7 & DONALD COUSENS**

2 Bedroom basement for rent. Sep. entrance, Parking, laundry. New appliances, large closet & storage Family preferred. Close to all facilities. Avail. immediately.

தொடர்புகளுக்கு: **647.646.3866**

## BASEMENT FOR RENT

**NEILSON & MCLEVIN**

2 Bedroom bsmt for rent. Sep. entrance, laundry. No parking. Couple or 2 students preferred. No smoking. Close to mall, TTC & all facilities. Avail. immediately.

தொடர்புகளுக்கு: **416.439.9156**

## BASEMENT FOR RENT

**ROSSLAND & CHURCH**

Brand new 2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Rent+ utilities 40%. Couple or small family preferred. Close to facilities. Avail. immediately.

**647.290.5918 / 416.856.7547**

## BASEMENT FOR RENT

**MARKHAM & DENISON**

2 Bedroom +2 washroom brand new bsmt for rent. Sep. entrance, Parking, laundry. . Close to all facilities. Avail. Immediately.

தொடர்புகளுக்கு: **647. 588.2533**

## CONDO FOR RENT

**MCCOWAN & EGLINTON**

3 Bedroom & 1½ wasroom condo for rent. Rent in all inclusive. Utilities (Hydro, water, heating) Cable TV & Underground 1 parking.

**Contact Elango: 416.522.5651**

## CONDO FOR RENT

**BIRCHMOUNT & LAWRENCE**

2 bedroom + 2 full washroom condo for Rent. 1 Parking, laundry. Rent+utilities. Close to facilities. Avail. immediately.

**647.637.7691 / 416.844.7390**

## CONDO FOR SALE

**SCARBOROUGH**

2 Bedroom & 2 washroom condo for sale. Convenient location

**Please contact for further details:**

**416.648.7283**

## CONDO FOR SALE

**MARKHAM & ELLESMERE**

2 Bedrooms plus den with 2 full wash rooms in assignment sale around

**$ 535,000**

Available immediately for occupancy

Contact

**SAM S. MANIAN - 416-918 9848**

## ROOM FOR RENT

**MCLEVIN & TAPSCOTT**

4 Bedrooms for rent. Female students preferred. Close to all facilities. Avail. immediately.

தொடர்புகளுக்கு: **647.778.8375**

## ROOM FOR RENT

**MARKHAM & EGLINTON**

1 Single bed room in an Apartment for Rent. Shared kitchen & Washroom. Single preferred. Down stairs laundry, internet, utilities. Near TTC, 24hr bus service & Metro supermarket.

**647.833.2573/ 647.339.1989**

## HOUSE FOR RENT

**NEILSON & MCLEVIN**

3 Bedroom with 3 balcony house for rent. Parking, laundry. Close to all facilities. Avail. immediately.

தொடர்புகளுக்கு: **647.786.6161**

## HOUSE FOR RENT

**ELLESMERE & ORTON PARK**

3 Bedroom house for rent. Parking, laundry. Close to all facilities. Avail. immediately.

தொடர்புகளுக்கு: **647.998.0181**

## HOUSE FOR RENT

**HARWOOD & HWY 2**

3 Bedrooms house (main floor) for rent. Massive parking, laundry. Close to all facilities. Avail. immediately.

தொடர்புகளுக்கு: **416.899.9199**

## HOUSE FOR RENT

**WESTNEY RD. & RITCHIE RD**

3 Bedroom town house for rent. Parking, laundry. Close to go station & elementary school. Avail. immediately.

**647.656.6214/416.299.6214**

## HOUSE FOR RENT

**ELLESMERE & SCA.GOLF CLUB**

3 Bedroom banglow house for rent. Parking. Rent+utilities. No pets or no smoke. Close to all facilities. Avail. immediately.

**647.998.0181 / 905.471.2444**

## HOUSE FOR RENT

**Markham & Steeles**

3 Bedroom & 2½ washroom house for rent.

Close to all facilities. Avail. February 15, 2020

தொடர்புகளுக்கு: **416.529.2190**

## HOUSE FOR RENT

**BRIMLEY & LAWRENCE**

3 Bedrooms house for rent near **Thompson park**. Include parking. sep. laundry. Family preferred. Close to all facilities. No pets & no Smoke. Utilities Extra. Avail. immediately.

தொடர்புகளுக்கு: **437.888.7750**

## HOUSE / BASEMENT FOR RENT

**BRIMLEY & BRIMORTON**

3 Bedroom **house(main floor)** for rent. Rent+utilities. Parking, laundry. Close to all facilities. Avail. immediately.

2 Bedroom **bsmt** for rent. Sep. entrance. Rent+utilities. Avail. immediately. Family or couples preferred.

தொடர்புகளுக்கு: **647.649.9780**

## வாகன போக்குவரத்து

விமானநிலையம், நயகரா நீர்வீழ்ச்சி மற்றும் நீண்ட தூர, குறுகிய தூரப் பயணங்களுக்கு

அழையுங்கள்: **416.880.5952**

## SALE / RENT

**MARKHAM & SHEPPARD**

4 bedroom & 3 washroom house for **Sale.**

**NEILSON & SHEPPARD**

2 bedroom & 2wasroom Houses for **Rent.**

Kannan Kankesu: **416.834.4200**

## HOUSE/ CONDO FOR SALE

**SCARBOROUGH**

**LAWRENCE & KINGSTON RD**

3 Bedroom, 2 bathroom with 2 undergrand parking Condo apartment for sale $319, 900.00

**PICKERING**

**LIVERPOOL & BAYLY**

3 Bedroom, detached bangalow house with detached garage. close to hwy 401 for sale $540,000.00

**416.917.0557**

**Rajah Masillamany**

**(HomeLife / Future Realty Inc.)**

## HOUSE/CONDO FOR RENT

**STAINES & MORNINGSIDE**

**(Scarborough)**

4 Bedroom, 3 washroom house for rent. Avail. February 15, 2020.

**CONDO FOR RENT**

**MIDLAND & LAWRENCE**

**(Scarborough)**

2 Bedrooms+2 full washroom condo for rent. 1Parking, Avail. Feb. 01, 2020

தொடர்புகளுக்கு: **647.686.8590**

## உடனடி வாடகைக்கு, விற்பனைக்கு

வீடுகள், கொண்டோக்கள்

விற்க, வாங்க,

வாடகைக்கு விட,

வாடகைக்கு பெற்றுக்கொள்ள

அழையுங்கள்

**Jey 416-816-9011**

## HOUSE FOR RENT

**SALEM & ROSSLAND**

4 Bedrooms house for rent. Parking, laundry. Rent +70% utilities. Close to all facilities. Avail. immediately.

தொடர்புகளுக்கு: **647.767.4929**

## HOUSE FOR RENT

**MORNINGSIDE & SHEPPARD**

4 Bedrooms house for rent / 1 bed room basement with sep.entrance. Family preferred. Close to all facilities. Avail. March 01, 2020.

**416.677.4009/647.523.9896**

## SPACE FOR RENT

**MARKHAM & NASHDENE**

from 200 to 600 sqft space for rent. Suitable for tutoring classes, dock level warehouse.

தொடர்புகளுக்கு:

**647.880.1416**

## OFFICE SPACE FOR RENT

**MIDDLEFIELD & FINCH**

Avail. immediately.

தொடர்புகளுக்கு:

**647.296.7932**

## வாடகைக்கு

**4 BR, 3 BR, 2 BR, 1 BR**

**House, Condo, Basement**

**வாடகைக்கு உள்ளது**

**அழையுங்கள்.**

**647.861.8240**

## வீடு விற்பனைக்கு

கொழும்பு வத்தளையில் 4 அறைகளுடன் கூடிய அழகான மாடி வீடு விற்பனைக்கு உண்டு. விலை பேசித் தீர்மானிக்கலாம்.

தொடர்புகளுக்கு:

**416.666.1855**

## CONVENIENCE STORE BUSINESS FOR SALE

**Convenience store Business for sale** in **Brighton, Ontario**.

With inventory $20k. Weekly sale 7k to 8 k. From oshawa 40 minutes drive on east if anyone interested.

Please contact : **416.906.5013**

## SPACES FOR RENT

**MARKHAM & MCNICOLL**இல் பகுதியில் Spaces வாடகைக்கு உண்டு. (Office, Classes போன்றவற்றுக்கு பாவிக்கக்கூடியது)

**110, Ironside Crescent (Unite 06), Toronto, ON, M1X 1M2**

தொடர்புகளுக்கு: **647.836.5246**

## மணமக்கள் தேவை

யாழ். இந்து வேளாளர் குலத்தில், 1984ஆம் ஆண்டு பரணி நட்சத்திரத்தில் பிறந்த மணமகனுக்கு **மணமகள்** தேவை.

1986 ஆம் ஆண்டு பிறந்த, கனடாவில் பட்டப் படிப்பு முடித்த மணமகளுக்கு **மணமகன்** கனடாவில் தேவை.

தொடர்புகளுக்கு: **647.550.9689**

## மணமகள் தேவை

யாழ்ப்பாணத்தில் பிறந்து அவுஸ்ரேலியாவில் வாழும் 30 வயதுடைய மணமகனுக்கு அவுஸ்ரேலியாவில் அல்லது கனடாவில் மணமகள். தேவை.

தொடர்புகளுக்கு: **416.580.1340**

## மணமகன் தேவை

இலங்கையில் வாழும் 1978இல் பிறந்த யாழ். இந்து வேளாளர் குலத்தைச் சேர்ந்த 4இல் செவ்வாய் உள்ள படித்த மணமகளுக்கு மணமகன் தேவை.

தொடர்புகளுக்கு: **416.455.6017**

## திருமணசேவை

திருமண சேவைக்கு

தொடர்பு கொள்ளவும்

**905.607.3896**

## MOVING & DELIVERY

புதிய, பாவித்த Fridge, Stove விற்பனைக்கு உண்டு.

பழைய இரும்பு பொருட்கள், Electonic பொருட்கள் இலவசமாக எடுக்கப்படும்.

Junk Removal

Call Rajan: **647.524.1320**

## ஸ்ரீசாயி திருமண சேவை

உங்கள் பிள்ளைகளுக்கு பொருத்தமான வாழ்க்கைத் துணையை தேடிக்கொள்ள எங்கள் சேவையை நாடுங்கள். பல துறைகளில் தகுதி பெற்ற மணமகன், மணமகள் உள்ளனர்.

**416.890.6497**

**srisai2912@hotmail.com**

## JUNK REMOVAL

பழைய இரும்பு பொருட்கள், **Electronics** பொருட்கள் வீசுவதற்காக வைத்திருந்தால் இலவசமாக எடுக்கப்படும்.

**MOVING / DELIVERY AVAILABLE.**

தொடர்புகளுக்கு:

பிறேம் - **647.835.5244**

## SPACE FOR RENT

**MARKHAM & PAINTED POST**

Tutoring, dance classes மற்றும் கலை வகுப்புகள் நடத்துவதற்கு உகந்த விசாலமான இடம் basement இல் வாடகைக்கு உண்டு.

Utilities included . Available immediately

தொடர்புகளுக்கு: **647.885.2737/ 416.305.4887**

## TAILORING

**SCARBOROUGH**இல் Saree Blouses $25க்கு தைத்துக் கொடுக்கப்படும்.

**V G Tailors:**

**647.621.3694**

## வேலைக்கு ஆட்கள் தேவை

**NALLUR CLINIC FOR AYURVEDA & REHAB**

ஆயுர்வேத வைத்தியப் பிரிவிற்கு பெண் உதவியாளர் தேவை. சம்பளம் நேரில் பேசி முடிவு செய்யலாம்.

Full time/Part time (Saturday/Sunday)

தொடர்புகளுக்கு: **416.335.4111**

## AZ DRIVERS WANTED

**Seeking for experienced AZ drivers for TORONTO TO MONTREAL CANADA & USA.**
Requirements:
Minimum 3 years' experience, Cross Border experience, Good Communication Skills & Clean Abstract
**Please Contact : 416-835-6701**

## AZ DRIVERS WANTED

Amero Logistics Inc. is currently hiring experienced AZ drivers for Toronto to Montreal run. Also AZ city drivers for local work in GTA.
Need 1-year experience and clean CVOR and abstract. Weekly Pay .
For more info call : **647.274.0300**

## வயோதிபர் பராமரிப்பு

வயோதிபர்களை நீண்ட, குறுகிய காலத்திற்கு வீட்டில் வைத்து பராமரிக்கப்படும். Rooms வாடகைக்கு உண்டு
தொடர்புகளுக்கு: **416.846.6093**

## PARCEL SERVICE ( EUROPE )

Europe பகுதிக்கு மிகக் குறைந்த கட்டணத்தில் பொதிகளை அனுப்ப தொடர்பு கொள்ளவும்.
**416.880.1416**

## பராமரிப்பாளர் தேவை

**SCARBOROUGH & ETOBICOKE**
முதியவர் ஒருவரை வீட்டில் இருந்து பராமரிக்க ஆள் தேவை.
Need a housemaid to take care of a senior for full time.
**416.825.4610 / 416.779.7563**

## வேலைக்கு ஆட்கள் தேவை

**VAUGHAN CITY** இல் CLEANING வேலைக்கு ஆட்கள் (ஆண்/பெண்) தேவை.
Full Time & Part Time
தொடர்புகளுக்கு:
**416.918.5785**

## கோயில் முகாமையாளர் தேவை

ஒட்டாவா சிவன் ஆலயத்திற்குப் பகுதி நேர அல்லது முழு நேர முகாமையாளர் தேவை. கோயில் முன் அனுபவம் இருந்தால் வரவேற்கத்தக்கது
உங்கள் விண்ணப்பங்களை **info@ottawasivantemple.com** க்கு அனுப்பிவைக்கவும்.
மேலதிக விபரங்களுக்கு **613.489.1774**

## HIRING

Dental assistant, Dental receptionist & Dental hygienist ஆகிய வேலைகள் **Scarborough Dental Office**இல் உண்டு.
please send your resume to :
**karunks123@gmail.com**
தொடர்புகளுக்கு: **647.761.6644**

## AZ/DZ DRIVERS WANTED

Experienced drivers wanted immediately (At least one year) for long & short run with in Canada. Full time, Part time & on call.
**647.528.2224 / 647.830.4644**

## குழந்தை பராமரிப்பாளர் தேவை

Oshawa பகுதியில் குழந்தைகளைப் பராமரிக்க பெண் பராமரிப்பாளர் உடனடியாகத் தேவை. தங்குவதற்கு அறை மற்றும் சாப்பாடும் வீட்டில் தரப்படும்.
சம்பளமும் வழங்கப்படும்.
**Contact : 437.213.8866**

## வேலைக்கு ஆள் தேவை

**Markham & Denison** சந்திப்புக்கு அருகில் முதியவர் ஒருவரைப் பராமரிக்கவும், சமையல் வேலை செய்யவும் ஆள் உடனடியாகத் தேவை.
Working time 10:00am to 3:00pm
தொடர்புகளுக்கு: **416.720.5387**

## STRAT AN ONLINE BUSINESS

**Dating website, Classification website, Online Auction Matrimonial Website and Home Based business sites!**
we design, build, host and advertise
Check : lancanint.com
**Call 647 710 3552** 2760 Victoria Park Avenue Suite : 211, North York

## JTJ FRENCH TUTOR

French classes 4years old to 15 years old (Grade 1 to 9)
Education: **(High school Saint-ex) and (College Maisonneuve.) in Montreal**
Address :- **Morningside & McNicoll, Toronto ON.**
I can help for the homework, grammer, vocabulary, comprehension, wrinting, understanding conversation.
Thanushiya Balliah: **647-666-2526 / 514-887-2478**

## CHEF WANTED

"Looking for experience serious, Line cook Chef has availability 7 days full time or part time"
**Restaurant address :**
AFFY's PREMIUM GRILL 55 Lebovic Ave C101 Scarborough.
தொடர்புகளுக்கு: **647.290.6992**

**இறந்த காலம் என்ற கண்ணாடியே நிகழ்காலத்தில் தடுமாறாமல் நடக்க உதவி செய்கிறது**

# வீடு விற்பனைக்கு

உக்கிளாங்குளம் 1ஆம் ஒழுங்கையிலுள்ள (வவுனியாவிலிருந்து 2.5 கி.மீ) சகல வசதிகளும் கொண்ட காணியுடன் அழகிய வீடும் விற்பனைக்கு உண்டு. 3 Rooms, 2 Halls, 1 Kitchen and 1 Attached bathroom
இவற்றுடன் என்றும் வற்றாத கிணறு மற்றும் தனியாக இரண்டு அறைகளுடன் கூடிய சிறிய வீடு தனியான bathroom உடன் உண்டு. பயன்தரும் மரங்களும் காணியில் உண்டு. மிகவும் பாதுகாப்பான அமைதியான சூழல். கண்ணியமான அயலவர்கள்.
**காணியின் விலை:**
**40 லட்சம் இலங்கை ரூபாய்.**
தொடர்புகளுக்கு:
**437.235.4944/780.405.6692**
**+ 94.77.265.6171** (SriLanka)

# FOR RENT - CONDO/HOUSE / BASEMENT
# WATSON PROPERTY MANAGEMENT - 416-284-9999

*Scarborough – Markham / Lawrence – Detached-Main**
(3Brm, 1Bath) Well Maintained House in a High Demand Area, Steps To High School, Cedarbrae Mall, Library, Park, Community Centre, Ttc, 5 Minutes to Hwy 401. **[Asking $2150/m]**

***Scarborough – Ellesmere / Orton Park – Detached-Bsmt**
(1Brm + 1Bath) Quite & Convenient Location! Separate Entrance. Utilities are included. Close To U of T, Centennial College, Hospital & Hwy 401. **[Asking $900/m]**

***Scarborough – Morningside / Sheppard– Detached-Bsmt**
(1Brm + 1Bath) Basement Apartment With Separate Entrance. Utility Payment 35%. Close To Hospital, Ttc, Schools, Hwy 401. **[Asking $900/m]**

*** Markham - Markham / Major Mackenzie – Townhouse**
(3+1Brm, 4Bath) Well Maintained 4 Bdr Townhouse In High Demand Community. Steps To Donald Cousens Pkwy & Major Mac Bus Stop. Min To Go Train Station, Hwy 407, Schools & Hospital. **[Asking $2400/m]**

*** Scarborough– Morningside / Sheppard – Detached-Main**
(4Brm, 2Bath) Bright & Spacious House. Double Garage. 3 Parking Spaces. Close To Schools, Ttc, Hwy 401, Park. **[Asking $2600/m]**

***Whitby- Hwy 412 / Dundas – Townhouse**
(3 Brm +3 Bath) Brand New Townhouse for Lease. 2 Parking Spaces. Close to Hwy 401, 412 and Go-Station. **[Asking $2200/m]**

***Scarborough – Kingston/ Meadowvale/401 – Townhouse**
(3 Brm +2 Bath) Spacious Layout. Close To U Of T Scarborough, Hwy 401, Schools, Public Transit, 3 Parking Spaces. **[Asking $2500/m]**

*** Scarborough– Mccowan / Lawrence – Detached-Main**
(3Brm, 1Bath) Large living And Dining With Two Large Windows, 2 Parking Spaces. Closer To Schools, shopping **[Asking $2300/m]**

## வீட்டு முதலீட்டாளர்களுக்கான கருத்தரங்கு

- வாடகைக்கு விட சரியான வீட்டை எப்படி தெரிந்தெடுப்பது.
- அந்த வீடுக்கான கடனை எப்படிப்பெறுவது.
- சரியான வாடகையாளர்களை எப்படி கண்டுபிடிப்பது.
- அந்த வீட்டை சரியாக எப்படி நிர்வகித்து கூடிய லாபம் பெறுவது.

இதற்கான கருத்தரங்கில் கலந்துகொள்ள விரும்புபவர்கள்

தொடர்பு கொள்ளவும்: கரு கந்தையா: **416-284-5555**
watsonpm1989@gmail.com

## SEMINAR FOR INVESTORS

- How to select the right property to buy as an investment?
- How to qualify for mortgage for those properties?
- How to find the right tenant?
- How to manage the property to get high net income?

If you are interested contact us for more details! Limited Seats!

**Contact: Karu Kandiah: 416-616-7278**
watsonpm1989@gmail.com

# MANAGING RESIDENTIAL PROPERTIES
watsonpm1989@gmail.com

# முதலீட்டாளர்களே! நீங்கள் ஓய்வெடுங்கள்!!
## உங்கள் வீட்டை வாடகைக்கு கொடுத்து பராமரிக்கும் வேலையை நாங்கள் செய்து தருவோம்!!

எமது சேவைகள்:

- வீட்டின் சரியான வாடகையைத் தீர்மானிப்பது.
- வீட்டைச் சந்தைப்படுத்தி அதை விசாரிப்பவர்களுக்கு மேலும் தகவல் தருவது.
- தகுதியான வாடகையாளர்களை கூட்டிச் சென்று வீட்டைக் காட்டுவது.
- வாடகைக்குப் பெற விரும்புவோரின் வேலை, வருமானம், நம்பகத்தன்மை என்பவற்றை உறுதி செய்து கொள்ளுதல்.
- தகுதியான வாடகையாளருடன் வாடகை ஒப்பந்தத்தை செய்து கொள்ளுதல்.
- வாடகையாளர் குடியேற முன்னரும், பின்னரும் வீட்டின் நிலையை கவனித்துக் கொள்ளுதல்.
- சரியான திகதியில் வாடகைப்பணத்தை அறவிட்டு வீட்டுரிமையாளரின் வங்கிக்கணக்கில் வைப்பிலிடுதல்.
- பிரச்சனை தரும் வாடகையாளர்களை வெளியேற்றும் முயற்சியில் ஈடுபடல்.
- வீட்டில் திருத்த வேலைகள் தேவைப்படும் போது அதில் அனுபவம் வாய்ந்தவர்களை அனுப்பித் திருத்தும் முயற்சியில் ஈடுபடல்.
- வருட முடிவில் அந்த வீட்டின் வரவு செலவுக் கணக்கை உரிமையாளர்களுக்கு ஒப்புவித்தல்.
- வாடகை ஒப்பந்தத்தை புதுப்பித்தல்.
- வருடாந்த வாடகை அதிகரிப்பை அறிவித்தல்.
- வீட்டின் பெறுமதியில் ஏற்ற இறக்கத்தை அறிவித்தல்.
- திரும்பவும் வீடு உங்களுக்குத் தேவைப்படும் போதுசரியான வழிமுறைகளைக் கையாண்டு பெற்றுத்தரல்.
- வாடகைக்கு விடக்கூடிய குறைந்த விலையிலுள்ள வீடுகளை கண்டுபிடித்து வாங்க உதவி செய்தல்.
- வாடகைக்கு விடுவதற்கு வீட்டில் என்ன திருத்த வேலைகள் அவசியம் என்று அறிவுரை வழங்குதல்.

## You can relax while we take care of your investment property!

WATSON
PROPERTY
MANAGEMENT LTD

**Direct: 416-284-9999**
WatsonPM1989@gmail.com
80 Corporate Drive, Unit 207
Scarborough, ON, M1H 3G5



Karu Kandiah Director
30+ Years in Real Estate

## வேலைக்கு ஆட்கள் தேவை

Scarborough இல் அமைந்துள்ள நிறுவனத்தில் Sweets & Snacks தயாரிப்பதற்கும், Delivery செய்வதற்கும் Rolls சுற்றுவதற்கும் அனுபவமுள்ளோர் தேவைப்படுகின்றனர். ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

தொடர்புகளுக்கு: **647.895.3350**

## வேலை வாய்ப்பு / HELP WANTED

**தமிழ் உணவகம்** MCCOWAN & HWY 7 (MARKHAM)

**வாடிக்கையாளர் சேவை/Cashier**

FULL/PART TIME. TRAINING PROVIDED

Call: **416.358.5225**

## CARS, VANS & TRUCKS WANTED

**Any make, Any condition.**

**Pay top dollars.**

**Contact: 416.835.3475**

## TAKEOUT CATERING HELPER WANTED

**MARKHAM & MCNICOLL**

ரொட்டி, Short eats செய்வதற்கும், dishwashing, cleaning, kitchen helper வேலை செய்வதற்கும் முழு நேர, பகுதி நேர வேலையாட்கள் தேவை.

தொடர்புகளுக்கு : **416.820.1426 / 416.291.4545**

## வேலைக்கு ஆட்கள் தேவை

**PRK DOORS & WINDOWS**

**(MARKHAM & PROGRESS AVE.)**

கதவுகளுக்கு Paint அடிப்பதற்கு Spray painter தேவை. மேலும் மர வேலை தெரிந்தவர்களும் தேவை.

தொடர்புகளுக்கு: **416.875.4119**

## COOK WANTED

**KNIGHTS CORNER PUB & GRILL**

**KINGSTON & WHITE ROAD**

Experienced cook wanted. Full time or Part time.

**Please call : 647.706.9251**

## HELP WANTED

**Stouffville** பகுதியில் இயங்கிவரும் ***PIZZA STORE*** க்கு **PIZZA MAKER & DRIVER** தேவை.

Stouffville & Markham பகுதியில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

Payment flexible. (New to canada we can train them)

தொடர்புகளுக்கு : **416.953.4933**

## PTR DOORS & WINDOWS

OVER 14 YEARS EXPERIENCE

RESIDENTIAL & COMMERCIAL




- Custom Doors & Windows
- Front & Patio Door
- Replacement (Doors & Windows)
- California Shutters & Blinds
- Separate Entrance Door for Basement
- Replace Caulking
- Painting
- Pot Lights Installation

FREE ESTIMATE! Call Today

24 hours Emergency Service

We Fix Broken Glass Windows & Doors

**RAVI : 416-825-9482 KANNA : 647-297-7815**

email : ptrrenovation@gmail.com

## Alexander Immigration Services

Hemalatha K. Alexander, RCIC

Commissioner of Oaths

Canadian Government Licensed Immigration Consultant

- Express Entry
- Study Permit
- Visitor Visa
- Super Visa
- Citizenship
- LIMA & work Permit**
- Federal Skilled Workers
- Federal skilled Trades
- Canadian Exp. Class
- Business Immigration
- Provincial Nomination
- Family Sponsorship
- Visa extensions, renewal & more service

நிரந்தர குடியிருப்பு, விசா, குடியுரிமை மற்றும் பல சேவைகள் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில்

ஆலோசனைக்கு இன்றே அழையுங்கள்

**647-773-3673**

email: info@alexanderimmigration.ca

web: www.alexanderimmigration.ca

வசதியான புதிய முகவரியில்

GTA Square
5215 Finch Ave. East Suite 261,
Toronto ON M1S 0C2


10 Milner Business Court
Suite 300,
Toronto, ON M1B 3C2

** Kindly note we do not provide Canadian jobs

சொர்க்கம் திருமணசேவை



- 30, 33, 34 வயதுடைய கனடாவில் Engineer ஆகப் பணிபுரியும் மணமகன்களுக்கு தகுந்த மணமகள்களை தேடுகின்றோம்.
- கனடாவில் வாழும் 25, 30, 34 வயதுடைய மணமகன்களுக்கு தகுந்த மணமகள்களை இலங்கையில் தேடுகின்றோம்.
- கனடாவில் வாழும் 30 வயதுடைய மணமகளுக்கு தகுந்த மணமகனை இலங்கையில தேடுகின்றோம்.
- USஇல் வாழும் 26 வயதுடைய Engineer ஆகப் பணிபுரியும் மணமகனுக்கு தகுந்த மணமகளை தேடுகின்றோம்.
- கனடாவில் வாழும் 28 வயதுடைய மணமகனுக்கு யாழ்ப்பாணத்தில் தகுந்த மணமகளை தேடுகின்றோம்.



இலங்கை மற்றும் இந்தியாவில் இருந்தும் நல்ல வரன்கள் எடுத்து தரப்படும்

437.772.8129/416.666.1855

www.sorkhammatrimony.com



PERSONAL SUPPORT WORKER CLASSES

7 மாதங்களில் PSW பட்டதாரியாகி கைநிறைய சம்பாதியுங்கள். மிகக்குறைந்த கட்டணம் உடனடி வேலை வாய்ப்பு. புதிய பிரிவு ஆரம்பம்: February 18, 2020.

Toronto Business College:

416-291-5155



MATH & PHYSICS TUTORING

By a well-qualified and experienced teacher

For all grades from Grade 4 to 1st year of university

Special classes

- Advanced function
- Calculus & vectors
- Data management


All Classes available in Scarborough & Stouffville



Mr.S.F.Xavier (Teacher)

Contact: 647.340.9490 / 416.732.2228





சந்திரமௌலீஸ்வர சிவாலயம்

தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்

ஆலயம் திறந்திருக்கும் நேரம்

வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில்: காலை 7am - மாலை 9pm

திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm

விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்

Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480

3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough


நம் தேவைகள் குறையக்குறை நிம்மதி கூடும்.


# கல்லீரல்...

19ஆம் பக்கத்தொடர்ச்சி

பரிசோதனைகள் தேவையாகும். 1. எதிர்ப்புசக்தி (immunodeficiency test) 2. ஈரலின் சிறுபகுதி எடுத்துப் பரிசோதித்தல் (Biopsy test). 3. ஒலி மூலமான பரிசோதனை (Ultra sound test) 4. Fibro Scan - இதனால் சிறிய நரம்புக் கட்டிகள் (Fibrosis) அறியப்படலாம்.

இவ்வாறான அழற்சியுள்ளவர்களுக்கு மருந்து மூலமான சிகிச்சையே தேவையாகும். இதற்காகப் பல ஊசி மருந்துகள் உள்ளன. வாய் மூலமான மருந்துகள் பொதுவாக வைரஸ் எதிர்ப்பு மருந்துகளாகும். Entecavir, Tenofovir, Adefovir, Lamivudine, Telbivudine போன்ற குளிசைகள் பாவனையில் உள்ளன. ஆரம்பத்தில் பாதுகாப்புக்காக Hepatitis B Vaccine போட்டால் நலம். பிறந்த குழந்தைகளுக்கும் தடுப்பூசி போடப்படுகிறது.

**கல்லீரல் அழற்சி** C: அழற்சி C என்பது மிகவும் மோசமானதாகும். உலகில் அதிகூடிய மக்கள் இந்நோயால் பாதிக்கப்படுள்ளனர். இவ்வாறான அழற்சி 75 வீதத்தினரை கடுமையாக பாதிக்கிறது. இந்த அழற்சியும் ஆரம்பத்தில் வெளியே தெரிவதில்லை. படிப்படியாகவே தெரிகிறது. இதுவும் இரத்தத் தொடர்பு இரத்தம் மாற்றும் சிகிச்சை (Intravenous blood trans fusion), பச்சை குத்துதல் போன்றவை மூலம் ஏற்படலாம். இவ்வாறான அழற்சியில் ஈரலில் சில கறைகள் ஏற்பட லாம். இதனால் களைப்பு, இரைப்பையில் நீர் சேருதல், வயிற்று நரம்புகளில் இரத்தம் வருதல் ஏற்படலாம். சிலருக்கு இரத்த சோகை




(Anemia), உளச்சோர்வு, காய்ச்சல் உணர்வு, நித்திரையின்மை, மயிர் உதிர்தல், மேற்கடி, வயிற்றுப் பிரட்டல், இருமல், ஆகியவை ஏற்படலாம். குறிப்பாக அதிகமாக மது அருந்துவோருக்கு மோசமான நச்சுத் தன்மையால் ஈரலிப்பு (Cirrhosis) நோய் ஏற்படலாம். அத்துடன் ஈரல் 'Bilirubin' என்ற இரசாயனத்தை வெளியேற்றாமையால் சிறுநீர் கருமையாக வெளியேறுகிறது. மலமும் வெளிறிக் காணப்படும். சிலர் மஞ்சள் காமாலைக்கு உள்ளாவர். சிலருக்குப் புற்றுநோய் ஏற்படலாம்.

**அரியவகை கல்லீரல் அழற்சிகள்:**

**கல்லீரல் அழற்சி** D:
கல்லீரல் அழற்சி D வைரசால் உண்டாகிறது. இது ஏற்கெனவே கல்லீரல் அழற்சி நோய் D-யால் பாதிக்கப்பட்டோருக்கே ஏற்படுகிறது (உங்கள் உடலில் கல்லீரல் அழற்சி D வைரஸ் இருந்தால் மட்டுமே இது நிலைத்திருக்க முடியும்).

**கல்லீரல் அழற்சி** E: கல்லீரல் அழற்சி E வைரசால் ஏற்படும் அரிய வகை நோயான இது கடுமையற்ற குறுகிய காலத் தொற்றாகும். இதுவும் வாய் மற்றும் மலக் கழிவுகளால் பரவுகிறது. ஒருவரிடம் இருந்து இன்னொருவருக்குப் பரவுவது மிகவும் அபூர்வமாகும்.

**தன்தடுப்பாற்றல் கல்லீரல் அழற்சி** (Autoimmune hepatitis):
இது நீடித்து நிலைக்கும் அரிய வகை கல்லீரல் அழற்சி நோய் ஆகும். இரத்த வெள்ளணுக்கள் கல்லீரலைத் தாக்கி நீடித்த அழற்சியையும் சிதைவையும் ஏற்படுத்துகின்றன. இது கல்லீரல் செயலிழப்பு போன்ற கடுமையான பிரச்சினைகளைக்குக் கொண்டு செல்லும். இந்த எதிர்வினைக்கான காரணம் தெரியவில்லை. களைப்பு, வயிற்றுவலி, மூட்டுவலி, மஞ்சள் காமாலை (தோல் மற்றும் விழிவெண்திரை மஞ்சளாதல்), ஈரல்நோய் போன்றவை இதன் நோய்க்குறிகள். நோய்த்தடுப்பு மண்டலத்தைக் கட்டுப் படுத்தி அழற்சியைக் குறைக்க மருந்துகள் அளிப்பதே தன்தடுப்பாற்றல் கல்லீரல் அழற்சிக்கான சிகிச்சை.

பொதுவாக எந்தவித அழற்சியால் பாதிக் கப்பட்டாலும் வைத்தியரிடம் சில விபரங்களை கேட்கலாம்.

எனது வைரஸ் நீங்க சந்தர்ப்பம் உள்ளதா?
எனது அழற்சி வகை என்ன?
எனது சிகிச்சையால் வேறு வகையான பாதிப்புகள் ஏற்படுமா?
நான் சிகிச்சை பெறாதுவிடில் என்ன நிகழும்?
எவ்வாறான சிகிச்சைகள் மேற்கொள்ள நேரிடும்?
என்னால் பக்க விளைவுகளை சகிக்க முடியுமா?
எனக்கு சமூக உதவி கிடைக்குமா?
எனது வைத்திய செலவுக்கு பண உதவி உள்ளதா?
நான் சிகிச்சை பெறும்போது பாதுகாப்பு இடம் உள்ளதா?

தற்போது கல்லீரல் அழற்சி பற்றிப் பல ஆய்வுகள் உள்ளன. நோயுள்ள கல்லீரல் பகுதியை அகற்றுதல் இதில் முக்கியமானதாகும். கல்லீரல் ஒரு பகுதியை அகற்றினாலும் அது வளரக்கூடியது. அத்துடன் கல்லீரல் மாற்றுச் சிகிச்சை தற்போது நடைமுறையில் உள்ளது. மருந்துகளின் மூலம் மாற்றுவதிலும் பல முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன. கனடாவில் ஒவ்வொரு மாகாணத்திலும் இந்த நோயாளிக்கு நிதி உதவி உள்ளது. Canadian Aids Treatment Information Exchange (CATIE) இதற்காக உதவுகிறது. ஒவ்வொரு ஆண்டும் ஜுலை 28ஆம் திகதி Hepatitis குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக, உலகக் 'கல்லீரல் அழற்சி நாள்' நினைவு கூரப்படுகிறது.

# பாடசாலை...

27ஆம் பக்கத்தொடர்ச்சி

மனப்பாங்கை விருத்தி செய்யும், வரையறுக்கப்பட்ட வகுப்பறை நேரத்தைப் பயனுள்ளதாக அமைத்துக் கொள்ளலாம். ஒத்துழைப்புடன் கற்றல் பாட உள்ளடக்கத்தில் மாணவர்களுக்கு ஆர்வத்தை ஏற்படுத்துவதுடன், பாட உள்ளடக்கத்தின் பெறுமானத்தையும் உணர்திறனாக்கும். குழுச் செயற்பாடு இணைந்த சூழலை ஏற்படுத்தும். இது மாணவர்கள் மத்தியில் காணப்படும் வெட்கம் மற்றும் தாழ்வு மனப்பான்மையை நீக்கிக் குழுவிலுள்ள உறுப்பினர்கள் தம் கருத்துக்களை முன்வைக்கத் தயக்கமின்றிய தன்மையை உருவாக்கும்.

குழுவிலுள்ள ஒவ்வொரு உறுப்பினரும் தமது பங்களிப்பைச் செலுத்துவதில் கவனமாக இருக்க வேண்டும். மாணவர்கள் செயற்பட ஆரம்பித்ததும் அவர்கள் தொழிற்படும் விதம், தொழிற்படுவதிலுள்ள ஈடுபாடு மற்றும் முன்னேற்றம் என்பன கண்காணிக்கப்பட்டு அவசியம் ஏற்படின் உதவி செய்யும் வகையில் ஆசிரியர் தயார் நிலையில் இருக்க வேண்டும். இதன்மூலம் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டிய தேவையை ஆசிரியர் தீர்மானிக்க முடியும். இவை யாவும் கற்பித்தலில் மாணவர்கள் மீது முழுமையான தாக்கத்தை ஏற்படுத்த உதவும். இவை கல்வித் தரத்தில் உயர்வீச்சைப் பெற்றுத்தரும்.

மாணவர்கள் ஒத்துழைப்புடன் கற்கும் போது ஆசிரியர் பின்னூட்டலை வழங்குவதும், சிந்தனையை தூண்டுவதும் மாணவர்களை வழிப்படுத்தும். அவர்கள் தமது கற்றலை கண்காணிப்பதற்கும், சிந்திப்பதற்கும் ஏற்ற வகையில் ஆசிரியர்கள் பொருத்தமான கருத்துக்களையோ, வினாக்களையோ வழங்குவதன் மூலம் குழுச்செயற்பாடு பூரணமடைகிறது. கற்றலை மேலும் முறையாக ஒழுங்குபடுத்துவதற்கும் உதவி புரிகிறது. கல்வியில் அதிக நாட்டமின்றி இருக்கும் மாணவர்கள் ஒத்துழைப்புடன்



கற்றல் செயற்பாட்டின் மூலம் தமது வினைத்திறனான செயல் நிலைகளை வெளிக்கொணர முற்படுவர். "கடவுள் நூலைக் கொடுப்பார், சேலையை மனிதன்தான் செய்ய வேண்டும்" என்று குறிப்பிடும் "எபிரூஸ்" என்பவரின் கூற்றுக்கு அமைய மாணவர்கள் செயற்பட வேண்டும். ஆசிரியர்களை ஏமாற்றக் கூடாது. அவர்கள் உங்கள் மீது நம்பிக்கை வைத்தே செயற்படுகின்றனர். இதனை மாணவர்கள் மனதில் பாடமாகக் கொள்ள வேண்டும். ஆனால் இந்நிலை இங்கு நலிவடைந்து காணப்படுகின்றது.

ஒவ்வொரு மாணவரும் உணர்ந்து கற்றலில் ஈடுபடுவது குறைவு. "அசண்டையீனமாய் கைவிட்ட வாய்ப்பு திரும்பி வரமாட்டாது" என்ற அராபியப் பழமொழிக்கு ஆளாகாத வண்ணம் எம்மை முழுமையாகக் கற்றலில் ஈடுபடுத்தி, ஈடுபாட்டுடன் கற்கவேண்டும். இதற்கு ஒத்துழைப்புடன் கற்றல் துணை புரியும். அதிக விளைதிறனைத் தரும். பாடத் திட்டங்களுக்கு உட்பட்ட விடயங்களை மட்டும் விரிவாகக் கற்று, தெளிவாக விளங்கிக்கொண்டு கற்றல் செயற்பாடுகளை மேற்கொள்ள இந்த முறைமை சிறந்த வழிநடத்தல் கருவியாக விளங்கும். கற்றலுக்கான தடைக் கற்களை உடைத்து, கற்றல் இலக்குகளை எளிதில் அடைந்திடவும், ஒருவருக்கு ஒருவர் உதவியாக இருந்திடவும், வேலைப்பகிர்வைக் கைக்கொள்ளவும் குழுவிலுள்ள ஒவ்வொரு உறுப்பினரும் அர்ப்பணிப்புடன் இயங்க வேண்டும். அவ்வாறு இயங்குவதன் மூலம் குழுச்செயற்பாட்டின் முழு நன்மைகளையும் பெற்றுக்கொள்ள முடியும். தகவல் சேமிப்பு, அறிதல் சார் மனப்பாங்கு, வெளிப்படையான உரையாடல்கள், பிரச்சனைகளை விடுவிக்கும் உத்திகள், மேம்பட்ட அடைவுசார் விளைவுகளை வெளிப்படுத்தும் சாத்தியப்பாடுகள் ஏற்படும். பிள்ளைகளின் வாழ்வுக்கு, வாழ்வின் வெற்றிக்கும்கூட இக் கற்றல் முறை வழிசமைக்கும். 13 வருடங்களைப் பாடசாலையில் கழித்த பின்னர் வெறுமையாக ஒரு மாணவன் வெளியேறும் நிலையைப் பாடசாலைகள் ஏற்படுத்தி விடக்கூடாது.

மாணவர்களை சிறு குழுக்களாக இயங்கச் செய்வதன்மூலம் மாணவர் அடைவு மட்டத்தை அதிகரிக்க முடியுமென ஆராச்சி முடிவுகள் எடுத்துரைக்கின்றன. சிறந்த கற்றல் மற்றும் கற்பித்தல் செயன்முறைகளின் ஒத்துழைப்புடன் கூடிய கல்வி அறிவூட்டல் செயற்பாடு மாணவர் களது கற்றலில் மாற்றத்தை ஏற்படுத்தும் என்பதில் மாற்றுக்கருத்தில்லை. எனவே பாடசாலைகளில் ஒத்துழைப்புடன் கற்றல் செயற்பாடு வலுப்படுத்தப்பட வேண்டும்.








Math tutorial 402

Ans to tutorial 401

1)Since A &Z are included ,we must select 4 more letters from t5he remaining 26-2=24.Hence there will be $\binom{24}{4}$=10626 subsets of 6 letters so that A&Z are included

2)The two digits odd can be selected in$\binom{5}{2}$ =10ways and for each of these two even digits can be selected in $\binom{4}{2}$ =6 ways ,giving 60 subsets, the digits in each subset can be arranged to form 4! Sequences .Hence there are 60x4=1440 sequences of length 4.

3)The common point is A(2,0,-

3)The normal to the plane is the croo product of (1,2,3) and (-3,4 ,2) which = (-8 ,-11,10)

The scaler eqn is(x-2,y,z+3).(-8,-11,10 )

-8x -11y+10z +46 =0

4)let the number of bacteria at the start be N

$2N_0=N_0(1.15)^t$

$2=1.5^t$ ,t=5

B) IN 10 HOURS

$1.3 \times 10^3 = N_0 (1.5)^{10}$

$N_0$ =321

Tutorial 402

Questions

1)In the early 1990s ,the Canadian dollar was declining in value due to inflation at the rate of 8.3% per year If the situation continued , what would be the dollar worth five years later

2)Simplify

a)$(x^{3/2} - x^{1/2} - x^{-1})/x^{-1/2}$

3)A line passes through the point (5,-2) with direction vector (2,6)

State the parametric equation of this line

ByMr S.F.Xavier (Teacher6473409490/4167322228

# அவளுக்கு ஒரு கடிதம்

**- குரு அரவிந்தன் -**

அன்று காதலர் தினம். காலேஜ் இளசுகள் மனதிலே இருக்கும் அன்பைப் பரிமாறிக் கொள்ளும் நன்நாள். சுரேஷும் இந்த நாளுக்காகத்தான் காத்திருந்தான். எப்படியாவது அவளிடம் அந்த வேலன்டைன் கார்ட்டைக் கொடுத்து விடவேண்டும் என்று முடிவெடுத்துக் கொண்டான். அவனது நண்பர்கள் நேற்று அவனிடம் வேடிக்கையாகச் சொன்னது ஞாபகம் வந்தது.

“மச்சி இலவு காத்த கிளி ஆகிவிடாதே! நீ தாமதிக்கும் ஒவ்வொரு நிமிடமும் வேறு யாராவது கொத்திக் கொண்டு போகத் தயாரா இருப்பாங்க;.. நாளைக்குக் காதலர் தினம். சந்தர்ப்பத்தை நழுவவிடாதே! மனதைத் திறந்து அவளிடம் பயப்படாமல் சொல்லிவிடு..”

கல்லூரியில் நடக்கும் எல்லாப் போட்டிகளிலும் அவர்கள் இருவரும் முன்னணியில் நிற்பவர்கள். பல பரிசுகளைக் கல்லூரிக்குப் பெற்றுக் கொடுத்தவர்கள். போட்டிகளில் வெற்றி பெறும்போதெல்லாம் ஒருவருக் கொருவர் பாராட்டிக் கொள்வர். எதையுமே ஸ்போர்ட்டிவாக எடுத்துக் கொள்ளும் அவளது மனப்பக்குவம் அவனுக்குப் பிடித்திருந்தது. அதனாலோ என்னவோ அவனை அறியாமலே அவனுக்கு அவள்மேல் ஒருவித ஈர்ப்பு வந்தது. மனம் திறந்து அவளிடம் சொல்ல விருப்பம்தான், ஆனாலும் நேரே சொல்ல ஏனோ அவனால் முடியவில்லை. மனதில் இருந்ததை வேலன்டைன் கார்ட்டில் வடித்தான்.

“நான் உன்னை விரும்புகின்றேன். நீயும் என்னை விரும்பினால் என்னைப் பார்த்து ஒரே ஒரு புன்னகை பூத்துவிடு. வழிமேல் விழிவைத்துக் காத்திருப்பேன் உனக்காக! -சுரேஷ்.”

காலையில் எப்படியோ சந்தர்ப்பம் கிடைத்தபோது கார்டை அவளிடம் சேர்த்து விட்டு வகுப்பறையில் அவளின் பதிலுக்காகக் காத்திருந்தான். ஒரு அசட்டுத் துணிவில் கார்ட்டைக் கொடுத்தானே தவிர அவளது மனம் என்னாகுமோ என்று தவித்துக் கொண்டே இருந்தது.

அவள் வந்தாள். வானத்தில் ஒளி தரும் நட்சத்திரம் பூமியில் உலாவருமோ? ஆமாம் அவள் பெயர் அருந்ததி. தனது மேசை அருகே போய் நோட்டு புத்தகங்களை வைத்துவிட்டு அவனை நிமிர்ந்து பார்த்தாள். அவன் ஆவலோடு அவள் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தான். அவனது முகத்தில் காதலின் ஏக்கம் தெரிந்தது. இதற்கு மேலும் அவனைத் தவிக்க வைக்க அவளால் முடியாமல் போகவே அவனைப் பார்த்து மெல்ல ஒரு மோகனப் புன்னகை பூத்தாள்.

அப்படியே உறைந்து போனான். அவனால் நம்பமுடியவில்லை. நிஜமா? இது நிஜமா? அம்மி மிதிக்காமல் அருந்ததி பார்க்கிறேனா? கற்பனை உலகில் மிதந்தவன் தற்செயலாகத் திரும்பி அவளைப் பார்த்தான். அவள் அவனையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தாள். கண்ணுக்குள் ஒரு மின்னல் வெட்டி மறைந்தது போல இருந்தது.

அன்று இரவு முழுவதும் அவனுக்குத் தூக்கமே வரவில்லை. கண்ணுக்குள் அவள் முகம் தான் மலர்ந்தது. அவளின் அந்தப் புன்னகை படமாய் மனதில் பதிந்தது.

அவளிடம் அப்படி என்ன கவர்ச்சி? அலட்சியமாய் நீண்டு முன்னால் தொங்கும் ஒற்றைப் பின்னலா? எடுப்பான அந்த நீண்ட நாசியா? இல்லை மருண்டு பார்க்கும் அந்த மான் விழிகளா? துள்ளும் நடையா? அவனுக்கு எதுவென்று புரியவில்லை!

மறு நாள் கல்லூரிக்குப் போகுமுன் அதிக நேரம் கண்ணாடிக்கு முன்னால் செலவிட்டான். தலை லேசாகக் கலைந்திருந்தது. வாரி விட்டுக் கொண்டான். ஜீன்சும் அதற்குப் பொருத்தமாக ஷேர்ட்டும் அணிந்து கொண்டான். நன்றாக உடை அணிந்திருக்கிறோம் என்ற நினைப்பே அவனுக்கு ஒருவித கம்பீரத்தைக் கொடுத்தது.

காலையில் நேரத்தோடு வந்து கல்லூரி வாசலில் அவளுக்காகக் காத்திருந்தான். தனது ஃபிரண்டோடு கதைத்துக் கொண்டு வந்த அருந்ததி இவன் அங்கே நிற்பதைக்கூடக் கவனிக்காமல் உள்ளே சென்றாள்.

தன்னை ஏறெடுத்தும் பார்க்காமல் அவள் அப்படிப் போனது அவனுக்கு என்னவோ போல இருந்தது. அவளது கவனத்தைத் தன் பக்கம் திருப்பாமல் செய்த அவளது தோழிமேல் கோபம் வந்தது. வகுப்பறைக்குள் நுழையும்போது அவள் முகத்தைத் துணிந்து பார்த்தான். அவள் முகத்தில் இனம்புரியாத ஏதோ கலவரம் தெரிந்தது.




பாடம் நடந்து கொண்டிருக்கும்போது பியூன் வந்து அவனை அதிபர் அழைப்பதாகச் சொன்னான். ஏதோ விபரீதம் நடக்கப்போகிறது என்பதைப் புரிந்து கொண்டான்.

அதிபரின் அறைக்குள் நுழைந்தபோது, அவர் அவனைப் பார்த்த பார்வை நல்லதாக இருக்கவில்லை. அவர் கையிலே அவன் முதல் நாள் அருந்ததியிடம் கொடுத்த வேலன்டைன் கார்டு இருந்தது.

“என்ன இது?” என்றார் கோபமாக.

அவனுக்கு வியர்த்து விறுவிறுத்தது. நெஞ்சுக்குள் டிக் டிக் சத்தம் பெரிதாகக் கேட்டது. சிரிச்சுச் சிரிச்சு இப்படி மாட்டிவிட்டுவிட்டாளே! விருப்பமில்லை என்றால் பேசாமல் என்னிடமே சொல்லி இருக்கலாமே!
அதுவரை மனதிற்குள் ஹீரோவாய் வாழ்ந்து கொண்டிருந்தவன் திடீரென தலைகீழாய் பாதாளத்தில் தள்ளிவிடப் பட்டது போல உணர்ந்தான்.

“என்ன தலைகுனிஞ்சு நிக்கிறாய்? நீ செய்தது தப்புனு தெரியுதில்லே!”

“ஒரு பெண்ணை விரும்புவது தப்பா? மனதிலே இருக்கும் விருப்பத்தை அவளிடம் நாகரிகமான முறையில் சொல்வது தப்பா?”

அவனுக்குள் ஓர் உத்வேகம் எழுந்தது. அவள்மேல் அவன் வைத்திருந்த அதீத காதல் அவனைப் பேசவைத்தது. அவன் எதையும் எதிர் கொள்ளத் துணிந்தான்.

“நான் செய்தது தப்பா சார்?” என்றான் அலட்சியமாக.

“காலேஜிற்கு வருவது படிப்பதற்கு! காதலிப்பதற்கு அல்ல! இந்தக் காலேஜில் படிப்பிலும் சரி விளையாட்டுப் போட்டியிலும் சரி கெட்டிக்காரன் என்ற




பெயர் எடுத்திருக்கின்றாய். அந்த நல்ல பெயரை இப்படியான செய்கையினால் வீணாக்காதே!”

“தெரியும், ஆனால் படிப்பிற்கும் இதற்கும் ஏன் வீணாக முடிச்சுப் போடுறீங்?”

“இந்த வயசுல இதெல்லாம் இருக்கிறது எனக்குப் பிடிக்காது...”

“இந்த வயசில் காதலிக்காமல் வேறு எப்போ காதலிப்பதாம்?”

“நீ அதிகமா பேசறே.. இந்தா பாரு.. அவளுக்கும் உன்னைப் பிடிச்சிருந்தால் நன்றாகப் படித்து நல்ல வேலை ஒண்ணு தேடிக்கொள். அப்புறம் வந்து பெண்ணு கேளு. தர்றேன். இப்போ இல்லே! இதை நான் இந்தக் காலேஜ் பிரின்ஸ்பலா சொல்லலே; அருந்ததியோட அப்பாவாகச் சொல்கிறேன்.”
அதிபரின் அறையைவிட்டு வெளியே வரும் போது அவனுக்கு அருந்ததி மேல் கோபம்தான் வந்தது. அவள் கல்லூரி முடிந்து வீட்டிற்குப் போகும் போது வழிமறித்தான்.

அவனைக் கண்டதும் அவள் தயங்கி நின்றாள். முகத்தில் மருட்சி தெரிந்தது. காட்டிக் கொடுத்துவிட்டோமோ என்கிற குற்ற உணர்வு அவளைத் தலைகுனிய வைத்தது.

“உனக்கு விருப்பம் இல்லை என்றால் கடிதத்தைத் திருப்பி என்னிடம் தந்திருக்கலாம்; அல்லது அதைக் கிழித்துப் போட்டிருக்கலாமே ஏன் என்னை இப்படி மாட்டி விட்டாய்?”

அவள் குனிந்ததலை நிமிராமல் மௌனமாய் நின்றாள். கால்விரலால் நிலத்தில் கோலம் போட்டாள்.

“நீ ஒன்றும் சின்னப் பெண்ணில்லை. நீ செய்வது சரியா தவறா என்று முடிவெடுக்க உன்னாலே முடியும். இந்த வயதில் ஓர் ஆண் ஒரு பெண்ணை விரும்புவது எனக்கொன்றும் தப்பாகப்படலே. நான் ஒன்றும் உன்னிடத்தில் தவறாக நடக்கவில்லையே? பிறகு ஏன் என்னை காட்டிக் கொடுத்தாய்? ஏன் மௌனமாக நிற்கிறாய்? நீ செய்தது தப்புனு தெரியுதா? உனக்கு என்னைப் பிடிகலை என்று சொல்லி இருந்தால் நான் என் வழியில் போயிருப்பேனே!”

“நான் உங்களைப் பிடிக்கலை என்று சொன்னேனா?” அவள் முகம் நிமிர்ந்த போது விழியோரம் நீர் விளிம்பு கட்டி நின்றது.

அவன் ஒன்றும் புரியாமல் ஒரு கணம் திகைத்து நின்றான்.

“அருந்ததி நீ என்ன சொல்றே?” நம்ப முடியாமல் கேட்டான்.

(தொடர்ச்சி 39ஆம் பக்கம்...)



# முதியோர் பாதுகாப்பு ஓய்வூதியம் Old Age Security (OSA) pension

இது கனடிய அரசின் மிகப்பெரிய ஓய்வூதியத் திட்டமாகும். இதற்குக் கனடா அரசாங்கத்தின் பொது வரி வருவாயில் இருந்து நிதியளிக்கப்படுகிறது. இதனைப் பெறுவதற்கு நீங்கள் நேரடியாகப் பணம் செலுத்தியிருக்கத் தேவையில்லை.

முதியோர் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டம் என்பது கனேடிய சட்டத்திற்கமைய கனடாவில் குடியிருப்பதற்கான தேவைகளைப் பூர்த்தி செய்யும் 65 வயதிற்கும் மற்றும் அதற்கு மேற்பட்ட முதியோருக்கு மாதாந்தம் வழங்கப்படும் நிதியுதவியாகும். இதைப் பெற நீங்கள் விண்ணப்பிக்க வேண்டும்.

இந்த முதியோர் பாதுகாப்பு ஓய்வூதியம் பெறுவோர் ஒவ்வொருவரது தகைமைக்கேற்ப மூன்று வகையான நிதியுதவிகளைப் பெறலாம்.

1. உத்தரவாத வருமானத்திற்கான நிதி உதவி. -*Guaranteed Income Supplement* (**GIS**) நீங்கள் கனடாவில் வாழ்பவராயும் மற்றும் குறைந்த வருமானம் உடையவராக இருந்தால், இந்த மாதாந்த வரிவிதிக்கப் படாத நிதியுதவி உங்கள் முதியோர் பாதுகாப்பு ஓய்வூதியத்துடன் சேர்க்கப்படலாம்.

2. மேலதிக நிதியுதவி - *Allowance*
நீங்கள் 60 முதல் 64 வயதுடையவராக இருந்தால், உங்கள் மனைவி அல்லது கணவன் அல்லது பொதுச்சட்ட வாழ்க்கைத் துணை (spouse or common-law partner) இந்த முதியோர் பாதுகாப்பு திட்டத்தில் ஓய்வூதியத்தைப் பெறுபவராயும் மற்றும் உத்தரவாத வருமானத்திற்கான நிதியுதவி (GIS)க்குத் தகுதியுடையவர் என்றால், இந்த மேலதிக நிதியுதவி பெற நீங்களும் தகுதிபெறலாம்.

3. கணவனை அல்லது மனைவியை அல்லது பொதுச்சட்ட வாழ்க்கைத் துணையை இழந்தவருக்கான நிதிக் கொடுப்பனவு - *Allowance for the Survivor:*


நீங்கள் 60 முதல் 64 வயதுடையவராகவும் மற்றும் நீங்கள் வாழ்க்கைத் துணையை இழந்தவராக இருந்தால், இந்த நிதிக் கொடுப்பனவைப் பெற நீங்கள் தகுதி பெறலாம்.

முதியோர் பாதுகாப்பு ஓய்வூதியத்திற்கு *(OAS)* விண்ணப்பிப்பதற்கான தகைமைகள்:

நீங்கள் கனடாவில் சுயதொழில் அல்லது வேறு ஏதாவது வேலை செய்தீர்களா என்பது இந்த ஓய்வூதியம் பெறும் தகுதியை நிர்ணயிப்பதில் ஒரு காரணியாக இருக்காது. நீங்கள் ஒருபோதும் வேலை செய்யாவிட்டாலும் அல்லது இன்னும் பணி புரிந்தாலும் கூட நீங்கள் முதியோர் பாதுகாப்பு (OAS) ஓய்வூதியதத்தைப் பெறலாம்.

நீங்கள் கனடாவில் வாழ்ப்பவராயின்

1. 65 வயது அல்லது அதற்கு மேற்பட்டவராக இருக்க வேண்டும்.
2. உங்கள் OAS ஓய்வூதிய விண்ணப்பத்தை அங்கீகரிக்கும் நேரத்தில் கனேடியக் குடிமகனாகவோ அல்லது சட்டப்பூர்வ குடியிருப்பாளராகவோ இருக்க வேண்டும்.




3. கனடாவில் 18 வயதிலிருந்து குறைந்தது 10 ஆண்டுகள் வாழ்ந்திருக்க வேண்டும்.

நீங்கள் கனடாவுக்கு வெளியே வாழ்கிறீர்கள் என்றால்,

1. 65 வயது அல்லது அதற்கு மேற்பட்டவராக இருக்க வேண்டும்

2. நீங்கள் கனடாவை விட்டு வெளியேறுவதற்கு முன்னர் கனேடியக்குடிமகனாகவோ அல்லது கனடாவில் சட்டப்பூர்வமாக வாழ்பவராகவோ இருந்திருக்க வேண்டும்.

3. கனடாவில் 18 வயதிற்குப் பின்னர் குறைந்தது 20 ஆண்டுகள் வாழ்ந்திருக்க வேண்டும்.

மேலே கூறப்பட்ட தகைமைகள் எதுவும் உங்களுக்குப் பொருந்தாது என்றாலும் நீங்கள் இன்னும் OAS ஓய்வூதியம் பெறலாம், இதற்கு நீங்கள் வேறொரு நாட்டிலிருந்துகொண்டோ அல்லது இரு நாடுகளிலிருந்தும் ஓய்வூதியம் பெறத் தகுதி பெறலாம்.

இதற்கு கனடாவுடன் சமூக பாதுகாப்பு ஒப்பந்தத்தை ஏற்படுத்திய நாடுகளில் ஒன்றில் நீங்கள் வாழ்ந்திருக்க வேண்டும்.

**உங்கள் முதியோர் பாதுகாப்பு ஓய்வூதியத்தைப் பெறுவதைத் தாமதித்தல்.**

ஜுலை 2013இற்குப் பின்னர் கொண்டு வரப்பட்ட புதிய திட்டத்தின்படி, நீங்கள் ஓய்வூதியத்திற்குத் தகுதிபெற்ற திகதியில் இருந்து 60 மாதங்கள் (ஐந்து ஆண்டுகள்) வரை உங்கள் ஓய்வூதியம் பெறுவதை நீங்கள் ஒத்திவைக்கலாம். உங்கள் ஓய்வூதியத்தைப் பெறுவதை தாமதப்படுத்தினால், நீங்கள் அதைப்பெற தாமதிக்கும்

(தொடர்ச்சி 39ஆம் பக்கம்...)

# EDUCATION

## Review Questions 20- 03

### ➢ PHYSICS 12

**A bullet mass 0.010 kg is fired with a velocity of 330m/s into a pendulum bob of mass 0.990 kg, initially at rest. How high does the bob swing above its initial position?**

### ➢ BIOLOGY 12

**(i) Explain when and how mRNA is modified in the nucleus and the purpose.**

**(ii) Describe the use of reverse transcriptase in Biotechnology.**

### ➢ CALCULUS & VECTORS 12

**Find the limits:**

(i) $\lim_{x\to 0} \frac{ax^2+bx+c}{cx^2+bx+a}$

(ii) $\lim_{h\to -4} \left(\frac{\frac{1}{4}+\frac{1}{h}}{4+h}\right)$


(iii) $\lim_{x\to 1} \frac{x^6-1}{x^{10}-1}$

(iv) $\lim_{x\to -3} \left(\frac{3x^3-4x+3x^2-12}{x^2-9}\right)$

### ➢ CHEMISTRY 12

(i) Name the following


(a)




(b)




**(ii) Give reaction conditions for the reactions below**





(iii)
(a) What are the major products in each of the following if $CH_3CHBrCH_3$ reacts with


(b) EtOH (b) EtONa/ EtOH

**Give IUPAC name of the major product/s**

(i)




(ii)




## Answer Key : 20-2

### ➢ PHYSICS 12

x and y components of impulses, Jx , Jy

$J_x = P_{f(x)} - P_{i(x)} = m(v_{f(x)} - v_{i(x)})$

$= 0.16\ [(60\cos 25) - (40)] =$ 15.1 kg.m/s

$J_y = P_{f(y)} - P_{i(y)} = m(v_{f(y)} - v_{i(y)})$

$= 0.16\ [(60\sin 25) - 0] =$ 4.057 kg.m/s

Magnitude of impulse $I = \sqrt{I_{(x)}^2 + I_{(y)}^2} =$ 15.63kg/m/s

$F = \frac{I}{\Delta t} = \frac{15.63}{0.0012} = 1.3\times 10^4$ N

Answer key
20-23 next issue
☎ 647 341 3975
Dr. K.A. Srikrishnaraj
KEEN TUTORING CENTRE

# விளையாட்டுத் தகவல்கள் 401

## அக்தரின் உலகசாதனையை முறியடித்த இலங்கையின் குட்டி மலிங்கா!



- எஸ். கனோஷ் -

19 வயதுக்கு உட்பட்டோருக்கான கிரிக்கெற் தொடரின் லீக் போட்டியில், அசுர வேகத்தில் இலங்கையின் மதீஷா பதிரானா போலிங் செய்து அக்தரின் உலக சாத னையை முறியடித்துள்ளார். தென் ஆபிரிக் காவில் 19 வயதுக்கு உட்பட்டோருக்கான 13ஆவது உலகக்கோப்பை கிரிக்கெற் தொடர் ஜனவரி 17 தொடங்கி பெப்ரவரி 09இ 2020வரை நடைபெறுகிறது. இதில் மொத்தமாக 16 அணிகள் பங்கேற்கின்றன. மொத்தமாக 4 பிரிவுகளாக பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு பிரிவிலும் 4 அணிகள் இடம் பெற்றுள்ளன. ஏ பிரிவில் இந்தியா, ஜப்பான்,நியூசிலாந்து, இலங்கை அணிகள் இடம் பெற்றுள்ளன.

இப்போட்டியில் இந்திய அணி இலங்கை அணியை 90 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தியது. இந்திய அணி துடுப்பெடுத் தாடியபோது, இலங்கையின் வேகப்பந்து வீச்சாளர் மதீஷா பதிரானா போட்டியின் 4ஆவது ஓவரை வீசினார். இதை இந்திய வீரர் யாஷவி ஜெயிஸ்வால் எதிர் கொண் டார். அப்போது மதீஷா பதிரானா 175 கி.மீ. வேகத்தில் பந்து வீசினார். இதன்மூலம் சர்வதேச கிரிக்கெற்றில் அதிகவேகத்தில் வீசப்பட்ட பந்தாக இது அமைந்தது.



**அக்தர் வேகம்** - 2003இல் நடந்த உலகக்கோப்பை கிரிக்கெற் தொடரில் இங்கிலாந்து அணிக்கு எதிராக 161.3 கி.மீ. வேகத்தில் வீசியதே சர்வதேச கிரிக் கெற்றில் வீசப்பட்ட பந்தாகும். அக்தரின் இந்த உலக சாதனையை மதீஷா பதிரானா தற்போது தகர்த்துள்ளார். ஆனால் இதைத் தவறான வேகக் கணக்கீடு என பலரும் தெரிவித்தபோதும் 'ICC' இதுவரை இதை மறுக்கவில்லை. இதனால் மதீஷா பதிரானா உலக சாதனையை தனதாக்கிக் கொள்ள முடியும்.

| சர்வதேச கிரிக்கெட்டில் வீசப்பட்ட அதிவேக பந்துகள் | | | |
|---|---|---|---|
| பந்து வீச்சாளர் | வேகம் கி.மீ/ம | ஆண்டு | எதிரணி |
| சோயிப் அக்தர | 161.3 | 2003 | இங்கிலாந்து |
| ஷான் டெயிட் | 161.1 | 2010 | இங்கிலாந்து |
| பிரட் லீ | 161.1 | 2005 | நியூசிலாந்து |

மதீஷா பதிரானாவின் பெயர் இப்படி உல களவில் பிரபலமாவது முதல் முறையல்ல. ஏற்கனவே கடந்த செப்ரெம்பர் 2019இல் நடந்த கல்லூரிகளுக்கு இடையேயான போட்டியில் மதீஷா பதிரானா, 7 ஓட்டங்களுக்கு 6 விக்கெற் சாய்த்து அசத்தினார். மதீஷா பதிரானாவின் பந்து வீச்சில் கிட்டத்தட்ட மலிங்கா போலவே இருக்கும்.

## இந்திய அணிக்கு எதிரான முதல் ஒருநாள் போட்டியில் அவுஸ்ரேலிய அணி 10 விக்கெற் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது

இந்தியா-அவுஸ்ரேலியா அணிகளுக்கு இடையிலான முதல் ஒருநாள் கிரிக்கெற் போட்டி மும்பை வான்கடே மைதானத்தில் நடைபெற்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய இந்தியா 255 ஓட்டங்களில் தோல்வியடைந்தது. பின்னர் 256 ஓட்டங்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்குடன் அவுஸ்ரேலியா களம் இறங்கியது. தொடக்க வீரர்களாக ஆரோன் பிஞ்ச், டேவிட் வார்னர் ஆகியோர் களம் இறங்கினர். இருவரும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். இந்த ஜோடி எளிதாக 100 ஓட்டங்களைத் தாண்டியது. ஒருநாள் கிரிக்கெற்றில் இருவரும் இணைந்து 100 ஓட்டங்களை தாண்டுவது இது 9ஆவது முறையாகும்.

இதன்மூலம் அவுஸ்ரேலிய அணி தொடக்க ஜோடி அதிக முறை 100 ஓட்டங்களை தாண்டியதில் ஆரோன் பிஞ்ச்-வார்னர் ஜோடி 2ஆவது இடத்திற்கு முன்னேறியுள்ளனர். கில்கிறிஸ்ட்-ஹெய்டன் ஜோடி 16 சதங்களுடன் முதல் இடத்தில் உள்ளது. கில்கிறிஸ்ற்-மார்க்வாக் ஜோடி 8 சதங்களுடன் 3ஆவது இடத்திலும், 7 சதங்களுடன் டேவிட் பூன்-மார்ஷ் ஜோடி 4ஆவது இடத்திலும் உள்ளது.

இரு அணிகள் இடையேயான 3 ஒருநாள் போட்டி தொடரில் மும்பையில் நடந்த முதல் ஆட்டத்தில் அவுஸ்ரேலியா 10 விக்கெற் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. ராஜ்கோட்டில் நடந்த 2ஆவது போட்டியில் இந்தியா 36 ஓட்ட வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இந்தியா-அவுஸ்திரேலியா அணிக ளுக்கு இடையிலான 3ஆவது மற்றும் கடைசி ஒருநாள் கிரிக்கெற் போட்டி பெங்க ளூருவில் நடைபெற்றது. நாணயச்சுழற்சி யில் வென்று துடுப்பெடுத்தாடிய அவுஸ் திரேலியா ஸ்மித்தின் சதம் (131) மற்றும் லாபஸ்சேன் (54) அரைசதம் ஆகியவற் றால் 9 விக்கெற் இழப்பிற்கு 286 ஓட்டங்கள் சேர்த்தது.

இந்திய அணி 287 ஓட்டங்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்குடன் களம் இறங் கியது. முகமது ஷமி அதிகபட்சமாக நான்கு விக்கெட்டுகள் வீழ்த்தினார். பீல்டிங் செய்யும்போது தோள்பட்டையில் காயம் ஏற்பட்டதால் தவான் துடுப்பெடுத்தாட வர வில்லை. இதனால் ரோகித் சர்மாவுடன் கேஎல் ராகுல் தொடக்க வீரராக களம்



இறங்கினார். ரோகித் சர்மா அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தினார். இவர் 110 பந்தில் சதம் அடித்தார்.

ரோகித் சர்மா சதம் அடித்தபின் விராட் கோலி அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தினார். அவர் 61 பந்தில் அரைசதம் அடித்தார். அதன்பின் அதிவேகத்தில் ஆட்டத்தைக் கொண்டு செல்ல முயன்றார். அந்த நேரத்தில் ரோகித் சர்மா 128 பந்தில் 119 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஆட்டமிழந்தார். ரோகித் சர்மா - விராட் கோலி ஜோடி 2ஆவது விக்கெற்றுக்கு 137 ஓட்டங்கள் அடித்தது. ரோகித் சர்மா ஆட்டமிழந்ததும் ஷ்ரேயாஸ் அய்யர் களம் இறங்கினார். விராட் கோலி நிதானமாக விளையாட ஷ்ரேயாஸ் அய்யர் அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தினார்.

இதனால் இந்தியா எளிதாக இலக்கை நோக்கிச் சென்றது. அணிக்கு 17 ஓட்டங்கள் தேவை என்றிருக்கும்போது விராட் கோலி 85 ஓட்டங்களில் இருந்தார். சதம் அடிப்பார் என்று நினைத்தபோது 89 ஓட்டத்தில் ஆட்டமிழந்தார். அப்போது இந்தியாவின் வெற்றிக்கு 25 பந்தில் 13 ஓட்டங்கள் தேவையிருந்தது. ஷ்ரேயாஸ் அய்யருடன் மணிஷ் பாண்டே ஜோடி சேர்ந்து விளையாடினார். இறுதியில் இந்திய அணி 47.3 ஓவரில் 289 ஓட்டங்கள் எடுத்து அபார வெற்றி பெற்றது.

## நியூசிலாந்தில் வரலாறு படைத்த இந்திய அணி

நியூசிலாந்திலுள்ள ஹமில்ரன் நகரில் நியூசிலாந்து அணிக்கு எதிரான மூன்றாவது T-20 போட்டியில், சூப்பர் ஓவரில் வெற்றிபெற்ற இந்திய அணி T-20 தொடரை கைப்பற்றி வரலாறு படைத்தது. நியூசிலாந்து சென்றுள்ள இந்திய கிரிக்கெற் அணி முதலில் 5 போட்டிகள் கொண்ட T-20 தொடரில் பங்கேற்கிறது. இதில் Eden Park, Aucklandஇல் ஜனவரி 24 மற்றும் ஜனவரி 26இல் நடைபெற்ற முதல் இரண்டு T-20 போட்டிகளிலும் இந்திய அணி வெற்றி பெற்றது. இதன் மூலம் 5 போட்டிகள் கொண்ட தொடரில் இந்திய அணி 2-0 என முன்னிலை பெற்றது. இரு அணிகள் மோதும் மூன்றாவது T-20 போட்டி ஹமில்ரனில் (Seddon Park, Hamilton) ஜனவரி 29இல் நடைபெற்றது.

ரோஹித் அரைசதம் - இதில் நாணயச் சுழற்சியை (toss) வென்ற நியூசிலாந்து அணித் தலைவர் கேன் வில்லியம்சன் (kane williamson) முதலில் பந்துவீச்சை தேர்வு செய்தார். இதையடுத்து



களமிறங்கிய இந்திய அணிக்கு ரோஹித் ஷர்மா (65) அரை சதம் அடித்து கைகொடுக்க, இந்திய அணி 20 ஓவரில் 5 விக்கெற்றுக்கு 179 ஓட்டங்கள் எடுத்தது.

அதிரடி ஆரம்பம் - எட்டக்கூடிய இலக்கை துரத்திய நியூசிலாந்து அணிக்கு மார்டின் கப்டில் (31), கோலின் முன்ரோ (14) அதிரடி தொடக்கம் அளித்தனர். தொடர்ந்து வந்த மிட்சல் சாண்ட்னர் (9) திறமையாக விளையாடவில்லை. நாலா புறமும் பவுண்டரிகளும் சிக்சர்களுமாக சிதறடித்த வில்லியம்சன் அரைசதம் கடந்தார். இந்நிலையில் கிராண்ட்ஹோம் 5 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க நியூசிலாந்து வெற்றிக்கு 24 பந்தில் 43

(தொடர்ச்சி 42ஆம் பக்கம்...)

www.tamilvanakkam.com
Tamil VANAKKAM
தமிழ் வணக்கம் உலகத் தமிழர்களின் இணைப்புப் பாலம்

# முதியோர்...

37ஆம் பக்கத்தொடர்ச்சி

ஒவ்வொரு மாதத்திற்கும் உங்கள் மாத ஓய்வூதியத் தொகை 0.6 சதவீதம் அதிகரிக்கும், 70 வயதில் அதிகபட்சம் 36 சதவீதம்வரை அதிகரிக்கும்.

உங்கள் ஓய்வூதியத்தைப் பெறுவதை ஒத்தி வைக்க நீங்கள் தேர்வுசெய்தால், நீங்கள் உத்தரவாத வருமானத்திற்கான நிதி உதவிக்கு (GIS) தகுதி பெற மாட்டீர்கள், மேலும் உங்கள் OAS ஓய்வூதியத்தை நீங்கள் தாமதப்படுத்தும் காலத்திற்கான மேலதிக நிதியுதவி *(Allowance)* உங்கள் கணவன்/மனைவி அல்லது பொதுச்சட்ட வாழ்க்கைத் துணை தகுதி பெற மாட்டார்கள்.

முதியோருக்கான பாதுகாப்பு ஓய்வூதியத்தை ஒத்திவைப்பதன் மூலம் யார் பயனடைவர்?

ஒருவர் குறிப்பிட்ட வருடத்திற்கு அனுமதிக்கப்பட்ட அதிகபட்ச வருடாந்த வருமானத்தை விட அதிகமாக சம்பாதித்தால் அவர் ஓய்வூதியத்தின் ஒரு பகுதியை அல்லது முழு ஓய்வூதியத்தையும் திருப்பிச் செலுத்த வேண்டியிருக்கும்.

குறைந்த வருமானம் கிடைக்கும்வரை அவர்கள் ஓய்வூதியம் பெறுவதை தாமதப் படுத்த முடிந்தால், அவர்கள் ஓய்வூதியத்தை பெற விரும்பும் காலத்தில் இத தொகை அதிகமாக கிடைக்கும்.

உங்களது முதியோர் பாதுகாப்பு ஓய்வூதியத்தை ஒத்திவைக்க விரும்பினால், நீங்கள் எப்போது விண்ணப்பிக்க வேண்டும்?
உங்கள் ஓய்வூதியத்தை எப்போது பெறத் தொடங்குவது என்பதை தீர்மானிப்பதில், உங்கள் தனிப்பட்ட நிலைமையை நீங்கள் கருத்தில் கொள்ள வேண்டும், பின்வரும் விடயங்களை கருத்தில் எடுத்துக் கொள்ளுங்கள்:

1. தற்போதைய மற்றும் எதிர்கால வருமான ஆதாரங்கள்-Current and Future sources of income

2. தற்போதைய மற்றும் எதிர்கால வேலை வாய்ப்பு நிலை Current and Future employment

3. உங்களது தேக ஆரோக்கிய நிலைமை - Health

4. ஓய்வுபெறும் காலத்திற்கான திட்டங்கள். Retirement plans.

உங்கள் OAS ஓய்வூதியம் தொடங்குவதற்கு 11 மாதங்களுக்கு முன்பு உங்கள் ஓய்வூதியத்திற்கு விண்ணப்பிக்கலாம்.
உங்கள் ஒத்திவைக்கப்பட்ட முதியோர் பாதுகாப்பு ஓய்வூதியம் மற்றும் உத்தரவாத வருமானக் கொடுப்பனவுகள் உங்கள் விண்ணப்பத்தில் நீங்கள் எழுத்துபூர்வமாகக் குறிப்பிடும் திகதியில் தொடங்கும்.

70 வயதிற்குப் பிறகு உங்கள் OAS ஓய்வூதியத்தை ஒத்திவைப்பதில் எந்த நிதி நன்மையும் இல்லை. உண்மையில், நீங்கள் நன்மைகளை இழக்க நேரிடும். நீங்கள் 70 வயதைக் கடந்திருந்தால், இப்போது விண்ணப்பிக்கவும்.

முதியோர் பாதுகாப்பு ஓய்வூதியத்தை ஒத்தி வைப்பதற்கான எடுத்துக்காட்டுகள்:

ஒரு வருடத்திற்கு ஒத்திவைத்தல்

ஜுலை 2013இல் மைக்கேல் 65 வயதை அடைந்தார். தனது OAS ஓய்வூதியத்தை ஒரு வருடம் தாமதப்படுத்த முடிவு செய்தார், ஒகஸ்ற் 2013 முதல் ஜுலை 2014 வரையிலான 12 மாத கால ஒத்திவைப்பு காலத்திற்கான கணக்கில் அவரது மாதத் தொகை 7.2% (0.6% x 12 மாதங்கள்) அதிகரிக்கும். மைக்கேலின் ஓய்வூதியம் மாதத்திற்கு $549.89இல் இருந்து $589.48ஆக அதிகரித்தது.



ஐந்து ஆண்டுகளுக்கு ஒத்திவைத்தல்

ரீட்டா 2013 டிசம்பரில் 65 வயதை அடைந்தார். அதிகபட்ச ஒத்திவைப்பு காலத்திற்கு 60 மாதங்களுக்கு தனது OAS ஓய்வூதியத்தைப் பெறுவதை தாமதப்படுத்த முடிவு செய்தார், அவரது மாதாந்த தொகை 70 வயதில் (0.6% x 60 மாதங்கள்) 36%ஆல் அதிகரித்தது.
ரீட்டாவின் ஓய்வூதியம் மாதத்திற்கு $549.89 இல் இருந்து $748.85ஆக அதிகரித்தது.

**முதியோர் பாதுகாப்பு ஓய்வூதியத்திற்கு விண்ணப்பிப்பதற்கு முன் உங்களுக்கு தேவையான தகவல்கள்:**

உங்கள் OAS ஓய்வூதியத்திற்கு எப்போது விண்ணப்பிக்க வேண்டும் என்பதை தீர்மானிப்பதில், உங்கள் தனிப்பட்ட நிதி நிலைமை மற்றும் பின்வரும் சூழ்நிலைகள் உங்களுக்கு பொருந்தினால் அவற்றைக் கவனியுங்கள்.

நீங்கள் 64 வயதை எட்டிய ஒரு மாதத்திற்குப் பிறகு, 'சேவை கனடா' (Service Canada)விலிருந்து OAS ஓய்வூதியத்திற்கு நீங்கள் தகுதி பெறலாம் என்று உங்களுக்குத் தெரிவிக்கும் கடிதம் ஒன்றும் விண்ணப்பப்படிவமும் உங்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.
அந்தக் கடிதத்தில் உள்ள விபரங்களை வாசித்தபின் விண்ணப்பப் படிவத்தை பூர்த்தி செய்து அதன் கடைசிப் பக்கத்தில் கொடுக்கப்பட்ட முகவரிக்கு அஞ்சல் செய்வதன் மூலம் உங்கள் OAS ஓய்வூதியத்திற்கு விண்ணப்பிக்கலாம்.

அல்லது பூர்த்தி செய்யப்பட விண்ணப்பப் படிவத்தையும் அதில் கேட்கப்பட்டிருந்த அனைத்து ஆவணங்களின் அசல் பிரதிகளையும் உங்கள் வீட்டிற்கு அருகாமையில் உள்ள Service Canada அலுவலகத்தில் நேரடியாகக் கையளிக்க முடியும். இப்படிச் செய்வதால் அங்கு உள்ள அலுவலர்கள் உங்களது விண்ணப்பத்தை உடனடியாக சரிபார்த்து விண்ணப்பம் நிரப்பியதில் ஏதாவது தவறு இருந்தால் உடனடியாக அவற்றை சரிசெய்ச் சொல்வர். அதன்பின் விண்ணப்பத்தில் கேட்கப்பட்ட ஆவணங் களின் அசல் பிரதிகளை சரிபார்த்து தேவையானவற்றை தாங்களே பிரதி (Photo copy) எடுத்து உறுதிப் படுத்துவர்.

தேவையான ஏதாவது ஆவணங்களை நீங்கள் சமர்ப்பிக்காவிட்டால் அவற்றை குறிப்பிட்டு சமர்ப்பிக்குமாறு சொல்லுவர். மறு நாளே அதே அலுவலகத்திற்குத் தவற விட்ட ஆவணங்களை எடுத்துச் சென்றால் அனைத்து ஆவணங்களும் மீண்டும் சரி பார்க்கப்பட்டு சம்மந்தப்பட்ட அலுவலரால் உறுதி செய்யப்பட்டு உங்களது விண்ணப்பம் Service Canada வினால் உடனடியாக ஏற்றுக் கொள்ளப்படும்.
இதே விண்ணப்பத்தை நீங்கள் அஞ்சல் மூலம் அனுப்பியிருந்தால் Service Canada வுக்கு அஞ்சல் மூலம் கிடைக்கும் ஆயிரக் கணக்கான விண்ணப்பங்களில் உங்களது விண்ணப்பமும் ஒன்றாகும். அனைத்து விண்ணப்பங்களும் தமக்கு கிடைக்கப்பெற்ற ஒழுங்கில் பரிசீலிக்கப்படும். சரியாகப் பூர்த்தி செய்யப்படாத அல்லது ஏற்ற ஆவணங்கள் இணைக்கப்படாத விண்ணப் பங்களுக்குரிய விபரங்களைச் சமர்ப்பிக்குமாறு உங்களுக்கு ஒரு கடிதம் அனுப்பப்படும். இதற்கு மூன்று வாரங்கள் முதல் ஒரு மாதம் வரை காலதாமதம் ஆகலாம். சரியான ஆவணங்களை கண்டுபிடித்து அல்லது விண்ணப்பப் படிவத்தை சரியாக பூர்த்தி செய்து மீண்டும் உங்கள் விண்ணப்பத்தை அஞ்சல் செய்தால் அவை மீண்டும் பரிசீலிக்கப்பட்டு ஏற்றுக் கொள்ளப்படும். உங்களது விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்பட்டதை உறுதிப்படுத்துவதற்கான கடிதம் ஒன்று உங்களுக்கு Service Canadaவினால் அனுப்பி வைக்கப்படும்.

# அவளுக்கு...

36ஆம் பக்கத்தொடர்ச்சி

“உங்க கோபம் எனக்குப் புரியுது. என்னை ஒருவர் விரும்புகிறார் என்று அம்மாவிடம் மட்டுமே சொன்னேன். ஆனால் பொறுமையே இல்லாத அம்மா அப்பாவிடம் அதைச் சொல்லிவிட்டாள். ஐ யாம் ஸோ ஸாரி; எதிர்பாராமல் நடந்துடுச்சு. அப்பா உங்களைத் திட்டினாரா?”

“ஆமாம்” என்று அவன் தலையாட்டினான் பரிதாபமாக.

“என்ன சொன்னார்?” ஏக்கத்தோடு கேட்டாள்.

“நல்லா படிச்சுட்டு வந்து என் பெண்ணைக் கேளு, அப்போ பெண்ணைத் தர்றேன் என்றார்”.

“அவர் அப்படிக் கேட்டது தப்பா?”

“பின்னே; இவர் என்ன பெண்ணுக்கு சுயம்வரமா வைக்கிறார்?”

“ஏன்; நம்ம நன்மைக்குத்தானே அவர் அப்படிச் சொன்னார்!”

“நம்ம...” என்ற அந்த உரிமை அவன் மனதைத் தொட்டது. அவளது அன்பு அவனுக்கு மட்டும்தான் என்று அவள் சொல்லாமல் சொல்வது போல் இருந்தது.

“எனக்கு நீதான் வேண்டும்; அருந்ததி; நான் உனக்காக எதையும் தாங்குவேன்.”

அவள் இமைகளை உயர்த்தி “முடியுமா?” என்பது போல அவனைப் பார்த்தாள். அந்த விரிந்த கண்களுக்குள் அவன் தன்னையே பார்த்தான்.

தனது வருங்கால மனைவி எப்படி இருக்க வேண்டும் என்று கற்பனையில் நினைத்தானோ அந்த உருவம் நிஜமாகக் கண் முன்னால் நின்றபோது அவன் தன்னை மறந்தான்.

“நிச்சயமாக நான் நன்றாகப் படித்து ஓர் இஞ்ஜினியராக வருவேன். எனக்காகக் காத்திருப்பாயா?’

“நிச்சயமாகக் காத்திருப்பேன்; உங்களுக்காக!” நீட்டிய அவனது கையில் தனது வலது கையைப் பதித்து “ப்ராமிஸ்” என்றாள்.

“அவ்வளவுதானா?” என்றான் மென்மையான அந்தக் கையை ஆசையாகப் பற்றியபடி.



“வேறு என்ன வேண்டுமாம்?” என்றாள் அவள் செல்லமாக.

“நம்முடைய இந்தக் கணத்தின் ஞாபகமாக, நீ விருப்பப்பட்டு எது கொடுத்தாலும் சரி...”

“ஐ லவ்யூன்னு சொல்லணுமா?” ஏக்கத்தோடு காதுக்குள் மெள்ளக் கேட்டாள்.

“ம்ஹூம்; நினைச்சுக்கிட்டே இருக்கிற மாதிரி ஏதாவது!”

அவள் முகம் நாணத்தால் சிவக்க அக்கம்பக்கம் பார்த்துவிட்டு சட்டென்று அவனது புறங்கையைப் பற்றி அதில் ஒரு முத்தம் கொடுத்தாள்!

(நன்றி:ஆனந்தவிகடன்)

**அன்பை**
**உண்மையாக**
**நீ**
**எதிர்பார்த்து நின்றால்**
**உனக்காக அன்பும்**
**காத்துக்**
**கொண்டிருக்கும்**

# குன்றும் மன்றும்

குன்றுகள் தோறும் குடியிருப்பவன் குமரன். ஆறுபடை வீட்டின் அதிபதி அவன். அடியவரின் உள்ளக் குகையிலும் குடியிருப்பன். திருபரங்குன்றம், திருச்செந்தூர், பழனி, சுவாமிமலை, பழமுதிர்சோலை, திருத்தணி அவனது படை வீடுகள். படைவீடு வீரர்கள் தங்கியிருக்கும் பாசறையாகும். குன்றம் ஏறி குமரன் அடியார் மன மன்றிலும் எழுந்தருளி என்றும் நன்றே செய்வான். கலியுக வரதன் கண் கண்ட தெய்வம் அவன். முதலாவது படைவீட்டின் மூல மூர்த்தியை முறையாகத் தொழுவோம்.

திருபரங்குன்றுரை தீரனே குகனே
மருப்பிலாப் பொருளே வள்ளி மணாளா
குருக்குத் துறையுறை குமரனே அரனே
இருக்கும் குருபரா ஏரகப் பொருளே
வையாபுரியில் மகிழ்ந்து வாழ்பவனே
ஒய்யார மயில் மீது உகந்தாய் நமோ நமோ
ஐயா குமரா அருளே நமோ நமோ
மெய்யாய் விளங்கும் வேலா நமோ நமோ
பழனியங் கிரிவாழ் பகவா நமோ நமோ

இரண்டாவது படைவீட்டின் (திருச்சிரலைவாய்) தேவனை சிந்ததை செய்வோம்.

நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பளவச் செய்வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகு குண்டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூசணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்தின மாலையும்
முப்பரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயி றுந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்தினம் பதித்த நற்சீ ராவும்
இறுதொடை யழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
திங்கள்ரவு நதி சூடிய பரமர்
தந்த குமர அலையே கரை பொருத
செந்தி நகரினிதே மருவிவளர் பெருமானே!

மூன்றாவது படைவீட்டின் பழனியம்பதி முதல்வனை முந்தித் தொழுவோம்.

குருபரா குமரா குழந்தை வேலவா
சரவணா சண்முகா சதாசிவன் பாலா
இரவலர் தயாபரா ஏழை பங்களா
பரமேஸ்வரிக்கு பாலா தயாபார
வீரவாகு மிகுதன கர்த்னாய்
சூர சங்கார துவண்ட நிஷ்டூரா
கயிலாய மேவும் கனக சிம்மாசனா
மயிலேறும் சேவகா வள்ளி மனோகரா
அகத்திய முனிவர்க்கு அருந்தமிழ் உரைத்தவா
நான்காவது படை வீட்டின் நாயகனே சுவாமி மலை நயந்து தொழுவோம்.



ஓம் என்னும் பிரணவம் உரைத்திட சிவனார்
காமுற உதித்த கனமறைப் பொருளே
ஓங்காரமாக உதயத்தே எழுந்தே
ஆங்காரமான அரக்கர் குலத்தை
வேறாக்கக் களைந்த வேலவா போற்றி
தேராச் சூரனை துண்ட துண்டங்களாய்
வேலாயுதத்தால் வீசி அறுத்த
பாலா போற்றி பழனியின் குருவே
நான்கு மறைகள் நாடிய தேடும்
மான் மருகோனே வள்ளி மணாளா

ஐந்தாவது படை வீட்டின் (பழமுதிர்சோலை) ஐயனை ஆர்வமுடன் தொழுவோம்

ஆறிரு புயமும் ஆறிரு காதும்
வடிவம் சிறந்த மகா குண்டலமும்
தடித்த பிறைபோல சார்ந்த சிந்தூரமும்
திருவெண்ணீறணி திருநுதல் அழகும்
கருணை பொழியும் கண் அழகும்
குனித்த புருவமும் கூரிய மூக்கும்
கனிந்த மதுரித்த கனிவாய் இதழும்
வெண்ணிலாப் பிறை போல் விளங்கிய நகையும்
எண்ணில்லா அழகாய் இலங்கு பல் வரிசையும்
காரிகை உமையாள் கனிந்த குருபரன்

ஆறாவது படைவீட்டின் (திருத்தணி) ஆதிமுதலை ஆரத் தழுவோம்.

சங்கரன் மகனே சரவணன் பவனே
ஐங்கரன் துணைவனே அமரர் தம் கோனே
செங்கண்மால் மருகனே தெய்வானை கேள்வனே
பங்கயம் போன்ற பன்னிரு கண்ணனே
பழனி மாமலையுறும் பன்னிரு கரத்தனே
அழகு வேல் ஏந்தும் ஐயனே சரணம்
சரவணபவனே சட்கோணத் துள்ளுறை
அரனருள் சுதனே அய்யனே சரணம்
சயிலொளி பவனே சமட்சரத் தோனே
மயில் வாகனனே வள்ளலே சரணம்
கந்தன் கண்ணுதல் கடவுளின்
காதல் மைந்தன் மன்றில் நடம் புரியும்
சிவனுக்கு மந்திரத்தை உபதேசம் செய்தவன்.

மன்று என்பது தில்லையம்பலம் ஆடிக் கொண்டே அகிலத்தை அசைவிக்கும் ஆடலரசன், நடராசன், சைவர்களின் முழுமுதற் கடவுள் முருகனுக்கும் உலக முதல்வனுக்கும் உன்னை தொடர்பு பிரிக்க முடியாது.

அப்பனை நந்தியை ஆதார அமுதினை
ஒப்பிலி அப்பனை ஊழி முதல்வனை
எப்பரிசாயினும் ஏத்துமுமின் ஏத்தினால்
அப்பரிசன் அருள் பெறலாமே

விடைஏறும் செல்வன் மாறிலா அடியவர்க்கு
தேறுதல் அளித்து பேறுகள் அருள்வான்
அப்பன் நீ அம்மை நீ ஐயனும் நீ.
அன்புடைய மாமனும் மாமியும் நீ,
ஒப்புடைய மாதரும் ஒண்பொருளும் நீ
ஒருகுலமும் சுற்றமும் ஓருரும் நீ
துய்ப்பனவும் முப்பனவும் தோற்றுவாய் நீ
துணையாய் என் நெஞ்சம் துறப்பிப்பாய் நீ
இப்பொன் நீ இம்மணி நீ இம்முத்தும் நீ
இறைவா நீ ஏறூர்ந்த செல்வன் நீயே



- நா.க சிவராமலிங்கம் -

# நினைவில்...

26ஆம் பக்கத்தொடர்ச்சி

எது. இங்கு பல நீர்த்தாரைகளையும் பலவிதமான அலங்காரத் தாவரங்களையும் பல பூக்கும் தாவரங்களையும் காணலாம். அரைச் சுவர்கள் போன்று தாவரங்கள் வளர்த்து வெட்டப்பட்டுள்ளன. மேலும் நீர்த் தாரைகள் பீறிட்டுப் பல்வேறு வடிவங்களில் மேலெழும்பி விழுவதை மேலும் மெரு கூட்டும் வகையில் வண்ண விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளன. உண்மையில் இரவில் இத்தோட்டத்தில் இருப்பது வேறொரு கனவுலகில் இருப்பது போன்ற பிரமையை ஏற்படுத்தும். ஏராளமான மக்கள் இங்கு இரவில் வந்து உல்லாசமாகப் பொழுதைக் கழிக்கின்றனர். சுற்றாடல் யாவும் மிகவும் சுத்தமாகக் கழிவுப் பொருட்கள் எதுவும் இல்லாமல் சுகாதார மாகப் பேணப்படுகிறது. ஆங்காங்கே குப்பைத் தொட்டிகள் அமைக்கப் பட்டிருப் பதுடன் காவலர்களும் பணியில் உள்ளனர். இவர்கள் கூட்டத்தைக் கட்டுப் படுத்துவ துடன் குப்பை கூளங்களை தொட்டிகளில் போடுவதைக் கண்காணிக்கின்றனர்.

இத்துடன் செடிகளை அழகாகப் பல்வேறு விலங்குகள், பறவைகள் போன்று வெட்டி வைத்திருக்கின்றனர். அத்துடன் பூக்கொடி களைக் கம்பிவலைகள் மேலே படரவிட்டு வழி நெடுகலும் நடைபாதைகளில் அமைத் திருக்கின்றனர். பல்வேறு இளைப்பாறும்



கூடங்களும் ஆங்காங்கே உள்ளன. தோட்டத்தின் மத்தியில் ஒரு தடாகத்தின் நடுவில் இசைக்கேற்ப நடனமாடும் நீரூற்று ஒன்றை பிரமிக்கும் வண்ணம் அமைத்திருக் கின்றனர். இது பார்வையாளர் யாவரையும் ஆனந்தத்தில் மிதக்க வைக்கிறது என்றால் மிகையில்லை. அத்துடன் பல்வேறு வண்ண விளக்குகளும் இசைக்கேற்ப மாறி மாறி வருகின்றன. பல மணி நேரத்தின் பின் ஹோட்டலுக்குச் சென்றோம். தொடரும்

# குளிர்

தாய் மண்ணில் விழுந்தெழும்பி
துன்பங்களில் தோய்ந்து
தவித்து ஏங்கி நின்றபோது
கை தந்து வரவேற்ற நற்பூமி

தேடு
நீ வேலை தேடு என்று
சமூகநலப் பணம் தந்து
படிக்கச்சொன்னது தன் மொழியை

காலுக்குக் குளிர் காக்கும் சப்பாத்து
உடல் மூடும் மேல் அங்கி
கழுத்தைச் சுற்றத் துவாய் வாங்கவெனக்
குளிர்கால மானியக் காசோலையும்
வந்து விழுந்தது தபாற்பெட்டிக்குள்

அடுத்த பனிக்காலம் நெருங்கும்போது



குடும்ப மருத்துவர் கூறிய அறிவுரை:

பத்து இறாத்தல் நிறை கூடிவிட்டது
வயிற்றில் கொழுப்புப் படியும் கவனம்
நாளாந்தம் நல்ல நடை போடு
இல்லையேல்
உன் உடல் எடை போடும்
எச்சரிக்கை!

முத்துராஜா

எம்மை நாம் பாதுகாப்பது எப்படி?
வைத்திய கலாநிதி
கே.ரி. கோபால்
D.A.M.S R.A.M.P (Sri Lanka)
C.D.S - C.N.H.P (Canada)
Tel.: 647.456.9796



# பொங்கல் விழாவும் 35ஆவது ஆண்டு விழாவும்



அருந்ததி. ஞா

கிங்ஸ்ரன் நகரில் உள்ள குயின்ஸ் பல்கலைக்கழகத்தின் 'குயின்ஸ் தமிழ் மாணவர் சங்கம்' (QTSA) பொங்கல் விழாவையும் தமது சங்கத்தின் 35ஆவது ஆண்டு விழாவையும் 2020 ஜனவரி 18இல் பல்கலைக்கழக 'Wallace' மண்டபத்தில் வெகு விமரிசையாக கொண்டாடினர்.

மக்களும், ஏனைய கலாசார பல்கலைக் கழக மாணவர்களும் சமூகமளித்து இருந்தனர்.

இவ்விழாவிற்கு சிறப்பு விருந்தினராகக் குயின்ஸ் பல்கலைக்கழகத்தில் படித்துப் பட்டதாரியாக 2003ஆம் ஆண்டில் வெளியேறிய பிரதா குகனேந்திரன் அவர்கள் ரொறொன்ரோ பெரும்பாகத்தில் இருந்து குடும்ப சகிதம் வந்திருந்தார். அவர் 2001 ஆம் ஆண்டில் QTSAஇன் தலைவராக இருந்தவர்.

நிறுவனங்களும் பின்வருமாறு, Homelife/ GTA Reality Inc. and Brokerage, Toronto; Sahi Frames Ltd., Toronto; ESSO and Codes Corner Convenience, Kingston; Royal Lepage, Krishan Nathan Team, Kingston; Datta Food Manufactory, Toronto.

அதன்பின்னர் தாஷா, றிஷல் சகோதரிகளின் நாட்டிய நிகழ்வு நடந்தது. சிறப்பு விருந்தினரான பிரதா குகனேந்திரன் உரையாற்றுகையில்; தான் குயின்ஸ் இல் கல்வி கற்ற காலத்தில் QTSA தமிழ் மாணவர்களின் ஒன்றுகூடலுக்கும் கலந்துரையாடல்களுக்கும் உதவும் ஓர் அமைப்பாக இருந்தது. இவ்வாறு ஒரு விழாவை நடத்த QTSA மாணவர்கள் எவ்வளவு சிரமப்பட்டிருப்பர் எனத் தன்னால் ஊகிக்க கூடியதாக உள்ளது என்றார். அத்துடன் தான் தனது வாழ்க்கைத் துணையையும் QTSAஇல்தான் சந்தித்துத் தெரிவு செய்ததாகக் கூறி, தற்போதைய QTSA மாணவர்களின் கை தட்டல்களையும், விசில் அடிப்பையும் வரவேற்பாகப் பெற்றுக்கொண்டார்.

இறுதிக் கலை நிகழ்வாக ராகவி, மிதுன், சிபிலன், சில்வியா, கனிஷா, ஜெவ்றி, அபிஷேக், ஜோசுவா, தாரிணி மற்றும் சுதர்சன் ஆகியோர் கொண்ட நடனக்குழு

(தொடர்ச்சி 42ஆம் பக்கம்...)



குயின்ஸ் பல்கலைக்கழகத்தில் 'குயின்ஸ் தமிழ் மாணவர் சங்கம்' 1985ஆம் ஆண்டில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. QTSA வருடம் தோறும் தீபாவளி நிகழ்வை குயின்ஸ் 'இந்திய மாணவர் சங்கம்' (QISA) மற்றும் 'குயின்ஸ் தெற்காசியர் மாணவர் சங்கம்' (QSAA) ஆகியவற்றுடன் சேர்ந்து குயின்ஸ் பல்கலைக்கழகத்திலேயே பல்கலைக்கழகம் சம்பந்தப்படாமல் நடைபெறும் மிகப் பெரிய கலைவிழாவாகக் கொண்டாடி வருகிறது. QTSA தனித்து நடத்தும் பொங்கல் விழா வருடம் தோறும் கொண்டாடப்படுவதில்லை. இம்முறை 35 ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு QTSAஇன் தற்போதைய நிர்வாக சபை பொங்கல் விழாவையும் கொண்டாடியது.

நிறைகுடம், குத்து விளக்குகள் வைக்கப்பட்ட மண்டப வாயிலில் QTSA நிர்வாக உறுப்பினர் தேவானி விழாவிற்கு வருகை தந்தோரை வரவேற்றுக்கொண்டிருந்தார். மாலை 5 மணிக்கு மண்டப வாசல் திறக்கப்படும் என விழாவிற்குரிய அனுமதிச் சீட்டில் எழுதப்பட்டவாறு வாயில் திறக்கப்பட்டு மாணவர்கள் 5 மணியில் இருந்தே மண்டபத்தில் கூடத் தொடங்கினர். இவ்வாறான ஒரு விழா நடத்தக் குறிப்பிடத்தக்க அளவு பணம் தேவை என்பதால் QTSA நிர்வாக உறுப்பினர்கள் கடந்த ஆறு மாதமாக பொதுமக்கள் மற்றும் நிறுவனங்களிடம் பணம் சேகரித்ததும் அல்லாமல் விழாவிற்கு அனுமதிச் சீட்டையும் விற்பனை செய்தனர். இதனால் கிங்ஸ்ரனில் உள்ள தமிழ் மற்றும் பல் கலாசார மக்களுக்கும் அழைப்பு விடுத்திருந்தனர். இவ்விழாவிற்கு கிங்ஸ்ரன் வாழ் தமிழ் மக்களுடன் ஏனைய கலாசார

2020 ஜனவரி 18இல் காலையில் இருந்தே மிகவும் அதிகமான பனிப்பொழிவு இருந்தது. 100 பேர் எதிர்பார்க்கப்பட்ட இவ்விழாவிற்கு 80 பேர் சமூகமளித்திருந்தனர். ரொறொன்ரோவில் இருந்து பனிப்பொழிவையும் பொருட்படுத்தாது சிறப்பு விருந்தினர் குடும்ப சகிதம் வருகை தந்தது, அவர் QTSAஇன் மீது வைத்திருந்த மதிப்பை எடுத்துக் காட்டுவதாக இருந்தது.

நிகழ்ச்சி நிரலின்படி ஆறு மணிக்கு நிகழ்வுகள் றொஷலின் வரவேற்புரை வழங்கியதுடன் ஆரம்பமானது. விழாவிற்கு வருகைதந்த எல்லோரையும் வரவேற்ற றொஷல் தொடர்ந்து நிகழ்ச்சிக்கு அறிவிப்பாளராகவும் இருந்தார். முதல் நிகழ்வாகக் குயின்ஸ் இல் உள்ள நாட்டியக் குழுக்களில் ஒன்றான பரதநாட்டியம் ஆடும் மாணவிகள் குழுவைச் சேர்ந்த 10 பேரில் கஸ்தூரி, வர்ஷா, மர்லின் மற்றும் சம்ரிதி ஆகிய நால்வரின் பரத நாட்டியம் நடைபெற்றது.

அதனைத் தொடர்ந்து QTSAஇன் இணைத் தலைவர்களான கிருஷ்ணா மற்றும் ஆரணியும் தலைமை உரையையும் நன்றி உரையையும் வழங்கினர். ஆரணி இந்த விழாவிற்காக QTSAஇன் முதல் நிகழ்வில் கலந்து கொண்டோரையும், QTSA இன் இரண்டாவது தலைவருடனும் தான் கலந்துரையாடியதாகக் கூறினார். அத்துடன் இவ்விழாவிற்குப் பெரும் பண உதவி வழங்கிய ஐந்து நிறுவனங்களின் பெயரைக் குறிப்பிட்டு நன்றி தெரிவித்ததுடன் ஏனைய பண உதவி வழங்கியோருக்கும் நன்றி தெரிவித்தார். அந்த ஐந்து

# ஒரு மென்சிறகின் வருடலுக்காக



காதலுக்காக எழுதப்படுவதைக் காட்டிலும்
எதிர்ப்பாளர்களுக்காக
அதிக புழக்கத்திற்கு வந்துவிட்டது காதல்!

அன்பு நதியின் கரையில்
ஆர்ப்பாட்டமின்றி மலரும் காதல்
எதிர்ப்பு நெருப்பில்
பொலிகிறது பொன்னைப்போல்!

எரித்து அழித்துக் கரைத்துக்
கொக்கரிப்பவர் எதிரில்
மீண்டும்
முளைத்துத் தழைத்து முறுவலிக்கிறது காதல்!

உயிர் இயற்கையின் இயக்க விதியைத்
திரும்பத் திரும்ப மெய்ப்பிக்கும் காதல்
பற்றிப் படர்கிறது பிடிவாதக் குழந்தையாக!

சீண்டப் போனால் தூண்டப் படும் காதல்
மீண்டும் மீண்டும் துளிர்த்துக் கொண்டே இருக்கிறது!

யாரிடத்தும் சொல்ல மறுத்தும்
யாரேனும் வந்து கேட்கட்டும் என்றும்
யார்யாருக்கெல்லாம் தெரியுமோ என்றும்
யாரும் என்னவும் சொல்லட்டும் என்றும்
போய்க்கொண்டே இருக்கிறது காதல்!

தடுக்கத் தடுக்கத் தீவிரமாகவும்
ஒடுக்க ஒடுக்கத் தீர்மானமாகவும்
பரவிக்கொண்டே இருக்கிறது காதல்!

தினத்தன்றைக்கு மட்டும் தெருவில் இறங்கி
மிரட்டுவோர்க்கு எதிராகக்
காலமுழுக்க நழுவி
நடைபோட்டுக் கொண்டே இருக்கிறது காதல்!

காதலை காயப்படுத்தும் காலிகள் அறிவார்களாக,
உங்கள்பால் இரக்கம் கொள்ளும் காதல்!
காதலைப் பிடுங்கி எறியும் திருப்பணிக்காரர்கள் தெளிவார்களாக,
உங்களையும் ஆற்றுப்படுத்தும் காதல்!

பண்பாட்டுக் காவலர்கள் ஞானம் பெறுவார்களாக,
உங்கள் கொடியசைப்புக்குக் காத்திருக்கும் ரயில் அல்ல காதல்,
காதல் ஒரு சூறாவளி, ஆழிப்பேரலை, எரிமலை
மட்டுமல்ல -
ஓசை எழுப்பாத மென்சிறகின் வருடல்.!

வெறுப்போரையும் தன்னைச் சுற்றி ஈர்க்கும்
காதலின் ஆசி
குளிர்விக்கட்டும் ஒவ்வாமை வெம்மையை!
இளகச் செய்யட்டும் இறுக்கமாகிப் போன உணர்வுகளை!
வெதுவெதுப்பாக்கட்டும் நனைந்த உள்ளங்களை!

காதல், காதலிக்கட்டும் மானுடத்தை
மனிதர்கள் நேசிக்கட்டும் காதலை!

எஸ். வி. வேணுகோபாலன்

தரமான வீடு நியாயமான விலைக்கு
வாங்க/விற்க அணுகவும் - கைராசியான முகவர்
Staging இலவசம்

Bala Mani. MBA
Sales Representative
647.290.1022
647.532.1255
email: 0605bala@gmail.com



HOMELIFE
HIGHER STANDARDS

HomeLife / GTA Realty Inc.Brokerage*
416.321.6969 5215 Finch Ave. E., #203, Toronto ON. M1S 0C2
*Independently Owned & Operated


## நியூசிலாந்தில்...

38ஆம் பக்கத்தொடர்ச்சி

ஓட்டங்கள் தேவைப்பட்டது. பும்ரா வீசிய போட்டியின் 17ஆவது ஓவரில் வில்லியம்சன் ஹாட்ரிக் (தொடர்ச்சியாக 3) பவுண்டரி அடித்தார்.

சூப்பர் ஓவர் - இதையடுத்து நியூசிலாந்து அணி 20 ஓவரில் 6 விக்கெற்றுக்கு 179 ஓட்டங்கள் எடுக்க, ஓட்ட எண்ணிக்கை சம நிலையில் முடிந்ததால் போட்டியின் முடிவு சூப்பர் ஓவர் மூலம் தீர்மானிக்கப்படு மென திட்டமிடப்பட்டது. இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி 6 பந்தில் 17 ஓட்டங்கள் எடுத்தது. இதையடுத்து களமிறங்கிய இந்திய அணிக்கு ரோஹித் ஷர்மா 2 சிக்சர்கள் அடிக்க இந்திய அணி வெற்றி பெற்றது. இதன் மூலம் 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை இந்திய அணி 3-0 என



கைப்பற்றியது. மேலும் நியூசிலாந்து மண்ணில் இந்திய அணி முதல் முறையாக T-20 தொடரை வென்று வரலாறு படைத்தது.

## அரையிறுதிக்கு முன்னேறிய இந்திய அணி!

**19 வயதுக்கு உட்பட்டோருக்கான உலக கோப்பை தொடரில் புதிய சாதனையுடன் அரையிறுதிக்கு முன்னேறியது இந்திய அணி!**

Potchefstroom, South Africaஇல் ஜனவரி 28ஆம் திகதி நடைபெற்ற முதல் காலிறுதி போட்டியில் ஏ பிரிவில் இருந்து இந்திய அணியும், பி பிரிவில் இருந்து அவுஸ்திரேலிய அணியும் மோதின. இதில் toss வென்ற அவுஸ்திரேலிய அணி முதலில் பந்து வீசுவதை தேர்வு செய்தது.

இந்திய அணி 50 ஓவரில் 9 விக்கெற்றுக்கு 233 ஓட்டங்கள் எடுத்தது.

இதையடுத்து களமிறங்கிய அவுஸ்திரேலிய அணி 43.3 ஓவரில் 159 ஓட்டங்களுடன் சகல விக்கெற்றுக்களையும் இழந்தது.

ஏழாவது முறை - இதன்மூலம் 19 வயதுக்கு உட்பட்டோருக்கான உலகக் கோப்பை தொடரில் இந்திய அணி



ஏழாவது முறையாக அரையிறுதிக்கு முன்னேறியது. முன்னதாக 2000, 2004, 2006, 2012, 2016, 2018 என ஆறு முறை இந்திய அணி அரையிறுதிக்கு தகுதி பெற்றது. அரையிறுதியில் ஆப்கானிஸ்தான் அல்லது பாகிஸ்தான் அணியை எதிர்கொள்ளும்.

## பொங்கல்...

41ஆம் பக்கத்தொடர்ச்சி

சினிமாப் பாடல்களுக்கு குழுவாக நடனமாடினர். QTSAஇன் முதல் நிகழ்வில் கலந்து நடனமாடிய சுமி இக்னாசியஸ் தமது குடும்ப சகிதம் ரொறொன்ரோவில் இருந்து வந்து கலந்து சிறப்பித்தார்.

கலைவிழா நிறைவு பெற்றவுடன் Datta Foodஇனால் வழங்கப்பட்ட சக்கரைப் பொங்கலும், அறுசுவைகளுடன் கூடிய சோறு, கறிகள், வடை, பாயாசத்துடன் வழங்கப்பட்டது. விழாவிற்கு வருகை தந்



தோர், சிறப்பாக வேற்றுஇன மக்கள் இவ் உணவை பலமுறை மீண்டும் மீண்டும் எடுத்துச் சுவைத்து உண்டது மகிழ்வாக இருந்தது. அத்துடன் விழாவிற்கு வருகை தந்தோர் ஓர் உணவுப் பொதியையும் வீட்டிற்கு எடுத்துச் செல்லத் தவறவில்லை.

பெரும் பனிப்பொழிவுக்கு மத்தியில் ரொறொன்ரோவில் இருந்து இவ் உணவை நேரம் தவறாமல் குயின்ஸ் பல்கலைக் கழக மண்டபத்திற்கு கொண்டு வந்து வழங்கிய Datta Food நிறுவனம் QTSA மாணவர்களதும் கிங்ஸ்ரன் வாழ் தமிழ் மக்களினதும் மதிப்பையும் பாராட்டையும் பெற்றுக்கொண்டது.

இரவு உணவிற்குப் பின்னர் மாணவர்கள் மற்றும் விழாவிற்கு வருகை தந்தோர் தமிழ் சினிமா பாடல்களுக்கு நடனமாடினர். அத்துடன் QTSA இன் 'பொங்கலோ பொங்கல்' விழா இரவு பத்து மணியளவில் நிறைவு பெற்றது.



# MORTGAGE SOLUTIONS

## SAVE UPTO 75% REFINANCE

## MONTHLY SAVING $2,409

| | | Before | After |
|---|---|---|---|
| Mortgage Payment | $320,000 @ 2.90% | $1,498.02 | - |
| Auto Loan | $21,000 @ 7.50% | $764.25 | $0.00 |
| Line of Credit - 1 | $16,000 @ 6.50% | $566.67 | $0.00 |
| Line of Credit -2 | $12,500 @ 7.00% | $447.92 | $0.00 |
| Credit Card -1 | $ 8,800 @12.00% | $352.00 | $0.00 |
| Credt Card - 2 | $ 5,200 @ 19.00% | $238.34 | $0.00 |
| Store Card | $ 3,000 @ 24.00% | $150.00 | $0.00 |
| New Mortgage | $386,500 @ 2.9% | | $1,605.00 |
| Total Debt | | $ 386,500.00 | $ 386,500.00 |
| Total Payment | | $4,014.20 | $1,524.55 |



KIRUBA THANABALASINGHAM
Mortgage Agent Lic# M12002440
info@mortgagesolutions.ca
www.MortgageSolutions.ca
Kapital Care Mortgage Inc. Lic#12623

## Prime + 1% Lower Rate

## $50,000 EQUITY LOAN

## GET APPROVED WITHIN 24 HOURS


## 416.298.2777

## $375 Mo.

# MARKHAM & STEELES - BLUE BUILDING

B105 - 3341 Markham Road, Toronto, ON M1X 0A5



BUYING OR SELLING
Indra Michael Xavier
Sales Representative
Direct : 647-995-6829
indra.m.xavier@gmail.com
HomeLife/Future
Realty Inc. Brokerage*
905-201-9977


we always care at . . .
Bridletowne Dental
Dr. Jeyapalan. BDS., DDS.
Dentist
416 492 3775
Bridletowne Dental
2555 Warden Avenue. Scarborough M1W 2H5
( close to Warden and Finch , in the TD BANK PLAZA)


வீடு வாங்க,விற்க,வாடகைக்கு பெற்றிட...
வைத்திய பரிசோதனையற்ற காப்புறுதிக்கும்...
Vany Jeganmohan
Realtor/Financial Advisor
416.670.7436
✓ Buy/Sell/ Lease
✓ Life Insurance
✓ Super Visa
✓ Non Medical
✓ RESP
VJS Financial Services
We ease your cost of living
5215 Finch Ave East. Unit 202 Toronto ON M1S 0C2


PLUS YOU
DRIVING SCHOOL
CERTIFIED ROAD SAFETY INSTRUCTOR
NOW HIRING
DRIVING INSTRUCTORS
Training will be provided
For more Info:
Balan 416.999.7727


வீடு வாடகைக்கு...
வாங்க...
விற்க...
Vasanta Raviendren
Cell: 416-716-1540
Life Insurance
Non Medical
Super Visa
RESP
Mega Financial Group
HomeLife/GTA Realty Inc. Brokerage*
5215 Finch Ave East. Unit 203 Toronto ON M1S 0C2


IT'S YOUR MOVE...
Let me help you make the right one.
Century 21
Titans Realty Inc.,
Brokerage.
Sudharshan
Broker
Direct: 416.567.6209
Residential / Commercial • Purchase • Sale • Investment • Leasing


வீடு வாங்க, விற்க, வாடகைக்கு
Ponnambalam Mahalingam
Sales Representative
Dir: 416.729.0955
arunponmahal@gmail.com
HomeLife/ Future Realty Inc. Brokerage*
7 Eastvale Dr., Suite 205 Markham ON L3S 4N8 Bus: 905.201.9977
INCOME TAX E' FILE 416-288-1548



B.J டெய்லரிங் அன் ஜுவலரி
TAILORING & JEWELLERY CLASSES
We provide training in
Jewellery making and Tailoring
தையல் பயிற்சி மற்றும் ஜுவலரி செய்யும் முறைகள்
கற்றுக் கொடுக்கப்படும்
தொடர்புகளுக்கு: 416-720-4472
email: jegathees2007@gmail.com


• Employment Law • Wrongful Dismissal
• Severance Packages • Human Rights
• Landlord and Tenant Law • Employment Standards
Aravinth Jegatheesan
Barrister and Solicitor
437.229.9643
email: aro@aravinthlaw.ca www.aravinthlaw.ca
ARAVINTH LAW 920 Yonge St, Suite 510 Toronto, ON, M4W 3C7


B.J TAXI SERVICE
NEED A RIDE?
SHORT TRIPS FROM $10
விமான நிலையம் சென்றுவர மற்றும் செல்ல
முதியோர் கோயில் மருத்துவ நிலையம்
கடைகள் சென்றுவர வாகன சேவை வழங்கப்படும்
RIDE FOR SENIORS, ODSP, WELFARE GROCERY SHOPPING & FOOD DELIVERY
FAMILY SHOPPING & PARTY PICK UP / DROP UPTEMPLES , DOCTOR APPOINMENTS
AIRPORT $45
PICK UP/ DROP UP
By Appointment Only
CALL:CHERAN 416-727-1484


Coaching • Yoga • Meditation • Healing • Astro Guidance
S&S EVOLVE
Varany Sivathasan
Life Coach • Healer
Yoga & Meditation Instructor
416.875.0553
info@ssevolve.com
Unit 8, 151 Nashdene Court, Scarborough,ON M1V 2T3


HOMES & CONDOS FOR SALE
Brock/Rossland - Whitby
$499,000
Gas Station
York St/Bremner St - Toronto
$749,900
Condo Apt - 2BR/1WR
Cambray Rd/North St - Kawartha
$369,900
Bungalow -2BR/1WR
1st & 2nd Mortgage available upto 1Million
A.ANTON JEEVA,FRI
Broker
Dir: 416.575.5055
anton.jeeva@gmail.com
www.getanton.com
RE/MAX
ROYAL PROPERTIES INC
Phone: (416) 321-0110


ATSEY
FINANCIAL GROUP LTD
MORTGAGE STRESS?
WORK WITH ALL MAJOR LENDERS
2nd and private financing available.
Call 416.333.9393
MORTGAGE ALLIANCE
PURCHASE • REFINANCE • INVESTMENT PROPERTIES